JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 11, 12.] {நவம்பர்மீ / டிசெம்பர்மீ} 1878. [புஸ்த. IX.

CONTENTS. — அட்டவணை.

CONTENTS		அட்டவணை	
Something about Afghanistan ...	241	ஆப்கனிஸ்தானம்	241
Falls of Niagara	248	நயகாரா என்னும் ஆகாசகங்கை...	248
The extent and power of England	251	அங்கிலேயருடைய ராஜ்ய விஸ்தீரணமும் சேனுபலமும்	251
A Pretty Girl—An anecdote	255	சின்னி என்னும் சிறுமி	255
Why the Earth Moves round the Sun	256	பூமி சூரியனைச்சுற்றி ஓடுவதேன்?	256
Old Deccan Days	260	தக்காணத்துப் பூர்வகதை........	260
The Silk worm	271	பட்டுப்பூச்சி	271
Madras Fair in the People's Park.	278	பீபில்ஸ் பார்க் தோட்டத்து வருஷோற்சவம்	278
The Child's Corner	281	சிறுவர்க்கான கதை (13)	281
News	291	சமாசாரம்	291

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

NOTICE.

☞ A series of interesting Tales from *"Old Deccan Days"* hitherto unknown to the Tamil country is now appearing in Janavinodini.

Also

A "CHILD'S CORNER"

HAS BEEN OPENED

Giving a new tale each month written expressly for Little Folks.

☞ We shall be thankful if our Readers will shew a few Numbers of *Janavinodini* to their relatives and friends in the country. We are anxious to have a larger circulation in the Tamil Districts.

இதுவரையில் நமது நாட்டில் வழங்காத

தக்காணத்துப் பூர்வகதை

என்னும்

விநோதமான புதிய கதைகள்

இப்பத்திரிகையின்

பிரதிமாசச் சஞ்சிகையில் சிற்சிலவாய்ப்

பிரசுரஞ்செய்யலாகும்.

இப்படியே

சிறுவர்க்கான கதை

என்று

சில நூதன கதைகள்

மாதம் ஒவ்வொன்றாகப் பிரசுரமாகிவருகின்றன.

☞ இந்த ஜநவிநோதிநியை வாசிக்கும் நாட்டுக்கையொப்பக்காரர்கள் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டிப் படிக்கச்செய்யும்படி வேண்டுகிறோம். நாட்டுக்கையொப்பக்காரர் அதிகரிப்பது இந்தப் பத்திரிகையின் பிரயோஜனமாக இருக்கும்.



ஆப்கன்தேசத்துக் SCENE IN AFGHANISTAN. காட்சி.



இந்துகோச THE HINDU KOOSH MOUNTAINS. பர்வதம்.

ஜநவிநோதிநி.

இல. 11, 12.] {நவம்பர்மீ டிசேம்பர்மீ} 1878. [புஸ்த. IX.

ஆப்கனிஸ்தானம்.

இப்போது வடமேற்கே நடக்கின்ற யுத்தத்தைப்பற்றி அனைவர் காதிலும் அடிபடுகிற ஆப்கனிஸ்தானம் அல்லது காபூல் என்று வழங்கும் கபிலதேசமானது ஆதிதொடங்கி அரேபியர்களுடைய ஜயத்திற்கும் இஸ்ரேல் ஜாதியாருடைய எழுச்சிக்கும் அரங்கமாயும், தார்த்தாரிதேசத்தார் படையெடுத்துப் பொல்லாங்கு செய்தவிடமாயும், மகம்மதியர்களுடைய பிடிவாதத்திற்கும் மதாபிமானத்திற்கும் இருப்பிடமாயும், ஷீயா சூனிஜாதியாருடைய கொடுமைகள் நடந்த காட்சிஸ்தானமாயும், ஆப்கன்ஜாதியார் பாரசீகர் இவர்களுடைய போர்க்களமாயும், அங்கிலேயர் வருத்தமும் வெற்றியுமடைந்த விடமாயுமிருப்பதனால் அத்தேசத்தின் வாலாற்றைக் கேட்க யாவருக்கும் விருப்பமாயிருக்குமென்று அதை ஒருவாறு சுருக்கிச்சொல்லுகிறோம். சிருஷ்டியிலேயே ஆப்கனிஸ்தானம் உலகத்திற்கெல்லாம் அதிசயமாய்க் காணத்தக்கதென்று கருதப்பட்டது போல அது, வெகு விசாலமான இவ்விந்துதேசத்திற்குமேல் அதிக உயரத்தில், வடகிழக்கிலும் கிழக்கிலும் அதைச் சூழ்ந்துகொண்டிருக்கிற ஹிந்துகோசம் சுலிமான் என்னும் மலைகளின் புஜத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. ஹிந்துகோசபர்வதமானது ஆப்கனிஸ்தானத்தின் வடகிழக்கே இவ்வாசியாகண்டம் முழுமைக்கும் ஒரு பெருங்குறிப்புபோல் நின்றுகொண்டு இந்துதேசத்தின்மேற் படையெடுத்துவருகிற பகைவர்களுக்கெல்லாம் இதுதான் வழியென்று காட்டுவதுபோலிருக்கின்றது. அந்தப் பெருமலைத் தொடரினின்றும் பல மலைவரிசைகள் பல திக்குகளிலும் பாவிக் கூடுமுடைந்ததுபோல ஆப்கனிஸ்தானமெங்கும் வியாபித்திருக்கின்றன. அம்மலைத் தொடர்களின்மத்தியில் சிலவிடங்களில் எக்காலத்திலும் நீர்வற்றாத நதிகள் பாய்ந்து மிகவும் செழிப்பான கணவாய்களிருக்கின்றன. இந்துதேசத்தின்மேற் படையெடுத்துவந்த பகை

வர்களெல்லாம் அவ்விடங்களிலேதாம் சேனைகளை ஆயத்தப்படுத்திக்கொண்டு யுத்தத்திற்குப் பிரவேசித்தது. பிறதேசங்களிலிருந்து வந்த பகைவர்மாத்திரமேயன்றி அத்தேசத்துமலைகளில் வசிக்கின்ற கைபரிகளும் இந்தியாவில் செம்மையாய்க் காக்கப்படாத தேசங்களைக் கொள்ளையடிக்கப் பலதடவை இந்தியாவுக்கும் ஆப்கனிஸ்தானத்திற்கும் எல்லையாயிருக்கின்ற மலையைக் கைபர் என்னும் கணவாயின்வழியாய்க் கடந்துவந்தார்கள். அம்மலையில் கணவாய்கள் அநேகம் இருந்தாலும் பிறதேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வரவும், இந்தியாவிலிருந்து வெளியே போகவும் தகுந்தவழி கைபரிக் கணவாய் ஒன்றுதான். அதின் நடுவே யாராவது அகப்பட்டுக்கொள்வார்களானால் இருதலைக் கொள்ளியின் நடுவிலுள்ள எறும்புத்தானைபோல் வருத்தப்படவேண்டுவதுதான். 1842ஆ-த்தில் அங்கிலேயருடைய சேனை அகப்பட்டுக்கொண்டு, அந்தத் துக்கச்செய்தியைப் போய்ச் சொல்லும்படியாக ஜலலபாத்துக்குத் தப்பித்துக்கொண்டுபோன ஒருவன்தவிர மற்றவர்களெல்லாரும் மாண்டுபோகும்படி, சின்னபின்னமாய் முறிபட்டது இதனருகிலேதான்.

இப்படி இந்துதேசத்தைக் கொள்ளையாடக் கருதிவருகிறவர்களுக்கெல்லாம் தங்குவதற்கு ஏற்ற இடமாயிருக்கின்ற ஆப்கனிஸ்தானம் இப்போது மிகவும் எளியதேசமாகக் காணப்பட்டாலும் முற்காலத்தில் சிறந்த நிலையிலிருந்ததென்று அக்காலத்திய சரித்திரங்களால் தெரியவருகின்றது. நன்றாய் நீர்வளம்பொருந்திய கணவாய்களில் அங்கங்கே முற்காலத்துச் சிறந்த கட்டடங்களின் குறிப்புகள் கொஞ்சங்கொஞ்சம் தென்படுவதும், அத்தேசம் பூர்வகாலத்தில் உயர்ந்தநிலையில் இருந்ததென்பதற்கு திருஷ்டாந்தமாயிருக்கின்றது. குஜினிபட்டணம்தொடங்கி மேற்கே சீஸ்தன்வரையில் ஹல்மந்து என்னும் நதியின் ஓரங்களெல்லாம் அழிந்துபோன அநேகம் சிறந்த பழைய பட்டணங்களும், வாய்க்கால்கள் வெட்டியிருந்த அடையாளங்களும், பயிர்த்தொழில் செய்துவந்த குறிகளும், 13-15-வது நூற்றாண்டுகளில் தார்த்தாரிதேசத்தாரான ஜெங்கிஸ்கான், தாமர்லேன் இவர்கள் படையெடுத்துவந்து செய்த பல பொல்லாங்குகளைக் குறித்துக்காட்டும் அநேகம் தோற்றங்களும் நாளைக்கும் நன்றாய்க் காணப்படுகின்றன. அத்தேசத்திற்கு இப்போது முற்காலத்துச் சாய்காலும் செல்வமும் வெகுவாய்க் குறைவுபட்டிருப்பதற்கு முக்கியகாரணம் சீர்திருந்திய செங்கோலின்மையே என்பதை அத்தேசத்து வரலாறு தெரிந்தவர்கள் நன்றாய்ச் சொல்லுவார்கள்.

ஆப்கனிஸ்தானத்து விளைவுகள் மிகவும் சிறந்தவை. பொன் வெள்ளி ஈயம் இரும்புமுதலிய லோகங்களும், உப்பு இந்துப்பு கல்லுப்பு முதலியவையுமாகிய தாதுவர்க்கங்கள் உற்பத்தியாகின்றன. விருக்ஷவகைகளோ மிகவும் பேர்போனவை. மேற்கு தே

சங்களிலும் கிழக்கு தேசங்களிலும் விளைகிற பலவிதமான மரங்களும் செடிகளும் கொடிளும் பழவகைகளும் எல்லாம் பொதுவாய் அங்கே உண்டாகின்றன. இந்தியாவில் விளைகிற பலவகைப் பயிர்களும், ஆசியாவிற்குப் பொதுவான வெள்ளரிஜாதியைச்சேர்ந்த பலவகைப் பழங்களும், கீழ்த்தேசங்களிற் சாதாரணமான எண்ணெய் எடுக்கிற விதைகள் புகையிலை பருத்தி சாயவேர்முதலியவும், இவைமாத்திரமேயன்றி, ஐரோப்பாவில் உற்பத்தியாகிற பலவகை மரங்களும் செடிகளும் பூக்களும் பழங்களுங்கூட அநேகமாய் உண்டாகின்றன. ரோஜா மல்லிகைமுதலிய பூக்கள் தற்செயலாகவே காடுகளில் விசேஷமாய்ப் பூக்கின்றன. அத்தேசத்து விருக்ஷவகைகளையெல்லாம் எடுத்துரைக்கப்புகின் உலகத்திலுள்ள மரஞ்செடிகொடிகள் எல்லாவற்றையுமே எடுத்துரைக்கும்படியாகும். இவ்விளைவுகளைக்கொண்டே அத்தேசத்து சீதோஷ்ணநிலை இப்படிப்பட்டதென்பதையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். ஆப்கனிஸ்தானம் பூமத்தியத்திற்கு வடக்கே சுமார் 2000 மயில் தூரத்திலிருந்தாலும், அதிக உயரத்திலிருப்பதனால் தேவையான உஷ்ணம் அதற்கு இலேசாய்க் கிடைக்கின்றது. ஒருபுறத்தில் எப்போதும் பனியால்மூடப்பட்ட இந்துகோசபர்வதமும், மற்றொருபுறத்தில் ஒரு பலனும் உண்டாகாத விஸ்தாரமான மணல்வெளியுமாயிருப்பதனாலும், பருவக்காற்றுகள் வெவ்வேறுவிதமாய் வீசுவதனாலும் அதன் சீதோஷ்ணநிலை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கின்றது. அங்கே வெயிற்காலத்தில் வெயிலும், குளிர்காலத்தில் குளிரும் மிகவும் அதிகம். அதனால் அத்தேசத்து ஜனங்கள் ஒருகாலத்தில் ஆட்டுத்தோல்களையும் முரட்டுக்கம்பளிகளையும் நன்றாய்ப் போர்த்துக்கொண்டு நெருப்பின் பக்கத்திலேயே படுப்பார்கள். மற்றொருகாலத்தில் மெல்லியவஸ்திரம் தரித்துக்கொண்டு வெளியே மரத்தின்கீழே போய்ப் படுப்பார்கள். குளிர்காலங்களில் கபிலம் காந்தாரம்முதலிய பட்டணங்களில் ஒரு வேலையும்செய்யக்கூடாதபடி பனி எங்கும் நன்றாய் மூடிக்கொள்ளும்.

பலவாறு சொல்லியென்ன? யாராவது ஒருவன் திடீரென்று ஆப்கன்தேசத்தில் கொண்டு விடப்படுவானானால் அவன், ஒரு புறத்தில் ஜனசஞ்சாரமேயில்லாத அளவற்ற விசாலமான மணல்வெளிகளையும், மற்றொருபுறத்தில் எக்காலத்திலும் ஓயாமற் பனிமூடிக்கொண்டிருக்கின்ற பர்வதங்களையும்கண்டு திகைத்துநிற்பான். பயிர் செய்யப்பட்டிருக்கிற விடங்களிலேகூட இங்கும் அங்கும் அநேகம் குன்றுகளும், வேலிவாய்க்கால் மரஞ்செடி ஒன்றுமில்லாமல், மனிதர் சஞ்சரிக்க நல்ல பாதையுமின்றிக் காம்புநிலங்கள் அநேகம் அவனுக்குத் தோற்றும். இடையிடையே ஒவ்வொரு பட்டணமும் அருமையாய்க் காணப்படும். அதன் மத்தியில் சாதாரணமாய் நமது தேசங்களில் காணப்படுகிறபடி பிரயாணிகள் சுலபமாய்ப்

போய்த் தங்க சத்திரம் சாவடி ஒன்றும் அகப்படாது. ஆயினும் ஒவ்வொரு இடங்களில் மிகவும் செழிப்பாய்ப் பலவகைப் பண்டங்களும் நிறைந்து நல்ல குடிவளமுள்ள தாக்குகள் இருக்கக் கண்டு களிக்கும்படியாகும். அத்தேசத்து ஜனங்கள் ஆட்டுமந்தைகளை ஓட்டிக்கொண்டு அங்கங்கே திட்டுத்திட்டாய்க் கூடாரம் அடித்துக்கொண்டு தங்கியிருக்கக் காணப்படுவார்கள். அவர்களுடைய உயர்ந்த பயங்கரமான வடிவமும், கறுத்தமுகமும், நீண்டதாடியும், விகாரமான தோலுடுப்பும்பார்க்க வெகு புதுமையாயிருக்கும். அவர்களோடு கூடிப்பார்த்தால் அவர்களுள் நல்ல அரசாட்சிக்கு அங்கமான நியாயவிசாரணைச்சபை கிடையாதென்பதைக் கண்டறியலாம். இவ்வளவு ஒழுங்கற்ற ராஜ்யத்திலே இந்த ஜனங்கள் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறார்களோவென்று தோன்றும். மிகவும் அசௌக்கியமான நிலைமையிலேயே பழகிக் கள்ளம் கவடு சூது புரட்டு கொள்ளைமுதலான தீயவழியிலேயே இவர்கள் காலங்கழிக்கும்படியாக விதிக்கப்பட்டிருக்கிறார்களேயென்று அவர்களிடத்தில் பரிதாபமுமுண்டாகும். இத்தோடுகூட அவர்களிடத்தில் பெருந்தன்மையையும் உதாரகுணத்தையும் தைரியத்தையும் படாடோப மின்மையையும் காணச் சந்தோஷமுமுண்டாகும். இவ்வளவோடுகூட யாராவது ஒருவன் புதிதாய்த் தங்கள்வீட்டுக்கு வருவானானால் அவன் தங்கள் அதீனத்தில் இருக்குமளவும் அவனை அதிக பக்ஷமாய் வைத்து அவர்கள் ஆதரிப்பார்களென்பது யாவரும் கேட்டு மிகவும் ஆநந்திக்கத்தக்கவிஷயமே.

இப்படி உலகத்தார்க்கெல்லாம் ஓர் அதிசயக்காட்சி அளிக்கத் தக்கதான தேசமானது பல ஜாதியார்க்கும் வாசஸ்தானமாயிருந்தாலும், அவர்களுடைய பெயரெல்லாம் இவையென்று தெரியாமல் ஆப்கன்ஜாதியாருடைய பெயரைமாத்திரம்கொண்டு ஆப்கனிஸ்தானமென்று பெயர்பெற்றிருக்கின்றது. இவர்கள் எங்கிருந்து வந்தவர்களோ அதுமட்டும் இன்னும் தெரியவில்லை. யூதர்களிற் சேர்ந்தவர்களென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆப்கன்தேசத்தார் நடை உடை பாவனைகளிலும் ஆளுகையிலும் அநேகமாய் வேறுபட்ட பல வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலின் அவர்களுடைய சுபாவம் இத்தன்மையதென்று பொதுவாய்ச் சொல்லக்கூடாமையாயிருக்கின்றது.

இவன் அரசனென்றும், இவர்கள் அவன் கீழ்க்குடிகளென்றும் இணைந்து சீராய் அத்தேசத்தில் அரசாட்சி நடந்தநாள் ஒருபோதுமில்லை. ஒவ்வொரு கூட்டத்துள் ஒவ்வொருவன் தலைவனாய்த்தோன்றித் தன் சக்திக்கு இயன்றமட்டும் வேண்டிய குடிகளைச் சேர்த்துக்கொள்கிறான். அத்தேசத்துக்குடிகளுக்குச் சாதாரணமாய்த் தேசாபிமானமென்பதே கிடையாது. இப்போது ஆப்கனிஸ்தானம்முழுதும் காபூல்அரசனுடைய ஆளுகைக்கு உட்பட்

டிருக்கிறதென்று பெயர். நன்றாய்ப்பார்க்குமிடத்தில் ஹஜாராவைச்
சேர்ந்த ஜனங்கள் அந்த அரசனுடைய ஆளுகைக்கு அடங்கியிருக்க
வேயில்லை. யாராவது பிறதேசத்தார் போராடவருவார்களாகில்,
அந்த ஜனங்கள் இதுதான் தருணமென்று தங்கள் தங்கள் தலைவ
னோடு கூடிக்கொண்டு தங்கள் அரசனுக்குத் துணைசெய்கிறவர்
கள்போல் நாலாமூலையிலும் கொள்ளையிடப்புகுவார்கள்.

ஆப்கன் ஜனங்களாகட்டும் பெலூசிகளாகட்டும் சூதும் வா
தும் கெட்டநடத்தையுமுடையவர்களாய்க் குணத்தில் கெட்டவர்
களாக இருந்தாலும், உருவத்தில்மட்டும் பார்க்க வெகு அழகாய்
உயர்ந்திருப்பார்கள். அவர்களுக்குத் தேகவலிமையும் சுறுசுறுப்பும்
அதிகம். அத்தேசத்து ஸ்திரீகளுடைய முகமும் மேனியும் வெகு
அழகு. அத்தேசத்தார் அநேகமாய் வேட்டையாடுகிறவர்கள். வே
ட்டையாடுவதும் பண்டங்களை யோரிடத்திலிருந்து மற்றோரிடத்
திற்குக் கொண்டுபோய்விற்பதுமே அவர்களுடைய முக்கியமான
வியாபாரம். தொழில்செய்வதிலும் குதிரைகளைப் பழக்கி நடத்து
வதிலும் அவர்களை அதிகரித்தவர் ஒருவருமில்லை. சதுரங்கம் முத
லிய காய்கள் ஆடுவது அவர்களுடைய விநோத விளையாட்டுகளுள்
ஒன்று. ஆயினும் பொய்சொல்வதிலும் அரேபியன் நைட்ஸ் என்
னும் கதையைப்போன்ற பொய்க்கதைகளைக் கேட்பதிலுமே அவர்
களுக்கு விருப்பம் அதிகம். அவர்களிடத்தில் உயர்ந்த குதிரை
கள் அநேகமிருக்கின்றன. அந்தக் குதிரைகளுக்கு லாடம் அடி
யாமலே காடோ மலையோ தாங்கள் போகிறவிடமெல்லாம் வெகு
நன்றாய் நடத்திக்கொண்டு போகிறார்கள். பாரசீகதேசத்தரசனான
நாடர்ஷா என்பவன் படையெடுத்துவந்தபோது அவன், தான் அத்
தேசத்தை ஜயித்ததற்கு அடையாளமாக, தங்கள் பெரியோர்களுக்
குக் கொடுத்தவைதாம் அந்தக் குதிரைகளென்று அவர்கள் சொல்லு
கிறார்கள்.

இப்போது ஆப்கன்தேசத்துப் பிரதானபட்டணமான கபிலநக
ரத்திலிருந்துகொண்டு அமீர் என்னும் பட்டப்பெயருள்ள ஒரு ஜாதி
யரசர் அத்தேசமுழுமையும் அரசாண்டுவருகிறார். காந்தாரம் ஹீரா
த் முதலிய மாகாணங்களுக்குத் தலைவர்களும் அந்த ராஜவமிசத்தா
ரிலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சில விஷயங்களில் ராஜாவே
சில்லறை அதிகாரிகளை நியமிக்கலாம். சில விஷயங்களில் பலபேர்
கூடி நியமிப்பார்கள். அத்தேசத்து நம்பாடிகள் கபிலதேசத்தரசனுக்
குக் கீழ்ப்படிந்தவர்களாயிருந்தாலும், தேசம் அமெரிக்கையா
யிருக்கும்காலத்தில் சுதந்திரமாயே இருப்பார்கள். ராஜாங்கத்
தைச்சேர்ந்த ஒரு பெரியகாரியமாயிருந்தாலொழிய மற்றச் சர்ச்
சரவுகளெல்லாம் அந்தந்தத் தலைவராலேயே தீர்க்கப்படும். அந்தத்
தலைவர்கள் சாதாரணமான சில்லறை வியவஹாரங்களையெல்லாம்
தாடிநரைத்த பெரியோர்களை வைத்துக்கொண்டு தீர்த்துவிடுவார்

கள். அத்தேசத்தில் தீர்வை அந்தந்த மாகாணத்தலைவர்களால் வாங்கப்படுகின்றது. அந்தந்த மாகாணத்துத் தீர்வையை அதிக தொகைக்குக் கேட்பவனுக்குக் குத்தகையாகக் கொடுத்துவிடுவார்கள். ராஜாங்கத்துச் செலவுபோக மிகுந்துவந்த பணம் அரசனுடைய பொக்கிஷத்தைச்சேர்ந்து ராஜவம்சத்தாருடைய சொந்தச்செலவுக்கு உபயோகப்படும். அங்கே வரிவாங்குவது மிகவும் வருத்தம். அதிலும் மலைஜனங்களிடத்தில் வரி வசூல்செய்வதென்றால் உயிரைக்கொடுத்து மல்லாடவேண்டியதாகுமேயொழிய இலேசாய் முடிவதில்லை.

இராணுவக்கூட்டம் மிகவும் அதிகமானது. கையிருப்புச் சேனையும் விசேஷமாயுண்டு. குடிகளும் இராணுவப்பயிற்சி செய்யும்படியான ஏற்பாடிருக்கிறது. சில ஜாதியாருள் எவனும் இராணுவத்தொழில் பழகலாம். மற்றவர்களுள் ஒவ்வொரு வருக்கு ஒவ்வொரு காலாளாவது இரண்டு வருக்கு ஒரு குதிரை வீரனாவது அனுப்பப்படவேண்டும்; இராணுவம்பயின்ற குடிகளுக்குச் சாதாரணகாலங்களில் கூலிகிடையாது. ஆயினும் சில விஷயங்களில் குதிரைசெத்ததுமுதலான நஷ்டம்நேரிடுமானால் அதற்குமட்டும் உதவி கிடைக்கும். நிலையாயிருக்கின்ற சேனைகளுள் அங்கிலேயருடைய மாதிரியாகவே நன்றாய்ப் பழகித்தேர்ந்த பதினேழு பதினெட்டு பட்டாளம் காலாள்களும், ஒருவாறு அங்கிலேயப் படையையொத்த நாலைந்து குதிரைப்பட்டாளமும், அநேகமாய்ப் பித்தளையினாலேயே செய்த நூறு பீரங்கிகளடங்கிய பீரங்கிப்பட்டாளமுமுண்டு.

அரேபியர் தார்த்தாரியர் முதலிய பல ஜாதியாரோடு அநேகந்தடவை போராடிக்கொண்டிருந்ததுமன்றியில், அங்கிலேயரோடுங் கொஞ்சகாலம் போராடிக் கடைசியில் எல்லாக்கலகமும் அடங்கி இதுவரையில் ஆப்கனிஸ்தானம் சுதேசராஜாவின் ஆளுகையிலேயே இருந்தது. 1840-43-ம் வருஷங்களில் சுயமாயே இந்திய துரைத்தனத்தாருடன் நேராய்ப்போராடின டோஸ்டு மஹமத்கான் என்பவர் அவ்வளவோடுமாத்திரமேயிராமல் மறுபடி சீக்ஜாதியாரோடு சேர்ந்துகொண்டு போராடிக் கடைசியில் இந்தியதுரைத்தனத்தார்க்கு அதீனப்பட்டு அவர்கள் கொடுத்த சம்பளத்தால் ஆயுள்வரையில் ஜீவித்துக்கொண்டிருந்து 1863-ம் வருஷத்தில் இறந்துபோனார். மூத்தகுமாரன் பட்டத்துக்கு அதிகாரியாய்க் காத்திருக்க, இத்தேசங்களெங்கும் சாதாரணமாய் நடந்துவருகிற வழக்கத்திற்கு விரோதமாய், தனக்கு மிகவும் இஷ்டனான ஷியர் ஆலியென்னும் மூன்றாவது குமாரனே பட்டத்துக்கு உரியனென்று தன் ஜீவகாலத்திலேயே டோஸ்டு மஹமத்கான் நியமித்துவைத்தார். யார் யார் பிற்காலத்தில் தன்னை எதிர்ப்பார்களென்று நினைத்தாரோ, அப்படிப்பட்டவர்களையெல்லாம் கொலைசெய்துபோட்டார்.

ஆயினும் தான் வேண்டுமென்று விருப்பத்துடன் பட்டத்துக்கு உரியனாய் நியமித்துவைத்த ஷியர் ஆலியை எதிர்க்கும்படியாகப் பதினாறு பிள்ளைகளையும் வைத்துவிட்டுப்போயினர். தகப்பனிறந்தவுடன் ஷியர் ஆலி சிங்காசனபாத்தியதை தனக்கேயென்றுசொல்ல மூத்தவர் இருவரும் அவனை எதிர்த்தார்கள். மற்றக் குமாரர்கள் எந்தக்கக்ஷியில் ஜயமுண்டாகுமென்று தோன்றிற்றோ அதைச் சேர்ந்தார்கள். இப்படியாக உள்நாட்டுக்கலசம் உண்டாயிற்று. ஆயினும் ஹீராத் கவர்னராகிய யாகூப்கான் என்னும் தன் இரண்டாம்குமாரனுடைய தைரியத்தாலும் சாமர்த்தியத்தாலும் ஷியர் ஆலி சிங்காதனம்பெற்று ஐந்துவருஷகாலம் சுகமாய் ராஜ்யத்தை ஆண்டார். ஆப்கன்தேசத்தார்க்கு நன்றியறிதலென்பது அருமையாயிற்றே! ஷியர் ஆலி தன் தகப்பனுடைய வழியையே தானும் அனுசரித்து, நியாயமாய்ப் பட்டத்துக்கு உரியனான மூத்த குமாரனையும் விட்டுத் தனக்குப் பேருதவிசெய்து தன்னைச் சிங்காசனமேற்றிய இரண்டாங்குமாரனையும் விட்டுத் தன் பிரியநாயகியான ஒருத்தியினிடத்திற்பிறந்த அப்துலா என்னும் மூன்றாவது குமாரனே பட்டத்துக்குரியனென்று ஏற்படுத்தினர். ஆயினும் யாகூப் என்னும் இரண்டாங்குமாரன் அதிக செல்வாக்கும் சாமர்த்தியமும் உடையவனும் குடிகளால் விரும்பப்பட்டவனுமாயிருந்ததனால் அவன் தம் காலத்திற்குப்பிறகு தம் மூன்றாங்குமாரனைச் சிங்காசனத்தில் நிலைக்கவொட்டமாட்டானென்றுகருதி, தமக்குக் கொஞ்சம் அடியூன்றினவுடனே கொஞ்சங்கொஞ்சமாய்த் தந்திரமாயே யாகூப்கானுக்குச் சதிசெய்ய நினைத்தார். இது செய்திதெரிந்து யாகூப் ஷியர் ஆலியோடு கலகஞ்செய்யத்தொடங்க, அக்காலத்தில் இந்தியா கவர்னர் ஜனரலாயிருந்த லார்டு மேயோ என்பவர் அதை அப்படியே ஒருவாறு தக்கைபோட்டு 1871-ம் வூத்தில் யாகூப்கானை ஹீராத் கவர்னராக ஸ்தாபித்தார். இவ்வளவுசெய்தும் அந்தக் கலகம் அடங்கவில்லை. ஷியர் ஆலி ஏதோ ஒரு சாக்கிட்டு யாகூப்பைக் காபூலுக்கு அழைப்பித்துச் சிறைசெய்தார். அவர் யாகூப்பை அப்படியே கொன்றுபோட்டாலும் அவர் மூன்றாங்குமாரனுக்குச் சுகமில்லை, கொல்லாவிட்டாலுமில்லை. கொன்றால் யாகூப்பின் பக்ஷத்தில் சேர்ந்திருப்பவர்களெல்லாரும் உடனே கலகம்செய்வார்கள். கொல்லாவிட்டால்தான் கேட்கவேண்டுவதேயில்லை. இத்தோடுகூடப் பகாராவில் ருஷியர்களுடைய உதவியைப் பெற்றுக்கொண்டு ஷியர் ஆலியின் மூத்தசகோதாருடைய மகன் ஒருவன் காத்திருக்கிறான். இப்படியெல்லாமிருக்க ஷியர் ஆலியின் அருமைக்குமாரர் திடீரென்று சிலநாளைக்குமுன்னே இறந்துபோயினர். நாமொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்பதற்குத் திருஷ்டாந்தம் இதைவிட வேறு வேண்டுமோ? அத்தேசத்தில் உள்நாட்டுக்கலகம் சுலபத்தில் ஒய்

கிறதாய்த் தோன்றவில்லை. சிங்காசனத்துக்கு உரியவன் இன்னு னென்று ஒருவிதி ஏற்பட்டாலன்றி இந்தக் கலகம் நீங்காது.

இப்படியிருக்க இப்போது பிறதேசத்தாரான அங்கிலேயரோடு போராட்டமுண்டாயிருக்கிறது. அங்கிலேயர் ஆப்கனிதேசத்தா ரோடு போராடக்கருதுவதற்கு முதற்காரணம் என்னவெனில், பூமி பூமியென்று பூமிப்பைத்தியம் பிடித்து அலைகிற ருஷியர்கள் இந்தியாவின்மேற் படையெடுத்துவர இதொரு நடு எல்லையா யிருப்பதால், அவர்களுக்கு இடங்கொடுக்கவொட்டாமல், ஒரு வர்க்கும் அடங்காத ஆப்கனிதேசத்து ஜனங்களையும் வசப்படுத்தி அத்தேசத்தரசனையும் தமக்கு நேசராக்கிக்கொள்ளவேண்டுமென் பதே. சிலநாளைக்குமுன் அவ்விடத்தில் ருஷியர் வந்துசேர்ந்து ஏதோ கலகஞ்செய்வதாய்த் தெரிந்து அதற்கு ஒருவழி யேற்படுத் தும்படியாக அமீரிடத்துக்கு இந்தியதுரைத்தனத்தார் பத்திரிகை யனுப்பினார்கள், அதற்கும் அவர் பதிலெழுதவில்லை; பிறகு தூத னுப்பினார்கள், அதையும் அவமதித்தார். ஆதலின் இப்போது அவர்களோடு போராடும்படியாயிற்று. இப்போது இந்த யுத் தத்தின் நிலையைப்பார்த்தால், ஆப்கனிஸ்தானமும் அங்கிலேய ருடைய காணியாட்சிகளுள் ஒன்றென்றும், இந்துதேசத்திற்கு மேலண்டை மதிற்சுவராத்தாங்கும் அகழியென்றும் சொல்லும் படியாகுமெனத் தோன்றுகின்றது. இந்த யுத்தத்தின் வரலாற் றைச் சமாசாரத்தில் விவரமாய்க் காணலாம். ஆப்கனிஸ்தானத்தின் கட்டடம் குடிமுதலியவற்றின் காட்சியும், இமயமலைக்கு இரண் டாவதாய் அத்தேசத்துக்கு வடக்கே நின்றுகொண்டு இதுதான் இந்தியாவுக்கு வழியென்று காட்டுகிற இந்துகோச மலையின் காட் சியும் வெகு விநோதமாயிருக்குமென்று அப்படங்களை இச்சஞ்சி கையுடன் சேர்த்திருக்கிறோம்.

நயகாரா என்னும் ஆகாசகங்கை.

வெகுகாலமாய்த் தேசமெங்கும் பிரசித்திபெற்றிராநின்ற நயகாரா என்னும் சிறந்ததோர் ஆகாயகங்கையின் பெருமையை முழுதும் வர்ணித்துரைப்பது மிகவும் அசாத்தியம். அவ்விடத்திற்கு யாத்திரை போய்வந்தவர் ஒருவர் அவ்விடத்தில் தாம் கண்ட காட்சி யை எழுதிவைத்திருக்கிறார். அதை ஒருவாறு அடியில் சுருக்க மாய்ச் சொல்லுகிறோம்.

அமெரிக்காதேசத்தில் பெரியபட்டணமும் எவ்விதப்பெருமை யிலும் லண்டன்பட்டணத்திற்கு இரண்டாவதுமான நியூயார்க் என்னும் நகரத்திற்குச் சுமார் 448 மைல் தூரத்தில் நயகாரா ஆகாச

கங்கை விழுகின்றது. ஒருநாள் பகல் ஒருமணிக்கு நான் அவ்வாகாசகங்கையண்டைபோய்ச் சேர்ந்தேன். அமெரிக்காதேசத்து ஆகாசகங்கைகளுள் நான் முதல் முதல் கண்டது இதுதான். அந்த கங்கையின் இருபுறங்களிலும் அநேகம் சிறந்த அன்னசத்திரங்கள் இருக்கக்கண்டேன். அங்கிருந்து ஓடுகின்ற நயகாராநதியானது 30 மைல் நீளமுள்ளதாய் எரி என்னும் ஏரிமுதல் அந்தாரியோ என்னும் ஏரிவரையில் பரவியிருக்கின்றது. தண்ணீர் ஆகாசத்திலிருந்து விழுமிடத்திற்குக் கொஞ்சதூரம் அப்பால் அந்த நதி மிகவும் அபாயம் விளைக்கத்தக்க வேகத்தோடு ஓடிக்கொண்டிருந்தாலும், அதை அவ்விடத்திலேயே தாண்டவேண்டுமென்று மனவெழுச்சி தரும்படிப் பார்வைக்கு அவ்வளவு சாந்தமாகப் பெருகுவதாய்த் தோன்றுகிறது. பார்வைக்குமட்டும் சாதாரணமான நமது தேசத்து ஆறுகள்போலவே காணப்படுகிறது. நயகாராவின் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்குமுன்னமே ஒருவன் அதன் சமீபக்காட்சியினாலும், தண்ணீர் வேகமாய் வீழ்வதால் உண்டாகும் பேரிரைச்சலைக் கேட்பதாலுமே பிரமித்துப்போவான். அந்த கங்கையில் ஒருமணிநேரத்தில் 10,00,00,000 டன் அளவுள்ள நீர்வீழ்வதென்றால் அதன்வேகமும் இரைச்சலும் எத்தன்மையதாயிருக்குமோ! அந்த நதி விழத்தொடங்குமிடத்தில் கரையோரமாய்ப் போய்நின்று பார்ப்போமானால் நீர்வீழ்வது வெகு நன்றாய்த் தெரியும். அங்கிருந்து கீழே குனிந்துபார்த்தால், நுரையும், எக்காலத்திலும் ஓயாமல் இரவும்பகலும் உண்டாகி ஆகாசத்தில் கிளம்பும் நீராவியும்தவிர மற்றொன்றும் தோன்றாது. அந்த ஆகாசகங்கை வீழ்வதைப்பார்ப்பவனுக்கு உலகத்திலுள்ள அதிசயக்காட்சிகளுள் எதுவும் இதற்கு ஈடன்றெனத்தோன்றும்; அதன் அற்புதத்தைக்கண்டு இன்னதென்று சொல்ல நாவெழாமல் மனது பிரமித்துப்போம். இப்படி அனைவர்க்கும் விநோதக்காட்சி அளிக்கின்ற ஆகாசகங்கையின் வீழ்ச்சியை அதன் அருகிலிருந்த ஒரு சிங்காரத்தோட்டத்தினின்றும் நன்றாய்ப் பார்த்துவிட்டு அங்கிருந்து வெகு லகுவாய்க் கீழிறங்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற விநோதயந்திரத்தினால் ஓட்டப்பட்ட ஒருவகைப் படிநாற்காலியில் ஏறிக்கொண்டு, 550 அடிக்கு அதிகமாகவே கீழிறங்கி, நயகாரா நதிக்குச் சமமான தரைமட்டத்தில் நீர்வீழ்ச்சிக்கு எதிரேபோய்ச் சேர்ந்தேன். அப்போது பனி குளிர் ஒன்றுமில்லாமல் அந்தக் காலம் யாத்திரைக்கு மிகவும் ஏற்றதாயிருந்தாலும், எனக்கு அவகாசம் அதிகமாயில்லாமற்போனதனால், அந்த ஆகாசகங்கையின் மறுபுறத்தைப்போய்ப் பார்க்கத் தருணம் வாய்க்காமற்போயிற்று. நான் அங்கே போய்நின்ற கொஞ்சநேரத்தில் நீர்த்திவலைகள் தெறித்து என் உடுப்பெல்லாம் ஈரமாய்விட்டது. அவ்விடத்தில் ஒரு சிறுபடகில் ஏறிக்கொண்டு நான் அந்நதியைக் கடந்தேன். நீரோட்டத்தில்

நீர் மிகவும் தெளிவாயிருந்தது. அவ்வாற்றைக் கடக்கும்போது என் மனதில் தற்செயலாய் ஒரு உற்சாகமும் களிப்பும் உண்டாயிற்று. ஆயினும் நான் தாண்டினவிடத்தில் அந்த நதி மிகவும் சாந்தமாயிருக்க, அங்கிருந்து சுமார் இரண்டுமைல்தூரத்தில் அதிக வேகமான நீரோட்டமும் பல நீர்ச்சுழிகளுமாய் நதி மிக்க பயங்கரமாயிருக்கின்றதென்பதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமாயிற்று. அந்த நதியின் எதிர்ப்புறம் பிரிடிஷ் அமெரிக்காவைச்சேர்ந்தது. அது முழுதும் மலைப்பாங்கான இடமாயிருந்தது. அவ்விடத்தில் மற்றொரு நீர்வீழ்ச்சியைக்கண்டு அதின் அடிப்புறத்திலிறங்கி மேலே நிமிர்ந்து நீர்விழுவதைப் பார்க்கும்போது எனக்கு உண்டான வியப்பையும் திகிலையும் நான் என்னென்று சொல்வேன்! நயகாரா நீர்வீழ்ச்சியை இரண்டாகப் பிரித்துக்கொண்டு அதின் மத்தியில் ஒரு சிறிய கல்தீவும் அந்தத் தீவுக்குப்போக ஒரு பாலமும் இருக்கின்றன. அந்தப் பாலம் அந்தத் தீவுக்கு ஒரேபுறத்தில்மட்டும் இருப்பதனால், கொஞ்சம் தூரத்திலிருந்துபார்த்தால் பாதித்தீவு தண்ணீரில் மூழ்கியிருப்பதுபோலத் தோன்றுகின்றது. அந்தப் பாலத்தின்மேல் நின்றுபார்த்தால், அந்நீர்வீழ்ச்சியின் அடிப்புறமும், 200 அடி உயரத்திலிருந்து வேகமாய் நீர் விழும் அதிசயமும் நன்றாய்த்தெரியும். அங்கே தோன்றுகின்ற அற்புதக்காட்சியை முழுதும் எடுத்துரைக்க ஒருவராலும் ஆகாது. அங்கே சுற்றி நாற்புறமும் தோன்றுகிற விநோதத்தோற்றங்களை ஒருவன் மனதில் நினைக்கநினைக்க, இந்த சிருஷ்டியில் அமைந்திருக்கும் அற்புதங்களுக்கு அளவில்லையென்றும், இப்படி அளவிலா மகிழ்ச்சிதரும் ஆநந்தக்காட்சியுள்ள இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த பேருளாளனுடைய பெருமையும் திறமையும் ஞானமும் நமது வாய் மனங்களுக்கு எட்டாதவைகளென்றும் நன்றாய்த் தோன்றும். இவ்விதமாகக் கடவுளால் இவ்வுலகத்தில் அமைக்கப்பட்ட பலவித விநோதக்காட்சிகளையும் நேராய்க்கண்டவர்கள் அநுபவிக்கும் ஆநந்தம் எத்தன்மையதாயிருக்குமோ?

பத்து ஏட்டில் கவிவர்ணித்ததை ஒரேட்டில் விளக்கிக்காட்டுவது எது?—சித்திரம்.

கடையில் நின்றுபோனது எது?—என் பள்ளியறை விளக்கு.

திருப்பிக்கொடாத சபையார் யார்?—மழைக்குவாங்கிப்போன குடையைத் திருப்பிக்கொடாதவர்கள்.

ஓயாமல் ஓடிக்கொண்டிருப்பது எது?—காலசக்கிரம்.

ஞானத்தை வெறுப்பவர் எவர்?—மூடர்.

இந்நாட்டார் மறந்திருப்பவை எவை?—சிற்ப-சித்திர-கீத வாத்தியங்கள்.

சூனியமான பொக்கசத்தில் மிகுதிப்பணம் நிற்பதெப்படி?—புதுவரிபோடுவதனால்.

அங்கிலேயருடைய ராஜ்யவிஸ்தீரணமும் சேனுபலமும்.

அங்கிலேயர் முன்ஜாக்கிரதையுள்ளவர்கள் என்பதை மற்றக் காரியங்களில்விடப் போர்முயற்சியில் நன்ருய்க் காணலாம். யுத்தம் எவ்வளவு சீக்கிரத்தில் நேரிடுவதாஞலும் அதை நடத்தும்படியான பிரயத்தனங்களை முந்தியே சித்தப்படுத்தித் தக்க அரண்கள் பலவற்றையும் அமைத்துவைத்திருப்பதினுலேயே அவர்கள் முன்யோசனையுள்ளவர்களென்று விளங்குகிறதன்ருே? அவர்களுடைய ஆட்சியிலுள்ள நாடுகளும் கப்பல்துறைகளும் ஒன்றுக்கொன்று கிட்டியிருப்பனவாக உலகமெங்கும் நாற்றிசையிலும் பரவியிருப்பதால், பூமண்டலத்திலுள்ள எந்த வர்த்தகஸ்தானங்களிலும் அவர்களுடைய சண்டைக்கப்பல் வேண்டியபோது எளிதில் போய்ச் சேரக்கூடும். ஆதலின் யுத்தம் எவ்வளவு துரிதமாய் நேரிட்டாலும் அவர்கள் அதற்குச் சித்தமாயில்லையென்று குற்றங்கூற இடமில்லை.

அதோ மெடிடெர்ரேனியன் என்கிற பூமத்திய சமுத்திரமிருக்கிறதே; அது வர்த்தக வாணிபங்கள் சீரோங்கி வளர்வதற்குத் தாயிடமாய் விளங்குகின்றது. இது பூர்வகாலத்திலேயே வர்த்தகத்துக்குச் சிறந்தவிடமாயிருந்தது. அப்போது பினீசியர் என்னும் வர்த்தகர்கள் இந்தக் கடலின்வழியாகத்தான் ஹெர்க்குலிஸ் என்னும் சுத்தவீரன் திறந்துவிட்ட ஜிப்ரால்டர் என்கிற ஜலசந்தியின் மார்க்கமாய் வெளிப்பட்டுத் தொலைதூரத்திலிருந்த பிரிட்டன் என்னும் தீபாந்தரத்தைச் சேர்ந்து அங்கே துணிகட்டவுந்தெரியாமல் திரிந்துகொண்டிருந்த சீர்திருத்தமற்ற ஜனங்களிருக்கக் கண்டார்கள். இந்தக் கடலின் காணியாட்சியைக் கைப்பற்றவேண்டுமென்று ரோமநகரத்தாரும் கார்த்தேஜநகரத்தாரும் மார்கொடுத்து மல்லாடின அக்காலத்திலேயே இது வர்த்தகம் வளர்ந்தோங்கிய பொழியாயிருந்தது. இக்காலத்திலேயோ அந்தப் பிரிட்டன் ராஜ்யத்தாரே, கனடா என்னும் தங்கள் சொந்ததேசத்திலுள்ள பெரியதொரு தடாகத்தைச் சுயேச்சையாய்க் கையாளுவதுபோலவே, இந்தப் பூமத்திய சமுத்திரத்தையும் வெகு சுதந்தரமாய்க் கையாண்டுவருகிருர்கள்.

இப்படி அங்கிலேயருக்கு அதீனமான பிரதேசங்கள் பலவாயிருப்பதுமாத்திரமா, அல்லது அவை ஒழுங்குபட நாற்புறத்திலும் அமைந்திருப்பதுமாத்திரமா ஒரு ஆச்சரியம்! அந்தந்த இடங்கள் அமைந்திருக்கிற அமைப்பும் பாசறைச்சிறப்பும் விசேஷமாக ஆச்சரியப்படத்தக்கவைகள். பூவுலகில் எந்தக் கடல் அல்லது எந்தக் குடா வர்த்தகமியற்றச் சிறப்பாயிருக்கிற

தோ அங்கெல்லாம் அங்கிலேயருடைய துர்க்கஸ்தானங்களைக் காணலாம். பூகண்டங்கள் தென்முகமாய்ச் சுருங்கிச்செல்லுகிற முனைகளில் எங்கெங்கே பல தேசத்து வாணிபங்கள் வட்டமிட்டு வரவேண்டியிருக்கின்றனவோ அங்கெல்லாம் அங்கிலேயரும் நிலை பெற்றிருப்பதைப் பார்க்கலாம். அங்கே நாட்டியிருக்கிற அவர்களுடைய ஸெண்டு ஜார்ஜி என்னும் குறுக்குக்கோடுகளிட்ட கொடிச்சீலைகள் வர்த்தகக் கப்பலேறிச் செல்லுகிறவர்களுக்கு வந்தனம் செய்வனபோல் பறந்துகொண்டிருக்கின்றன. நிர்மானுஷியமாய் இயற்கையிலேயே கற்கோட்டை கட்டுவதற்குத்தவிர மற்றொன்றுக்கும் உதவாத கற்பாறையான தீவுகளிலும் பரியாயத் தீவுகளிலும்கூட பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கொடி அச்சமின்றி வீசாதிருக்கக் காண்பது அரிது.

இவையெல்லாம் உண்மையான சங்கதிகள்தாம். இதற்குத் திருஷ்டாந்தமாக ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குப்போகிற பெரிய கப்பல்மார்க்கத்தை முதலில் எடுத்துப்பேசுவோம். அந்த வழி முக்கியமாய்ச் செங்கடல், மத்தியதரைக்கடல் இவைமூலமாகச் செல்லுகின்றது. அந்த வழிக்கு மூன்று வாயில்களுண்டு; மூன்றே மூன்றுதாம். இந்த மூன்று வாயில்களுக்கும் திறவுகோல் இங்கிலாந்தின் வசத்திலிருக்கின்றது. அந்த வாயில்கள் ஏடன், மால்டா, ஜிபிரால்டர் என்பவைகளாம். செங்கடலுக்குப் புகும் முகத்துவாரத்தைக் காக்கும்படி ஏற்பட்டிருக்கின்ற கோட்டை ஒன்றல்ல, பலவுண்டு. செங்கடலின் ஜலசந்தியின் மத்தியில் பெரிம் என்று ஒரு தீவு இருக்கின்றது; அது ஒரு விளைவுக்கும் பயன்படாத உயரமான ஒரு கருங்கற்குன்று; அதை ஜிப்ரால்டருக்குப் பிரதியென்னலாம். அந்தத் தீவுக்கு இருபுறத்திலும் அதற்கும் பூமிக்கும் நடுவே கப்பல்கள் ஓட வழியிருக்கின்றன. அவைதாம் செங்கடலையும் இந்து மகா சமுத்திரத்தையும் ஒன்றாய்ச் சேர்க்கின்றன. அந்தத் தீவு அங்கிலேயருக்கே வசமானது.

அங்கிருந்து கொஞ்சதூரம் அப்பால் ஏடன் என்னும் தீபகற்பம் இருக்கின்றது. இதுவும் மற்றொரு ஜிப்ரால்டர் என்று சொல்லும்படியான விளைவற்ற ஒரு கற்குன்றுதான். அங்கே எப்படிப்பட்ட காற்றிற்கும் பயமில்லாத கப்பல்துறையொன்று உண்டு. அது நிலக்கரி சேர்த்துவைக்க முக்கிய ஸ்தானமாயிருக்கின்றது. அந்தத் தீவை அங்கிலேயர்கள் 1839-ஆுத்தில் வாங்கினார்கள். இன்னும் அதற்கு பந்தோபஸ்து அதிகமாயிருக்கவேண்டுமென்று ஒரு எளிய சுல்தான் வசத்திலிருந்த சொகோத்ரா, கோரி என்னும் தீவுகளையும் வசப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீவுகளால் அவர்களுக்கு யாதொரு பயனும் உண்டாகாமற்போனபோதிலும் அதைப் பகைவர் ஒருவரும் கைப்பற்றாமலிருக்கவேண்டுமென்றே முக்கியமாய்க் கருதி அதைக் காத்துவருகிறார்கள்.

செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் ஒன்றாய்க் கூட்டுகிற சூயஸ் வாய்க்கால் அங்கிலேயர்வசத்திலிருக்கின்றது. மத்திய தரைக் கடலின் மேலண்டைக் கோடியில் ஜிப்ரால்டரும் நடுவே மால்டாவுமிருக்கின்றன. இவற்றோடு புதிதாய்ச் சில மாதங்களுக்கு முன்னே கீழண்டைக்கோடியில் சைப்ரஸ் என்னும் தீவும் சேர்ந்தது. ஆதலால் அவர்களுடைய உத்தரவின்றி மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் கடந்துவர எவராலாகும்?

இங்கிருந்து இந்து மகாசமுத்திரத்தின் வழியாய்க் கிழக்கே கப்பலேறிச் செல்வோமானால், சீனசமுத்திரம்போய்ச் சேருவோம். வர்த்தகர்கள் போக்குவரவு செய்வதற்கு எவ்வளவுபேர் போனவழியிது! எவ்வகைச் சவுக்கியத்திற்கும் தேவையான எவ்வளவு பொருள் இவ்வழியாய்க் கப்பலேறிச் காற்றிலடித்துக்கொண்டு வரப்படுகின்றன! சீனதேசத்துத் தேயிலை, இந்துசீன தீபகற்பத்துப் பட்டு, இன்னும் கீழ்த்தேசத்து வாசனைப்பொருள்கள் இவையெல்லாம் போம்வழி இதுதானே! எந்தத் தேசத்துக் கப்பலும் எந்த ஜாதியாருடைய கப்பலும் இவ்விடத்திலேவந்து கூடுகின்றன. அங்கிலேயர், பிராஞ்சுக்காரர், உலாந்துக்காரர் இவர்களுடைய கப்பல்களும், அமெரிகாதேசத்து வேகக்கப்பல்களும், இவைகளோடு சீனதேசத்துக் கப்பல்களும், மலாசியா தீவாருடைய சிறு படவுகளுமாகிய இவையெல்லாம் அங்கே ஒன்றாய் வந்து கூடக்காணலாம்.

சீனக்கடலின் கோடியில், அது நெருங்கி மலாகா ஜலசந்தியாகிறவிடத்தில் சிங்கபுரமென்றொரு தீவு அங்கிலேயருடைய அதீனத்திலிருக்கின்றது. அது வர்த்தகத்திற்கு மத்தியஸ்தானமாயிருக்கிறதென்பதொன்றேயொழிய மற்றப்படி அதனால் அவர்களுக்கு யாதொரு பயனுமில்லை. ஆனால் அது வர்த்தகத்துக்குமட்டும் மிகவும் ஏற்றவிடம். மேலும் அது இப்போது அங்கிலேயருடைய கண்காணிப்பிலிருந்துகொண்டு உலகத்திலுள்ள சிறந்த வர்த்தகஸ்தானங்களுள் தானும் ஒன்றாகும்படி விருத்தியடைந்துவருகிறது. அந்த சீனக்கடலின் மத்தியில் லாபுவன் என்னும் ஒரு தீவை அங்கிலேயர் கைப்பற்றியிருக்கிறார்கள். அதன் முக்கியமான உபயோகமென்னவெனில், அதை ஆள்கிறவர்களுக்கு விசேஷ ஐசுவரியமும் அதிகாரமுந்தரத்தக்கதாய் நிலக்கரி அந்தத் தீவிலும் அதை அடுத்த இடங்களிலும் அபரிமிதமாய்க் கிடைக்கின்றதென்பதேயாம். அந்தக் கடலின் வடகோடியில் ஹாங்காங் என்னும் ஒரு தீவு அவர்கள் வசத்திலிருக்கின்றது. அது வாசத்திற்கு அசௌக்கியமான உஷ்ணபூமியாயினும், அதை அடுத்த நீர்ப்பிரிவுகளை மற்றெவரும் அண்டவொட்டாமல் ஆள்வதற்கு ஒப்பற்ற இருப்பிடமாயிருக்கின்றது.

மிகவும் விசாலமாயும் விசேஷமாய் சஞ்சரிக்கப்படாததாயுமிருக்கின்ற சாந்த மகா சமுத்திரத்திலும் இங்கிலீஷ்காரர்கள் கொஞ்

சங்கொஞ்சமாய்த் தேசங்களைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் வசத்தில் பத்திரமாயிருக்கின்ற ஆஸ்திரேலியா என்னும தீவு அந்தத் தேசங்களுகுத் தென்மேற்கு எல்லையாயிருக்கின்றது. அங்கிருந்து கிழக்கே சுமார் அறுநூறுமையில்தூரத்தில நியூஜிலாந்து என்னும் தீவு ஒரு பெரிய அரணாயிருக்கின்றது. அதின் கரையோரங்கள் அலைகளால் அதிகமாய் அறுபட்டுப் பெரிய குடாக்களாகிக் கப்பல்கள் தங்குவதற்கு மிகவும் பத்திரமான இடங்களாயிருக்கின்றன. அந்தப் பூமியும் மிக்க செழிப்புள்ளது. அவ்விடத்து சீதோஷ்ணநிலை கொஞ்சம் நமிர்ப்பமாயிருந்தாலும் அங்கிலேயருடைய தேகத்திற்கு மிகவும் ஏற்றதாயிருக்கின்றது. இவ்வளவுமாத்திரமேயோ? அவ்விடத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் காவற்கோட்டைகள்போல் இரண்டு தீவுகளிருக்கின்றன. அவ்விரண்டிலும் சிறந்த கப்பல் துறைகளுண்டு. இன்னும் கிழக்கே அங்கிலேயருக்கு இடங்கள் வேண்டுமானால், சாந்தமகா சமுத்திரத்தின் மத்தியில் பல கிடைக்குமென்பதற்கு தீர்க்கதரிசிகளொருவரையும் ஆலோசனை கேட்கவேண்டுவதில்லை.

அங்கிருந்து இங்கிலாந்துக்காகத் திரும்பிச் சற்றே நின்றுபார்ப்போம். அங்கே பர்மியூதாஸ் என்னும் தீவுகளிருக்கின்றன. அந்தத் தீவுகள் இளங்காற்று வீசிக்கொண்டு பசுமையாக மிகவும் அழகாயிருக்கின்றன. அத்தீவுகளில் இங்கிலாந்துக்குஉபயோகமான விளைவுகளும் உண்டு; நோயாளிகளுக்கு உபயோகமான அரூரோட் என்னும் ஒரு வகைக் கிழங்கும், இன்னும் இதரமான காய்கறி தானியங்களும் அங்கே விளைகின்றன. இதைப்பற்றி நாம் சொல்லக்கூடியது இவ்வளவுதானோ? கொஞ்சம் ஆழ்ந்து ஆலோசித்துப்பாருங்கள்: இந்தத் தீவுகளில் பெரிய தரைச்சேனை கப்பற்சேனைகளும் பிறர் ஒருவரும் அண்டக்கூடாமல் வலிமையாய்க் கட்டப்பட்ட கப்பல் துறையும் உண்டு. இவையெல்லாம் அமெரிக்காதேசத்தின் கிழக்கண்டை ஓரத்திலுள்ள முக்கியமான பட்டணங்களுக்குச் சில நாளைப் பிரயாணதூரத்திலேதானிருக்கின்றன. ஆதலால் அவற்றை அங்கிலேயர் மேலிந்தியாவின் ராஜ்யத்திற்குப் போகும்வழியில் தங்க ஏற்றவிடமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவுக்கும் எங்கிலாந்துக்கும் சண்டையுண்டாகுமானால், அப்போது அங்கிலேயர் அந்தத் தீவுகளில் சேனையைச் சித்தப்படுத்திக்கொண்டு, காவல் மிதப்பட்டிருக்கிற அமெரிக்காவின் கரையோரத்துப் பட்டணங்களையெல்லாம் எளிதில் எதிர்க்கமாட்டுவார்கள்.

சின்னி என்னும் சிறுமி.

நாட்டில் ஒரு காட்டுக்குச் சமீபத்தில் ஒரு குடிசையில் சின்னி யென்னும் ஒரு சிறுமி வளர்ந்துகொண்டிருந்தாள்; அப்பெண்ணுக் குப் பல சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தார்கள். சாப்பிட வாய்மாத்திரம் அதிகமாயும் அந்த வாய்க்குப் போட இரைமட் டும் கொஞ்சமாயுமிருந்தபடியால் அவர்களின் தந்தைதாய்களுக்கு அவர்களைக் காப்பாற்றுவது வெகு வருத்தமாயிருந்தது.

ஒருநாள் சின்னி என்னும் பெண் அடுப்புக்குவேண்டிய சுள்ளி விறகு கொண்டுவரும்படியாய் அடுத்த காட்டுக்குச் சென்றாள். அவள் போதுமான விறகு பொறுக்கிக்கொண்டு வீட்டிற்கு வரும் சமயத்தில் ஒரு கனவான் தன் தோட்டத்துப் படல்மேல் சார்ந்துகொண்டிருந்தவன் சின்னியின் பரபரப்பையும் சமர்த்தாய் விறகுகூடையை இடுப்பில் வைத்துக்கொண்டுபோவதையும் கண்டு மகிழ்ந்து "அடுத்த கிராமத்துக்கு வழி எப்படி குழந்தாய்" என்று அன்பாய்க் கேட்டான். அதற்கு சின்னி, வெகு சட்டமான சிறு சொற்களால் மரியாதையோடு அவன் அறிந்துகொள்ளும்படி நன் றாய் வழியைக் கையால் சுட்டிக்காட்டி, பின்பு தான் சொன்னது சரியாய் விளங்கிற்றோ இல்லையோவென்று சற்று சந்தேகித்து, "ஐயா, தாங்கள் வந்தால் நான் வழிகாட்டுகிறேன்" என்று சொல்ல, அதற்கு அவன் "குழந்தாய், வேண்டாம், வேண்டாம், நீ சொன் னது எனக்கு நன்றாய்த் தெரிந்தது; மெத்த சந்தோஷம், இதோ ஒரு ரூபாய், வாங்கிக்கொள்; இதைக் கொண்டுபோய் உன் தாயார் கையில் கொடுத்து அடுப்பின்மேல் வைக்கிற வெறுஞ்சட்டியில் போட ஏதாவது வாங்கிக்கொள்ளச்சொல். இந்தப் பெண்ணைப் பெற்றவள் பாக்கியசாலியென்று எண்ணிக்கொள்ளச்சொல்" என்று சொன்னான். சின்னி வெகு மரியாதையுடனே அவனுக்கு வந்தனம் செய்துவிட்டு சந்தோஷத்தோடு வீட்டுக்கு ஓடினாள். அவளு டைய தாயாரும் ரூபாயைப்பார்த்து சந்தோஷப்பட்டாள்; அதை விட அந்த கனவான் சொல்லியனுப்பிய சமாசாரத்தைக் கேட்டு அதிகமான சந்தோஷமடைந்தாள்.

பூமி சூரியனைச்சுற்றி ஓடுவதேன்?

(ஒரு ஆசிரியனுக்கும் மாணுக்கனுக்கும் நடந்த சம்பாஷணை.)

ஆசிரியன்: மரத்திலிருந்து பழம் கீழேவிழுவதற்குக் காரண மின்னதென்று நான் கொஞ்சநாளைக்குமுன்னே சொல்லியிருப்பது உனக்கு நினைவிருக்கிறதல்லவா?

மாணுக்கன்: ஆம், பூமி இழுப்பதனுலே பழம் கீழே விழுகின் றது.

ஆசி: சரிதான்; நீ சொல்லுகிற நியாயம் இந்தப் பிரபஞ்சத்தில் எந்தவஸ்துவும் அதுதன் பரிமாணத்திற்கேற்றபடி ஒன்றை மற்றொ ன்று இழுக்கின்றது என்னும் பொதுவிதியினுல் உண்டானது. ஆத லின் ஒரு பெரிய பொருளுக்குச் சமீபத்திலிருக்கும் எந்தச் சிறு பொருளும் வேறு தடை யாதொன்றுமில்லாதபக்ஷத்தில் அதனுல் இழுக்கப்பட்டு அதனண்டைக்குச் செல்லும். நல்லது, நாம் வாசம் பண்ணுகிற இந்தப் பூமியாகிய கிரகத்தைவிடச் சூரியன் எத்தனை யோமடங்கு பெருத்தகோளமென்று நான் சொல்லியிருப்பது உன க்கு நினைவிருக்கிறதே; அப்படியாயின், பூமி சூரியனிடத்திலே போய் ஏன் விழவில்லையென்று நீ இப்போது கேட்பாயல்லவா?

மாணு. ஆம் ஐயா! அது ஏன் அப்படி விழவில்லை?

ஆசி. அதைப்பற்றியே நான் இப்போது எடுத்துரைக்கப்போ கிறேன். உன் அண்ணன் பந்தைக் கயிற்றிலே கட்டிப் பிடித்துக் கொண்டு சுற்றிச்சுற்றி விளையாட நீ பார்த்திருக்கிருயே.

மாணு. ஆம், நான்கூட அப்படிப் பந்தாடுகிறதுண்டு.

ஆசி. ஆனுல் நல்லதாயிற்று; அந்தப் பந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போக முயல்வதுபோல் ஓயாமல் உன் கையை இழுத்துக் கொண்டிருப்பது உனக்கு நன்ருய்த் தெரிகிறதல்லவா?

மாணு. ஆம், என் அண்ணன் ஆடிக்கொண்டிருந்த பந்து ஒன்று அப்படித்தான் அறுந்து தப்பித்துக்கொண்டு அண்டையிலிரு ந்த ஒரு பலகணிவாயிலின் வழியாய் நுழைந்துபோய்விட்டது.

ஆசி. அது அப்படித்தான் செய்யும்; அது ஒரு பொருளை நாம் பலதரம் விடாமற் சுற்றுவதால் உண்டாகின்ற ஒருவகைச் சக்தி; நீ பந்தையாடுவதற்காக அதைத் தூர எறிந்துவிடப்போவதுபோல் அதற்கு ஒரு வேகமுண்டாக்குவதனுல் அந்தச் சக்தியுண்டாகின் றது. பந்தை நீ இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிற கயிறு நீ கொடுத்த வேகத்திற்கு மாருகப் பந்தை மையத்தைநோக்கிச் செல்லும்படி செய்கின்றது. இப்படியாக ஒரேகாலத்தில் இரண்டு சக்தி இரண்டு முகமாய்ப் பந்தையாடும்படி செய்கின்றன. ஒன்று பந்தை மையத்தை விட்டோடச்செய்கின்றது. மற்ருென்று அதை

மையத்துக்கு இழுக்கின்றது. ஒன்றுக்கொன்று பிரதிகூலமான இவ்விரண்டு முயற்சிகளால் உண்டாகின்ற காரியம் என்னவெனில், பந்து ஒருமுயற்சியின்வழியாயும் செல்லாமல் இரண்டுக்கும் பொதுவான நடுவழியில் செல்லுகின்றது; அதாவது, சுற்றிச்சுற்றியோடுகின்றது. கோணமல் சரியாய் ஆடுகிறவனாயிலும் தான் அது அப்படிச் சுற்றிக்கொண்டிருக்கும். கயிறு அறுந்ததோ, பந்து வெகுதூரம் ஓடிப்போம்; அப்படியில்லாமல் அதைச் சுற்றுவதை நீ சற்று நிறுத்தினுல் அது உன் கைக்கு நோாய் வந்துவிழும்.

மாணு. இவையெல்லாம் நன்ருய்த் தெரிந்தனஐயா.

ஆசி. இப்படியே ஒரு பொருளில் ஒரேகாலத்தில் இரண்டு முயற்சி வேலைசெய்வதற்கு மற்ருென்று திஷ்டாந்தரம் காட்டுகிறேன். ஸர்கஸ்முதலிய விநோதஆட்டங்களில் ஒருவன் குதிரைமேலேறிச் சவாரிசெய்துகொண்டே கையில் பந்தாடிக்கொண்டு போகப் பார்த்திருப்பாயல்லவா?

மாணு. பார்த்திருக்கிறேன்; நன்ருய் நினைவிருக்கிறது.

ஆசி. அவ்வளவு வேகமாய்ச் சவாரிசெய்யும்போது அவன் ஆகாயத்தில் எறிகிற பந்துகளெல்லாம் மறுபடி அவன் கையில்வந்து விழும்படிக் குதிரையோடுகூட ஓடாமல் பின்னிட்டுக் கீழே விழவேண்டுமென்று நீ எதிர்பார்த்துக்கொண்டிருப்பாயல்லவா?

மாணு. ஆம், அப்படித்தான் நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஆசி. அதற்குமாருக, அவன் நின்றவிடத்திலேயே நிலையாயிருந்தால் எப்படியோ அப்படி அவை நோாய் அவன் கையிலேயே வந்துவிழ நீ கண்டாய். அதெப்படியென்கிருயோ? அவன் பந்தை உயர எறிந்தபோது பந்து நோாய் ஓட, குதிரையின் வேகமும் உயரக்கிளம்ப அவன் எறிந்த வேகமும், ஆகிய இரண்டையும் பெற்றுக்கொண்டது. ஆதலால் அது ஒன்றின் வழியிலும் நோாய்ப்போகாமல், ஆகாயத்தில் இரண்டுக்கும் பொதுவாக நடுவே ஒரு வழியிற்போய் எப்போதும் அவன் நின்றவிடத்திலேநின்று பந்தாடினுல் எப்படியோ அப்படியே நோாய் அவன் கையிலேயே வந்து விழுகின்றது.

மாணு. இது மிகவும் ஆச்சரியமானதுதான்.

ஆசி. வண்டியில் ஏறிச் சவாரிசெய்யும்போதும் நீ இதேமாதிரி திஷ்டாந்தம் கண்டிருக்கலாம். வண்டியோடும்போது ஜன்னலின் வழியாய் ஒரு பொருளைக் கீழே எறிந்தால், வண்டி நிலையாய் நின்றுகொண்டிருக்கையில் எப்படியோ அப்படியே அந்தப் பொருள் நமக்கு நோாய்க் கீழே விழுகின்றது; பின்னடைந்துபோவதில்லை.

மாணு. நான் மறுதடவை வண்டியேறிப் போம்போது இதைப் பரிசோதித்துப்பார்க்கிறேன்.

ஆசி. சூரியன் நமக்கு வாசஸ்தானமாயிருக்கின்ற இந்தப் பூமியைவிட எத்தனையோ பங்கு பெரியதாய்ச் சிறிதும் சலனமில்லாமல் மையத்தில் நிறுத்தப்பட்ட ஒரு மகா கோளமென்பதை நீ இப்போது நினைத்துக்கொள். நமது பூமி படைக்கப்பட்டவுடனே ஒரேமுகமாய் நேராக வெகு வேகமாய் ஓடும்படி கடவுளால் கட்டளையிடப்பட்டது என்பதையும் உறுதியாய் நினை; சூரியனுடைய இழுக் குந்திறமையால் அதேநிமிஷத்தில் இந்தப் பூமி இழுக்கப்படாவிட்டால், முடிவில்லாமல் அகண்டமாயிருக்கின்ற ஆகாயத்தில் அதேமுகமாய் ஓயாமல் ஓடிக்கொண்டேயிருக்கும். இவ்வுலகத்தை ஆக்கியோனுடைய விசித்திரசக்தியால் இவ்விரண்டு வலிமையும் ஒன்றுக்கொன்று சமபலமாய்த் தாங்கிநிற்கும்படி ஒரே காலத்தில் உண்டாக்கப்பட்டன. ஆதலால் பூமி முதல்முதல் அதற்கு அளிக்கப்பட்ட வேகத்தால் எவ்வளவு அப்புறம் ஓட முயல்கின்றதோ, அவ்வளவு முயற்சியோடு சூரியன் அதை இழுக்கின்றது. இவ்விரண்டினாலும் உண்டாகிறசெய்கை யென்னவெனில், பூமி அவ்விரண்டின்வழியிலும் போகாமல் இரண்டுக்கும் பொதுவான ஒரு வழியிற் செல்லுகின்றது. அதாவது, சூரியனைச் சுற்றிச் சுற்றி இருக்கின்ற வட்டவழிதான்.

மாணு. நம்மால் ஒரு புலத்தில் ஒரு பந்து உருட்டப்படுவது போல பூமி ஆகாயத்தில் உருளச் செய்யப்பட்டிருக்கிறதென்றால், பந்து கொஞ்சந்தூரம் உருண்டு தானே நின்றுபோவதுபோல் பூமியும் தானே நின்றுபோகவேண்டுமல்லவா?

ஆசி. நாம் உருட்டுகிற பந்து தரையில் உருளும்போது தேய்ந்துகொண்டேபோகிறதாகையால், அதனால் தடுக்கப்பட்டு நின்றுபோகின்றது. இந்தப் பூமியாகிய பந்தோ வெட்டவெளியில் ஓடுகின்றது. அங்கே அதன் ஓட்டத்தைத் தடுக்க ஒன்றுமில்லை.

மாணு. அப்படியாயின், ஒரு பந்தை உயர எறிந்தால், அது ஏன் ஓயாமற்போய்க்கொண்டேயிருப்பதில்லை? சீக்கிரத்தில் பூமியில் வந்து வீழ்கின்றது?

ஆசி. அதை ஆகாயத்தில் எறியக்கூடிய உன் வலிமை அதைக் கீழே இழுக்கின்ற பூமியின் வலிமையைவிட மிகவும் அற்பமானதால் அது கீழே விழுகின்றது. இதுவல்லாமல் இன்னொரு காரணமுமுண்டு. வாயுமண்டலமும் கொஞ்சம் தடைசெய்கின்றது. நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற வெளி ஒன்றுமில்லாத வெட்டவெளியன்று. வாயுவென்கிற ஒருவகைப் பொருள் எங்கும் நிறைந்திருக்கின்றது.

மாணு. அப்படியா?

ஆசி: ஆம்; உன் கையை நீ சரசரவென்று வீசினால், சிறிதளவாயினும் ஏதோ ஒன்று தடுப்பதாய்த் தெரியும். ஒருவராலும் தடுக்

க்கூடாத வலிமையோடு காற்று எதையும் முறிக்கமாட்டும் என்று உனக்கு நன்றாய்த் தெரியுமே. அந்தக் காற்று பலமாய் அசைகின்ற வாயுமண்டலமேயொழிய வேறல்ல. ஆனதுபற்றி வாயுமண்டலத்தில் சஞ்சரிக்கின்ற எந்த வஸ்துவும் தான் போகிறவழியில் இருக்கின்ற வாயுவை ஓயாமல் ஒதுக்கிக்கொண்டே போகவேண்டும்; ஆதலால் அவற்றின் வேகம் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்துகொண்டேவரும்.

மாணு: ஆனால் பூமியும் அப்படித்தானே செய்யவேண்டும்?

ஆசி: அப்படியில்லை. அது ஒன்றுமில்லாத வெட்டவெளியில் ஓடுகின்றது.

மாணு: என்ன? அது வாயுமண்டலத்தில் சஞ்சரிக்கிறதில்லை?

ஆசி: பூமி வாயுமண்டலத்தில் சஞ்சரிக்கவில்லை. வாயுமண்டலத்தைக் கூடவே இழுத்துக்கொண்டுபோகிறது. இந்த வாயுமண்டலம் பூமியாகிய பெருங்கோளத்தைச் சூழ்ந்துகொண்டு அதற்கு மேல், சாஸ்திரிகள் கண்டு கணக்கிட்டிருக்கிறபடி, சுமார் நாற்பத்தைந்து அல்லது ஐம்பதுமைல் உயரம் வியாபித்திருக்கும் ஒருவகை மூடுபனிக்கு ஒப்பென்று சொல்லலாம்.

மாணு: ஆனால் வாயுமண்டலம் மேகமண்டலத்திற்குமேலே பரந்திருக்கவேண்டும்?

ஆசி: ஆம், மேகமண்டலங்கூட வாயுமண்டலத்திற்குட்பட்டதுதான். மேகங்களுக்கு ஆதாரமே வாயுமண்டலந்தான். இந்த வாயுமண்டலம் இப்பூமியின் ஒருபாகம்போலவே அதைச் சுற்றிக்கொண்டு அதனோடுகூடவே அளவு முடிவொன்றுமில்லாத வெட்டவெளியான ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றது. இந்த விசாலமான வெட்டவெளியிலேதான் எல்லா நக்ஷத்திரங்களும் கிரகங்களும் அவ்வவற்றிற்குரிய சஞ்சாரத்தோடு திரிந்துகொண்டிருக்கின்றன. அவைகளைத் தடுப்பதற்கு அங்கே ஒன்றுமில்லை. படைத்தோன் முதலில் அவ்வவற்றிற்கு அளித்த வேகத்தின்படியே ஓயாமல் எல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்றன.

மாணு: நமது பூமியைப்போலவே சில நக்ஷத்திரங்களும் சூரியனைச் சுற்றியோடுகின்றனவல்லவா?

ஆசி: ஆம், சில ஓடுகின்றன; அப்படி ஓடுகின்றவைகளுக்குக் கிரகங்களென்று பெயர். நமது பூமியின் ஓட்டத்திற்கு என்ன விதியோ அதே விதிதான் அவை எல்லாவற்றின் ஓட்டத்திற்கும். அவற்றிற்கெல்லாம் மையமாய்ச் சூரியன் எல்லாவற்றையும் இழுக்கின்றது. இப்படிப் பலவிதமான கிரகங்களும் இப்பூமியும் சூரியனும் சேர்ந்து ஒரு பிரம்மாண்டமென்னப்படும்.

மாணு. சந்திரன்கூட அந்தக் கிரகங்களிலொன்றோ?

ஆசி. சந்திரன் இரண்டாந்தரமான கிரகமென்னப்படும். அதற்கு நெருங்கிய சம்பந்தம் நமது பூமியோடுதான். நாமெல்லாம் சூரியனைச் சுற்றியோடுவதுபோலச் சந்திரன் பூமியைச்சுற்றியே ஓடுகின்றது. ஆயினும் பூமியோடுகூடச் சூரியனையும் சுற்றி ஓடுகின்றது. இதன் சஞ்சாரத்தைப்பற்றியும் மற்ற கிரகங்களுடைய சாரத்தைப்பற்றியும் இன்னொரு வேளையில் சொல்லுகிறேன். இப்போது நான் சொன்னதை நன்றாய் அறிந்துகொண்டாயானால் அதுவே இந்த வேளைக்குப் போதுமானது.

மாணு. அப்படியே ஆகட்டுமையா.

தக்காணத்துப் பூர்வகதை.

(பூமகளென்னும் பெண்மணி.)

வெகுகாலத்திற்குமுன்னே ஒரு தேசத்தில் ஒரு அரசனும் அரசியுமிருந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒருமகள். அந்தப்பெண் பூரணசந்திரன் உதித்தாற்போல் ஒப்பற்ற வடிவழகு உள்ளவளாயிருந்ததனால் அவளுக்குப் பூமகளென்று பெயரிட்டார்கள். அந்தப்பெண் பிறந்ததினத்தில் அரசன் உலகத்திலுள்ள பண்டிதர்கள் அனைவரையும் வரவழைத்து அப்பெண்ணின் ஜாதகத்தைப்பார்த்து அவள் அதிர்ஷ்டம் இப்படிப்பட்டதென்று சொல்லும்படிக் கேட்க அவர்கள், இவளவ்வளவு அதிஷ்டசாலி உலகத்தில் ஒருவரும் இல்லை; இவள் மிகுந்த செல்வமும் செல்வாக்குமாய் வாழ்வாள் என்று சொன்னார்கள். அவர்கள் ஜாதகம்பார்த்துச் சொன்னது பொய்யன்று. மிகச் சிறுபிராயந்தொடங்கியே அந்தப் பெண் நற்குணநற்செய்கையுடையவளாய் அனைவரும் நல்லபெண் என்று மெச்சும்படி நடந்துவந்தாள். மேலும் அவள் பேசத்தொடங்கின நாள்முதல், பேச வாய்திறக்கும்போதெல்லாம் அவள் வாயினின்றும் முத்து மாணிக்கம் முதலிய சிறந்த ரத்தினங்களெல்லாம் கலகலவென்று சொரியத் தலைப்பட்டன. அவள் நடந்துபோவாளானால் போகிறவழியில் இருபக்கமும் விலையில்லா மணிகளும் மாணிக்கங்களும் பதித்த சுபர்ணாபரணங்கள் குப்பல்குப்பலாய்க் குவியும். இதனாலேயே அந்தப் பெண்ணுக்குத் தந்தையான அரசன் உலகத்தில் தனக்கு ஈடொருவரும் இல்லையென்று சொல்லும்படி அவ்வளவு தனவானாயினான். அவள் எழுந்து ஓடி நடந்தாலும் அவ்விடத்தில் கல ரத்தினம் குவிகிறதென்றால், அவளைப் பெற்றவனுடைய பாக்கியம் அவளைவிட வேறென்ன? இவ்வளவு மேன்மையோடுகூடப் பூமகள் பிறக்கும்போதே சிறந்த மணிவடமொன்று

கழுத்தில் அணிந்தபடியே வந்துபிறந்தாள். அதுகண்டு அப்பெண் மணியின் பெற்றோர் பல சோதிடசாஸ்திரிகளை வரவழைத்து அதன் வரலாறு என்னவென்று விசாரிக்க, அவர்கள் அதைப்பார்த்து, இக் குழந்தை உலகத்திலுள்ள மற்றக் குழந்தைகளைப்போலச் சாதாரண மான குழந்தையன்று; இதன் கழுத்தில் கூடவே உண்டாயிருக் கின்ற மணிவடந்தான் இக்குழந்தைக்குப் பிராணாதாரம்; அதை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுங்கள்; அதை வாங்கி வேறே யாராவது தரித்துக்கொள்வார்களானால் இப்பெண் இறந்துபோக வேண்டுவதுதான் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு ராணி அந்த மணிமாலையைச் சுலபமாய்க் கழற்றக்கூடாதபடி பெண் கழு த்தில் உறுதியாய்க் கட்டி வெகு கருத்தாய்க் காத்துவந்தாள். பூமக ளுக்குக் கொஞ்சம் புத்திதெரிந்து சாதாரணமாய்ப்பேசத் திறமை யுண்டானவுடன் அந்த மணிவடத்தின் மகிமையை அவளுடனும் சொல்லி எக்காலத்திலும் அதைக் கழற்றாமல் வெகு ஜாக்கிரதையா யிருக்க எச்சரிக்கைசெய்தாள்.

இந்தக் கதை நடக்க ஆரம்பிக்கிறகாலத்தில் அந்தப் பெண்ணுக் குப் பதினொன்றுவயது. அதுவரையிலும் அவளுக்குக் கலியாணமா கவில்லை. ஏனெனில், அந்தப் பெண்ணுக்குத்தானே கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசையுண்டாகி அவளே தனக்கு இஷ்டமான புருஷன் ஒருவனை வரித்துக்கொள்ளவேண்டுமேயொ ழிய, அதற்குமுன் நாம் ஒன்றும் செய்யக்கூடாதென்று ராஜாவும் ராணியும் தீர்மானித்திருந்தார்கள். பூமகளுடைய செல்வத்தைக் கேட்டு அநேகம் ராஜாக்களும் பிரபுக்களும் அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று அதற்காகப் பலவிதமாய் முயன் றார்கள். ஆயினும் அவள் ஒருவரையும் அங்கீகரிக்கவில்லை.

இப்படியிருக்கப் பூமகளின் பிறந்தநாள் பண்டிகை கொண்டா டும்போது ஒருதடவை அரசன் அப்பெண்ணுக்கு வெகு அழ காய் நவரத்தினங்கள் இழைத்த சுவர்ண பாதரக்ஷை ஒரு ஜதை செய்துகொடுத்திருந்தான். அவை ஒவ்வொன்றும் இருபதுலக்ஷம் ரூபாய் விலைமதிக்கத்தக்கதாயிருந்தன. அவ்வளவு விலைபெற்ற பாத ரக்ஷை இவ்வுலகத்தில் ஒருவர்க்கும் கிடையாது. பூமகள் அந்தப் பாதரக்ஷைகளை வெகு அருமையாய் வைத்துக்கொண்டிருந்தாள். அவள் நடக்கிறபொழுதெல்லாம் தன் மெல்லிய பாதங்கள் நோவா தபடி அதைத் தரித்துக்கொண்டுபோவது வழக்கம். ஒருநாள் அந் தப் பட்டணம் கட்டப்பட்டிருக்கின்ற மலைமேல் ஒருபக்கத்தில் தோழிகளோடுகூட விநோதமாய்ப் பூபறித்து விளையாடுகையில், கால்தடுக்கி ஒரு கால்பாதரக்ஷை நழுவிக் கீழே வெகுதூரத்துக்கப் பால் தரையில் ஒரு பெருங்காட்டிலேபோய் விழுந்தது. உடனே அந்தப் பெண் பல வேலையாட்களைவிட்டு அதைத் தேடக் கட்டளை

யிட்டாள். எவ்வளவுநேரம் தேடியும் அது அகப்படவில்லை. பின்பு இச்செய்தி அரசனுக்குத்தெரிய அவன், அந்தப் பாதரக்ஷையைத் தேடி எடுத்துக்கொடுப்பவர்க்கு விசேஷ வெகுமதிசெய்வதாய் அப்பட்டணம் முழுதும் பறையறைவித்தான். அன்றுமுதல் பலபேர் பலவிடங்களிலும் தேட ஆரம்பித்தார்கள். எங்கெங்கே எத்தனை நாள் தேடியும் அது ஒருவர் கையிலும் அகப்படவில்லை.

இது நடந்த சிலநாளைக்குப்பிறகு அம்மலையின்கீழ் இருக்கின்ற ஒரு தேசத்தரசனுடைய மூத்தகுமாரன் அம்மலையைச்சார்ந்த ஒரு காட்டுக்கு வேட்டையாடவந்தான். அந்தக் காட்டிலேதான் பூமகளுடைய பாதரக்ஷை விழுந்துகிடக்கின்றது. ராஜகுமாரன் வேட்டையாடுகையில் அந்தப் பாதரக்ஷை விழுந்துகிடப்பதைக்கண்டு அதை வீட்டுக்குக் கொண்டுபோய்த் தன் தாய்க்குக்காட்டி, அம்மா, இவ்வழகிய பொற்பாதரக்ஷையைத் தரித்துக்கொண்டிருந்த பாதம் எத்தன்மையதாயிருக்கவேண்டும் என்றுசொல்ல, அவள் அதைப்பார்த்து, இது லோகோத்தரமான சௌந்தரியமுள்ள ஒரு சீமாட்டியினுடையதாயிருக்கவேண்டும்; சந்தேகமில்லை. என்ன குறைந்தாலும் அவளழகு அவள் பாதரக்ஷையின் அழகுக்குக் குறைந்திராது. இப்படிப்பட்ட பெண் ஒருத்தி உனக்கு மனையாளாகநேரிட்டால் வெகு சந்தோஷமாயிருக்குமென்றாள். பின்பு அவர்கள் அந்தப் பாதரக்ஷை இன்னாருடையதென்று தெரிந்துகொண்டு வரும்படியாக நாநாதேசங்களுக்கும் தூது அனுப்பினார்கள். என்ன தேடியும் அந்தப்பெண் இருக்குமிடம் அகப்படவில்லை. இப்படியிருக்கச் சிலமாதங்கள் கழித்தபிறகு யாரோ வழிப்போக்கர்கள், வெகுதூரத்துக்கு அப்பால் மிகப் பெரிதான ஒரு பர்வதத்தின் மேல் ஒரு பட்டணமிருக்கிறதென்றும், அப்பட்டணத்தரசனுக்கு மகா ரூபவதியான கன்னிகையொருத்தி இருக்கிறாளென்றும், அப்பெண்மணியின் சிறந்த பாதரக்ஷையொன்று காணாமற்போகவே, அதைத் தேடி எடுத்துக்கொடுப்பவருக்கு விசேஷமாய் வெகுமதி செய்வதாகப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்களென்றும் அப்பட்டணத்திற்குச் செய்திகொண்டுவந்தார்கள். அந்தச் சமாசாரத்தைக் கேட்டு அப்பட்டணத்தாரெல்லாம் நம்முடைய ராஜகுமாரன் கண்டெடுத்துக்கொண்டுவந்தது அப்பெண்மணியின் பாதரக்ஷை தானென்று நிச்சயித்தார்கள்.

அவ்வதிசயச்செய்தியைக் கேட்டதும் அப்பட்டணத்து ராணி தன் மகனைப்பார்த்து, குழந்தாய்! நீ தேடி எடுத்துவந்த பாதரக்ஷை அந்தப் பெருமலைமேல் வசிக்கும் அரசன் மகளுடையதேயல்லாமல் மற்றெவருடையதுமல்ல. நான் சொல்லுகிறபடி கேள்: இந்தப் பாதரக்ஷையைக் கொண்டுபோய் அவ்வரசனிடத்திற்கொடு; அவன் பிரசித்தப்படுத்தியிருக்கிறபடி உனக்கு ஏதாவது ஒரு வெகுமதி

கொடுக்கவருவான்; அவன் மகள்தவிர மற்றொன்றும் உனக்கு வேண்டாமென்று சொல்; இதுதான் அவள் உனக்குப் பெண்டாகக் கிடைக்கத்தகுந்த வழியென்று சொன்னாள்.

அந்த ராஜகுமாரனும் தாய்சொன்னபடியே செய்தான். அவன் உடனே புறப்பட்டு வெகுதூரம் யாத்திரைசெய்து அம்மலையரசன் அரண்மனை போய்ச்சேர்ந்து, ராஜாவைக்கண்டு தான் கொண்டு போன பாதரக்ஷையை அவனுக்குக் காட்டி, மகாப்பிரபுவே! நான் உங்கள் மகளுடைய பாதரக்ஷையை இதோ கண்டெடுத்துவந்தேன்; இதற்காக எனக்குத் தகுந்த வெகுமதி செய்யவேண்டுமென்று கேட்க, அவ்வரசன், உனக்கு யானைகள் வேண்டுமா? குதிரைகள் வேண்டுமா? ஆபரணங்கள் வேண்டுமா? மணிமாணிக்கங்கள் வேண்டுமா? எது வேண்டுமென்றான். அதற்கு அந்தக் குமாரன், மகாராஜனே! நான் இம்மலையின்கீழிருக்கின்ற ஒரு பெரிய தேசத்தரசனுடைய குமாரன்; நான் இம்மலைச்சாரலில் வந்து வேட்டையாடும் போது அங்கே இந்தப் பாதரக்ஷையைக்கண்டு இது உம்மகளுடையதென்று தெரிந்து வெகுநாள் வருத்தப்பட்டு யாத்திரைசெய்து இதைத் தங்களிடத்திற் கொடுக்கவந்தேன். தங்கள் மகளுடைய செந்தாமரைக் கையல்லாது மற்றெந்த வெகுமதியும் இதற்காக எனக்கு வேண்டாம்; தங்களுக்கு மருமகனாகவேண்டுமென்றே நான் கோருகிறேனென, அந்த ராஜா, அது ஒன்றுமாத்திரந்தான் என்னால் முடியாதகாரியம்; ஏனெனில் அவளுடைய இஷ்டமில்லாமல் ஒருவரையும் கலியாணஞ்செய்துகொள்ளும்படி நாம் அவளைப் பலவந்தப்படுத்தக்கூடாதென்று நான் தீர்மானம்பண்ணியிருக்கிறேன். இதுமாத்திரம் அந்தக் குழந்தையின் இஷ்டப்படியே தான் நடக்கவேண்டும்; அவள் உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளக்கருதினால் அப்படியே நடக்க நான் சித்தமாய்க் காத்திருக்கிறேன். அவள் இஷ்டமல்லவோ இதற்கு முக்கியமாயிருக்கிறதென்றான்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், அந்த ராஜகுமாரன் அரண்மனைவாயிலில் நுழையும்போது உப்பரிகைமேலிருந்து அவனைப் பார்த்திருந்த ராஜகுமாரத்தி அவன் வந்தகாரியத்தையும் கேள்விப்பட்டு, நான் இந்த ராஜகுமாரனை நன்றாய்ப் பார்த்தேன், அவனுக்கேதான் நான் மணமாலைசூட்டப்போகிறேன் என்று செய்திசொல்லியனுப்பினாள். அதைக்கேட்கவே அந்த ராஜகுமாரனுக்குப் பழம்நழுவிப் பாலில் விழ்ந்ததுபோலாயிற்று. அப்படியே வெகு மேன்மையாக அவ்விருவருக்கும் அங்கேயே கலியாணம் நடந்தேறிற்று.

பூமகளைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்த பல ராஜாக்களும் இச்செய்தியைக் கேள்விப்பட்டு, நாம் இத்தனைபேர் காத்திருக்க யாவரையும் விட்டு இவள்

இந்த ராஜகுமாரன்மேல் ஆசைகொண்டாள் பார்த்தாயாவென்று ஒரு ஆச்சரியமும், தனக்குச் சிறிதும் ஈடில்லாத ஒரு எளிய ராஜ குமாரனைப்போய்க் கைபிடித்தாள் என்று ஒரு வெறுப்பும் அடைந்து, இது மிகவும் மதிக்குறைவாற்செய்கிற கலியாணமென்று பரிகாசம்பண்ணினார்கள். ஆயினும் ஒருவராவது மணவிருந்தை விடவில்லை. அநேகநாள் அநேக ராஜாக்கள் கலியாணச்சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு அங்கேயே சுகமாயிருந்தார்கள்.

பூமகளும் அவள் கணவனும் கலியாணமான சிலநாள்வரையில் அப்பட்டணத்திலேயே இருந்தார்கள். பின்பு ஒருநாள் அந்த ராஜகுமாரன் தன் மாமனாரைக்கண்டு, ஐயா! தாய்தந்தையர்களைப் பார்க்க எனக்கு ஆவலாயிருக்கிறது; எங்கள் தேசத்திற்குப் போய்வருகிறேன் என, அவன், உன் அருமைப் பெண்டாட்டியையும் அழைத்துக்கொண்டு சுகமாய்ப்போய்வா; அவளைமட்டும் உன் கண்ணைப்போலக் காத்துவரவேண்டும்; அவள் கழுத்திலிருக்கிற ஆரத்தைமட்டும் ஒருவரும் கழற்றித் தரித்துக்கொள்ளாமலிருக்கும்படி பத்திரமாய்க் காத்துக்கொள்; அப்படி யாராவது தரித்துக்கொள்வாரானால் உடனே இவள் இறந்துபோவாள் என்றுசொல்லி, யானை குதிரை ஆடை ஆபரணம் முதலிய பல வரிசைகளோடு பெண்ணையும் கூட்டியனுப்பினான். அந்த ராஜகுமாரனும் மாமனாரிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு சுதேசம்போய்ச் சேர்ந்தான். அவனுடைய தாய்தந்தையர்கள் தம்மகன் சிறந்த சீமாட்டி ஒருத்தியைக் கலியாணம்செய்துகொண்டு வைபவமாய் வரக்கண்டு மிகவும் ஆநந்தமடைந்தார்கள்.

பின்பு நடுவே ஒரு துர்ப்பாக்கியமான செய்கைமட்டும் நடவாமலிருக்குமாயின் அவர்கள் ஆயுளளவும் ஒரே ரீதியாய் ஒரு குறையுமில்லாமல் வெகு சுகமாக வாழ்ந்திருப்பார்கள். அந்த ராஜகுமாரனுக்குச் செங்கமலமென்று மூத்தமனைவி ஒருத்தியிருந்தாள். அவனுக்குப் புத்திதெரியாமலிருக்கையிலேயே அந்தப் பெண்ணை அவனுக்குக் கலியாணஞ்செய்துவிட்டார்கள். அவள் வஞ்சகம் பொறாமைமுதலிய கெட்டகுணங்கள் உடையவளாதலின் அவளைவிடப் பூமகளையே அந்த ராஜகுமாரன் அதிகமாய் மெச்சினானாயினும், செங்கமலம் பட்டமகிஷியல்லவா? ராஜாவும் ராணியும்கூடப் பூமகளையே அதிகமாய் மெச்சினார்கள். தனக்குச் சரியாகவே ராணியென்று பேர்பெற்று வேறொருத்தியும் இருக்கக்கூடாதென்பது செங்கமலத்தின் கருத்து. அப்படியிருக்கத் தன்னைவிடப் பதினாயிரம்பங்கு யாவராலும் மெச்சப்பட்டவளாய் ஒருத்தி வந்தாளானால் அவளைப்பார்த்து எப்படிப் பொறுப்பாள்! ஆனது பற்றிப் பூமகளைச் செங்கமலம் மிகவும் கொடிய நினைவுகொண்டு உள்ளூற வெறுத்தாள். வெளிக்கு அவளிடத்தில் மிகவும் நேச

மாயிருப்பவள்போல நடித்துவந்தாலும் அவளைக் கொல்வதற்குத் தருணம் ஏதுவோவென்று எதிர்பார்த்திருந்தாள். மூத்தவள் இளையாளிடத்தில் பகைகொண்டிருக்கிறாளென்பதை ராஜாவும் ராணியும் எப்படியோ அறிந்துகொண்டு அவ்விருவரையும் அதிகமாய் நெருங்கவொட்டவில்லை. தாங்கள் கொண்ட பயத்திற்குத் தகுந்த காரணம் இன்னதென்று சரியாய்ச் சொல்லக்கூடாமையால், அதற்குத்தகுந்த ஏற்பாடு ஒன்றும் செய்யமாட்டாமல் அவ்விருவரையும் வெகு ஜாக்கிரதையாய்மாத்திரம் கண்காணித்துவந்தார்கள். பூமகள் கபடமற்றமனமும் கம்பீரமான தன்மையுமுடையவளாதலால், தன் மாமி மாமன்மார்கள் அழைத்து நீ செங்கமலத்தோடு அதிகமாய்ச் சேராதேயென்று கொஞ்சம் எச்சரிக்கும்போதெல்லாம், நான் அவளோடு சேர்ந்தாலென்ன? அவள் என்னிடத்தில் மிகவும் பக்ஷமாயிருக்கிறாளென்று எனக்குத் தோன்றுகிறது; நாம் அவளிடத்தில் வீணான சந்தேகங்கொள்வானேன்? நாங்கள் இருவரும் தங்கை தமக்கைகள்போலல்லவா என்று பதிலுரைப்பாள்.

இப்படியிருக்க, அந்த ராஜகுமாரன் ஒரு காரியவசமாய்க் கொஞ்சம்தூரதேசம் போய்வரும்படி நேரிட்டது. ஏதோ ஒரு அசந்தர்ப்பத்தால் பூமகளையும்கூட அழைத்துக்கொண்டுபோகச் சரிப்படவில்லை. ஆதலின் அவளைத் தன் தாய்தந்தையர் வசத்தில் விட்டு அவளை வெகு ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தான் வெகு சீக்கிரத்திலேயே திரும்பிவருகிறதாய்ச் சொல்லிப்போனான்.

ராஜகுமாரன் புறப்பட்டுப்போய்ச் சிலநாளானபிறகு ஒருநாள் செங்கமலம் பூமகளண்டைவந்து, தோழி! இப்போது நம்முடைய நாயகன் வெளியேபோயிருக்கிறார்; நாம் இருவரும் தனித்திருக்கிறோமே, நீ என் வீட்டுக்குவந்தாலும் சரி, நான் உன் வீட்டுக்குவந்தாலும் சரி; எப்படியாவது நாம் இருவரும்கூடி விநோதமாய்ப்பேசி விளையாடிக் காலம்கழிப்போமே என, பூமகள் அப்படியே ஆகட்டுமென்று அதை அங்கீகரித்தாள். அப்படி அவர்கள் பேசி விளையாடும்போது இளையாள் தான் தரித்திருக்கும் சிறந்த ஆபரணங்களையெல்லாம்வாங்கிமூத்தாளுக்குக் காட்டுவாள்; அவளுக்கு அணிந்தும் அழகுபார்ப்பாள். ஒருநாள் மூத்தவள் இளையாளைப் பார்த்து, தோழி! நீ எப்போதும் இந்தக் கண்டசரத்தைக் கழுத்தைவிட்டு வாங்காமலே தரித்துக்கொண்டிருக்கிறாயே; அதற்கு ஏதாவது காரணமுண்டோ என, அவள், ஆம்: நான் பிறக்கும்போது இந்தக் கண்டசரத்தைக் கழுத்தில் அணிந்தபடியே வந்து பிறந்தேன்; அதைப்பார்த்துப் பண்டிதர்கள், இதுதான் என் பிராணனுக்கு ஆதாரம்; இதை யாராவது வேறொருவர் வாங்கித் தரித்துக்கொள்வாரானால் நான் உடனே இறந்துபோவேனென்று சொன்னார்கள்.

அதனாலேதான் நான் இதைக் கழுத்தைவிட்டு வாங்காமல் தரித்துக் கொண்டிருக்கிறேன். நான் பிறந்ததுமுதல் இதுவரையில் ஒருபோதும் இதைக் கழுத்தைவிட்டு வாங்கினதில்லையென்று சாதாரணமாய்ச் சொன்னாள். இச்செய்தியைக் கேட்கவே மூத்தாளுக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. ஆயினும் தன் சொந்தக்கையினாலேயே ஒரு பாவஞ்செய்யக்கூடாதென்பதனாலும், திருடும்போது ஒரு வேளை அகப்பட்டுக்கொள்வோமென்கிற திகிலினாலும் அதைத் தானே திருடப்பயந்தாள். அதனால் அவள் உடனே வீட்டுக்கு ஓடித் தன் உயிருக்கு ஒப்பானவேலைக்காரி ஒருத்தியை அழைத்து, நீ இன்று ராத்திரி பூமகள் வீட்டுக்குப்போய் அவள் நன்றாய்த் தூங்குகிற தருணம்பார்த்து அவள் கழுத்திலிருக்கின்ற மணிவடத்தைக் கழற்றிக்கொண்டுவந்துசேர்; அதிலேதான் அவள் உயிர் இருக்கின்றது; அதை வாங்கி நீ தரித்துக்கொண்டால் உடனே அவள் இறந்துபோவாள் என்றுசொல்ல வேலைக்காரி அதைக்கேட்டு, பூமகளைச் செங்கமலம் ஆதிமுதல் பகைத்துக்கொண்டிருக்கிறாளென்றும், பூமகளின் சாவைவிட அவளுக்கு அதிக விருப்பமானது வேறொன்றுமில்லையென்றும் தனக்கு நன்றாய்த் தெரியுமாதலால், அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு அன்றுராத்திரியே பூமகள் வீட்டுக்குப்போய் அவள் நன்றாய்த் தூங்குகிற தருணம்பார்த்து, அவள் கண்டசாத்தைக் கழற்றித் தன் கழுத்தில் அணிந்துகொண்டு ஒருவர்க்கும் தெரியாமல் மெதுவாய் வீடுவந்துசேர்ந்தாள். அந்தக் கண்டசரத்தைவாங்கி வேலைக்காரி தரித்துக்கொண்டவுடனே பூமகளுக்கும் பிராணன்போய்விட்டது.

மறுநாள் காலையில் ராஜாவும் ராணியும் வழக்கப்படியே தம் மருமகளைப்பார்க்கப்போய் அவள் படுத்திருக்கும் அறைக்கதவை இடித்தார்கள்; ஒருவரும் விடைகொடுக்கவில்லை. மறுபடியும் பலதரம் இடித்தார்கள்; எத்தனைதரம் இடித்தும் ஒருவரும் வந்து கதவைத் திறக்கவில்லை. கடைசியில் அவர்கள் கதவைப் பெயர்த்துக் கொண்டு உள்ளேபோய்ப்பார்க்கையில் பூமகள் இட்டகால் இட்ட கைகளாய்ப் படுத்துக்கொண்டிருந்தாள்; பேச்சுமூச்சு ஒன்றுமில்லை; உடம்பெல்லாம் ஜில்லென்று அல்லித்தண்டாய்க்கிடந்தது. ஆயினும் முகம்மட்டும் சிறிதும் விகாரப்படாமல் முதனாள் பார்த்தபடியே இருந்தது. இராத்திரி அவள் ஏதாவது உடம்பு சொஸ்தமில்லாமலிருந்தாளா? அல்லது யாராவது அவள் அறைக்குள் வந்தார்களா என்ன செய்தியென்று அங்கிருந்த வேலைக்காரிகளைக் கேட்க, அவர்கள் அப்படிப்பட்டது ஒன்றும் இல்லவே இல்லையென்று சொன்னார்கள். அதைப்பார்த்து ராஜா மிகவும் விசனமடைந்து எந்தமயிர்க்காலிலாவது சிறிதளவு உயிர் ஒட்டிக்கொண்டிருக்குமோவென்று மிகவும் பண்டிதர்களான வைத்தியர்கள் அநேகரை வரவழைத்துப்பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. பிராணன்

போய்விட்டதே; இனி வைத்தியம்செய்வது கண்கெட்டபிறகு சூரி யநமஸ்காரஞ்செய்வதுபோலவேயன்றி வேறல்ல; மேலே நடக்க வேண்டியகாரியங்களைப் பாருங்கள் என்று சொல்லிப்போய்விட் டார்கள்.

மிக்க சமர்த்தர்களான வைத்தியர்களும் சத்தையில்லையென்று கைவிடவே, ராணியும் ராஜனும் சோகசாகரத்திலாழ்ந்து வெகுநே ரம் கோவென்று கதறினார்கள். பின்பு அவர்கள் தன் மகன்வந்து பிணத்தின்முகத்தையாவது சற்றே பார்க்கட்டுமென்று அவளை உடனே புதைக்கத்துணியாமல் சுடுகாட்டில் ஒரு குளக்கரையிலே ஒரு மண்டபத்திலிருந்த அறைக்குள்ளே கொண்டுவிட்டு எப்படி யானாளோவென்று நாள்தோறும் அவ்விடத்திற்போய்ப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அப்போது உலகத்தில் ஒருநாளும் உண் டாகாத புதுமையொன்றைக் கண்டு அவர்கள் மிகவும் ஆச்சரியம டையும்படியாயிற்று: பூமகளுடைய வடிவம் சிறிதும் விகாரப்பட வேயில்லை. அவள் முகக்களை எள்ளளவும் மாறாமல் முன்னிருந்த படியே இருந்தது. இரண்டொரு மாதங்கழித்து அவளுடைய கண வன்வந்து பார்த்தபோதும் மேனியழகும் முகக்களையும் சிறிதள வும் மாறாமல் அவள் இறப்பதற்கு முதனாள் எப்படியிருந்தாளோ அப்படியே காணப்பட்டாள். அவளுடைய தாடையும் முகமும் வெகு சுந்தரமாய்க் காணப்பட்டன. அவள் படுத்து நித்திரைசெய் கிறவள்போல் இருந்தாளேயொழிய வேறொருவிகாரமுமில்லை. அவள் புருஷனான ராஜகுமாரன் திரும்பிவந்து இச்செய்தியைக்கே ட்டு உடனே மூர்ச்சைபோயினான். அவன் துக்கப்படுவதைப்பார் த்து இவனும் அவளோடுகூடவே மாண்டுபோகப்போகிறானேயெ ன்று அரசனும் அரசியும் பயந்தார்கள். ஐயோ! நமக்கு என்ன துர திஷ்டம் நேர்ந்தது! நாம் பக்கத்திலிருந்து பிராணனைக் காக்காவிடி னும், அவள் உயிராவிடும்போது என்ன வருத்தப்பட்டு என்னெ ன்ன வார்த்தைசொன்னாளோ அதைக்கூடக் கேட்கக் கொடுத்து வையாமற்போனேனேயென்று புலம்பிக்கொண்டு பூமகள் பிணத் தை நீட்டி வைத்திருக்கும் மண்டபத்திற்கோடி, ஐயோ! நான் மகா பாவியானேனே! என்னைக் கண்டு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு உடனே இறந்துபோகக்கூடாதா? ஓ! உலகத்திற்கெல்லாம் ஓர் அணியான என் கண்மணியே! என்னுடன் ஒருபேச்சு பேசமாட் டாயா என்று இப்படிப் பலவிதமாய்க்கூவிப் பொழுதுபோமளவும் கோவென்று கதறுவதே காரியமாயிருந்தான்.

ராஜாவும் ராணியும் தன் மகனுடைய மனநிலையைப்பார்த்து, இவனுக்கு உயிரே போய்விடுமோ, அல்லது இப்படியே பித்தம் பிடித்துப்போமோவென்று திகிலடைந்து அவனை அவளிருக்கும் இடத்திற்குப் போகவொட்டாமல் தடுக்கமுயன்றார்கள். அவர்க ளுடைய முயற்சி சிறிதும் பயன்படவில்லை. அவள் இறந்து

போனபிறகு நமக்கு எது இருந்தென்ன, எது போய் என்ன வென்று அவன் எதிலேயும் வெறுப்படைந்திருந்தான்

இதிப்படியிருக்க, பூமகளின் கண்டசாத்தைத் திருடிக்கொண்டு போன தாதி அதைப் பகலெல்லாம் தான் தரித்துக்கொண்டிருந்து இரவிற் படுக்கப்போம்போது அதை வாங்கிவைத்துவிட்டுப் படுப்பாள். அவள் அதைக் கழற்றினவுடனே பூமகளுக்குப் பிரஞ்ஞை வரும்; இரவெல்லாம் பிராணனோடேயே இருப்பாள். காலையில் தாதி அதைத் தரித்துக்கொண்டால் உடனே அவளுக்குப் பிராணன் போய்விடும். அவளை விட்டிருக்குமிடம் நகரத்துக்கு வெகு தூரமாகையாலும், ராஜா ராணி அவர்களுடைய மகன் எல்லாரும் பகலிலேயே அவ்விடத்துக்குப் போகிறதனாலும் இது ஒருவர்க்கும் தெரியாமலேயிருந்தது. முதல்நாள் அவளுக்கு அப்படிப் பிரஞ்ஞை வந்தபோது அவள், ஒருவருமில்லாத ஒரு பேரிருட்டறையில் தனித்திருக்கக்கண்டு மிகவும் பயந்து, ஒருவேளை நம்மைச் சிறையிலடைத்திருக்கிறார்களோ என்னவோவென்று நினைத்தாள். வர வர அதுவே வழக்கமாய்ப்போயிற்று. இரண்டொருநாளில் தன் மணிவடம் போய்விட்டதென்று தெரிந்துகொண்டு, பொழுது விடிந்ததும் எழுந்து எப்படியாவது வழிதேடிக்கொண்டு பட்டணம்போய் அதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று நிச்சயித்தாள். இரவில் நாலா மூலையிலும் காட்டுமிருகங்கள் பயங்கரமாய்க் கூவிக்கொண்டிருக்கப் பேரிருளிலேபோக அவளுக்கு மனந்துணியவில்லை. பொழுதும் அவளுக்கு ஒருபோதும் விடியவேயில்லை. கிழக்கு வெளுப்பதற்கு முன்னமே அந்தத் தாதி கண்டசாத்தைத் தரித்துக்கொள்ளுகிறாள்; அவளுக்கு உடனே பிரஞ்ஞை தப்பிப்போகிறதே! ஆயினும் அவள் பசிதாளமாட்டாமல் ராத்திரி ராத்திரி நினைவுவந்தவுடனே எழுந்து அங்கிருந்த குளத்திற்சென்று கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுவருவாள். அப்போது அவளுக்குப் பேசவேண்டிய தருணம் ஒன்றுமில்லையாதலின் அவள் வாயினின்றும் நவரத்தினங்கள் உதிர்வது கிடையாது. அவள் போகிற வழியிலே இருபுறமும் சிறந்த ஆபரணங்கள் மாத்திரம் சிந்திக்கொண்டேபோகும். ஒருநாள் ராஜகுமாரன் பகலில் வந்தபோது அந்த ஆபரணங்களைப்பார்த்து இதென்னவென்று ஆச்சரியமடைந்து, தன் மனைவி மறுபடியும் பிழைப்பாளென்கிற எண்ணம் அவனுக்குக் கனவிலுமிராவிட்டாலும், அது எங்கிருந்து வருகிறதோ பார்க்கவேண்டுமென்று தீர்மானித்து நெடுநேரம் காத்திருந்தான்; ஒன்றும் தெரியவில்லை. பொழுதுபோனதும் அவன் வீட்டுக்குப் போய்விடுகிறானே! அதன்பிறகல்லவோ அவள் எழுந்திருக்கப்போகிறாள்!

இதற்குள் பூமகள் இறந்துபோயினாளென்று அவளைக் காட்டிற் கொண்டுவிட்டு இரண்டுமாதமாய்விட்டது. பிறகு அந்த ராஜகுமாரன் என்றையதினம் போய்ப் பகலெல்லாம் அவள் படுத்திருந்த

மண்டபத்தண்டை காத்திருந்தானே அன்றையதினமே ராத்திரி அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்தவுடனே பொழுதுவிடிய, வழக்கப்படியே தாய் இறந்துபோயினள். அந்த அறைக் குழந்தை அண்டையில் ஒருவருமில்லாமல் அழத் தொடங்கிற்று. அது எப்படித்தான் அழுதாலும் நடுகாட்டில் அதைக் கேட்பார் யார்? இத்தோடுகூட முதனாள் பகலெல்லாம் அங்கே போய்க் காத்துக்கொண்டிருந்த ராஜகுமாரன் அன்றைப் பகலெல்லாம் அவ்விடத்துக்குப் போகவேயில்லை. ஏனெனில், நேற்றுப் பகலெல்லாம் போய்க் காத்திருந்து வீணாய்ப்போயிற்றே; இன்றைய தினம் பகலில் போய்க் காப்பதைவிட இரவிலேபோய்ப் பார்ப்போம் என்று நின்றுவிட்டான்.

அப்படியே அவன் அன்று ராத்திரி அவ்விடத்திற்குப்போனான். அங்கே போனவுடன் மெல்லிய குரலாய் அவள் படுத்திருக்கும் அறைக்குள்ளிருந்து அழுகைக்குரலொன்று கேட்க, அதை இன்னதென்று நிதானிக்கமாட்டாமல் அவன் பூதம் பேய் பிசாசு ஏதாவது கூவுகிறதோ என்னவோவென்று நினைத்தான். அதைப்பற்றிச் சந்தேகித்துக்கொண்டே அவன் கொஞ்சநேரம் வெளியிலே சுற்றிக்கொண்டிருக்கையில் திடீரென்று கதவுதிறந்த ஓசை கேட்டது. உடனே பூமகள் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு அவ்வறையினின்றும் வெளிப்பட்டுக் குளத்திற்குப் போனாள். போகும்போது அவளுடைய இருபுறத்திலும் ஆபரணங்கள் கலகலவென்று சொரிந்தன. அதைப்பார்த்து அந்த ராஜன், இதென்ன, நாம் இப்போது கனவுகாண்கிறோமா, அல்லது இது நினைவுதானாவென்று திகைத்துநிற்க, அவள் குளத்திலிறங்கிக் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பித் தன் அறைக்குப்போவதைக் கண்டு, அவளைப் பின்தொடர்ந்துபோனான். பூமகள் தன்னைப் பின்தொடர்ந்துவருகிற காலடியோசையைக் கேட்டுப் பயந்து சீக்கிரமாய் உள்ளே போய்க் கதவைப் போட்டுக்கொண்டாள். ராஜகுமாரனும் பின்னோடு வேகமாயோடி "கதவைத்திற, கதவைத்திற" என்று கூவிக் கதவையிடிக்க, அவள் "நீ யார்? பேயா, பிசாசா?" என்று கேட்டாள். (வாஸ்தவத்தில் ஏதோ ஒரு கொடிய ஜந்து தன்னையும் குழந்தையையும் முறித்துவிட வந்திருக்கிறதென்று நினைத்தாள்.) அதற்கு ராஜா "நான் அப்படிப்பட்டவனன்று; நான் உன் கணவன்; கதவைத்திற என் அருமைப் பூமகளே! நீ பிழைத்திருப்பது உண்மையாயின் கதவைத்திற" என்று கூவிக் கதவை இடிக்க, தன் பெயரை அவனெடுத்துரைத்ததனாலும், அந்தக்குரலும் தன் கணவன் குரல்போலவே இருந்ததனாலும் அவன் தன் நாயகன்தானென்று நன்றாய்த் தெரிந்து கதவைத்திறந்தாள். அவன் உடனே உள்ளே நுழைந்து, பூமகள் மடியில் குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கக்கண்டு தானும் அவளெதிரே உட்கார்ந்து,

பெண்ணே! இப்போது என்முன் தோன்றுவதெல்லாம் கனவா அல்லது உண்மைதானு? எனக்குத் தெரியச்சொல்லென்று கேட்க அவள், எல்லாம் உண்மைதான்; நான் உயிரோடுதானிருக்கிறேன்; இந்தக் குழந்தை நேற்றுராத்திரிதான் பிறந்தது. நீங்கள் வெளியே போயிருந்தபோது யாரோ என் மணிவடத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்; அதனுல் நான் பகற்பொழுதெல்லாம் பிரஞ்ஞையற்றுப்போகிறேன் என்று சொன்னுள்.

அப்பொழுதுதான் அந்த ராஜகுமாரன் அவள் கழுத்தில் கண்டசரமில்லாமலிருப்பதைக் கண்டான். அவள் சொன்னதைக்கேட்டு அவன், என் அருமைக்கண்ணே! இனி நீ பயப்படவேண்டாம்; இதோ நான் பட்டணம்போய் எப்படியாவது அந்த மணிவடத்தைக் கண்டுபிடித்துக்கொண்டுவருகிறேன் என்று அவளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டே இராப்பொழுதை அங்கேயே போக்கிஞள். காலையில் எழுந்ததும் பட்டணத்திற்குப்போய் உடனே ராஜமாளிகையிலுள்ளவர் அனைவரையும் வரவழைக்கக் கட்டளையிட்டான்.

அப்படியே யாவரும் வந்துசேர்ந்தார்கள். சேர்ந்தவுடன் ராஜகுமாரன் தன் மூத்தமனைவியின் தாதியொருத்தியினுடைய கழுத்தில் பூமகள் இழந்துபோன மணிமாலையிருக்கக்கண்டு அது ஏதென்று கேட்க, அவள் ஒன்றும் சொல்லத்தோன்ருமல் பிரமித்து நின்றதனுல், அதை வாங்கிக்கொண்டு அவளைச் சிறைசெய்யக் கட்டளையிட்டான். அந்தக் கட்டளையைக்கேட்டு தாதி மிகவும் பயந்து, பெரியராணியின் உத்தரவிஞலேதான் நான் இக்காரியமெல்லாம் செய்தேனென்று நடந்ததை நடந்தபடியே சொல்லிவிட்டாள். அதைக் கேட்கவே ராஜா மிகவும் கோபங்கொண்டு அந்தக் கொடிய ராணியைக்கூட ஆயுளளவும் சிறைசெய்யத் திட்டஞ்செய்தான். தன் அருமைமனையாளின் கைசோர்ந்த மணிவடம் கிடைக்கவே பேரானந்தமடைந்து தன் தாய்தந்தையர்களையும் மற்றும் அநேகம் பரிஜனங்களையும் கூட்டிக்கொண்டு பூமகள் படுத்திருக்குமிடத்திற்குப்போய் மணிவடத்தை அவள் கழுத்தில் அணியச்செய்தான். அதைத் தரிப்பித்தஉடனே அவள் தூங்கியெழுந்தவள்போல் எழுதாள். பின்பு யாவரும் அங்கிருந்து சந்தோஷமாய்ப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். பூமகள் பிழைத்தெழுந்த செய்திகேட்டு அப்பட்டணத்தார் அனைவரும் மிகவும் மகிழ்ச்சிஅடைந்தார்கள். அன்றுதொட்டு அந்த ராஜகுமாரன் ஒரு குறையுமின்றிச் செம்மையாய்க் குடிகளையும் காத்துக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தான்.

பட்டுப்பூச்சி.

சாதாரணமாய் நமது பார்வைக்கு மிகவும் அற்பமானவைக ளாய்த் தோன்றுகிற பிராணிகள் வெகு சிறந்தவையாகத் தோன்று கின்றவைகளைவிட விசேஷமாய் உபயோகப்படுகின்றனவென்பது அநேகர்க்கு அனுபவத்தினுல் தெரிந்திருக்கலாம். முதலில் சாம்பல் நிறமான ஒரு புழுவாயிருந்து பிறகு ஒரு சிறுபூச்சியாக மாறும் பட்டுப்பூச்சியைப் பார்த்தவர்கள், வெகு அழகாய் வெயிலில் பறந் துகொண்டுதிரிகிற வண்ணாரப்பூச்சி, தோட்டத்துச்செடிகளை அரிக் கிற கம்பளிப்பூச்சி வகையைச்சேர்ந்த பூச்சிகள் இவைகளுக்கு, ஒருபோதும் அழகில் பட்டுப்பூச்சி ஈடாகாதென்று நன்ருய்ச் சொல்வார்கள். ஆயினும் வண்ணாரப்பூச்சி நமது கண்ணுக்குமாத் திரம் பகட்டேயொழியக் காரியத்திலொன்றுமில்லை. கம்பளிப் பூச்சி வகைகள் கண்ணுக்கு எவ்வளவு அழகாய்த்தோன்றினும், அவைசெய்கிற தீமைகளைப்பார்த்து அவற்றைக் கொல்வதற்கு நாம் அதிக ஆவல்கொள்ளும்படி அவ்வளவு கொடியவைகளாயி ருக்கின்றன. இவையெல்லாம் இப்படியிருக்க, பட்டுப்பூச்சியா னது சிறந்த கனவான்களும் பிரபுக்களும் தரிக்கத்தக்க உயர்ந்த ஆடைகள் நெய்வதற்கேற்ற நூல்களை நூற்றுக்கொடுக்கிறதென்ருல், அதற்கு இதைவிடப் பெருமை வேறென்ன! பட்டுப்பூச்சியானது கம்பளிப்பூச்சி வர்க்கத்திற்சேர்ந்த ஒரு ஜந்து. இந்தப் பூச்சியொ ன்று செய்கிற நன்மை அதன் இனத்தைச்சேர்ந்த ஜந்துக்கள் அனைத் தாலும் செய்யப்படுகிற தீமைகளுக்கெல்லாம் ஈடாயிருக்கின்றது. தனக்குத்தானே வருந்தி வேலைசெய்கிற இந்தச் சிறு ஜந்து முக்கிய மாய் மனிதர்களுடைய உதவிக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கி றது. இந்த ஜந்து உண்டாக்கிக்கொடுக்கின்ற உடையைப்போலச் சிறந்த உடை உலகத்தில் வேறெந்த ஜந்துவும் உண்டாக்குகிறதில்லை. இவ்வாறு இந்தச் சிறந்த உடைகள் உண்டாவது தவறிப்போமாயின், பிறகு அந்தக் குறையைத்தீர்க்க எந்த முயற்சியாலேதான் முடியும்?

ஆதியில் பட்டு உற்பத்தியானதும் ஆடைகளாக நெய்யப்பட் டதும் சீனுதேசத்திலேயென்று தோன்றுகிறது. அக்காலத்தில் பட்டு ஐரோப்பாவில் வெகு அருமையாயிருந்தது. கொஞ்சம் கொஞ்சம் ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டதென்ருலும் அது பொன்நிறையாய் நிறுத்து விற்கும்படியாயிருந்தது. எவனுவது ஒருவன் கொஞ்சநஞ்சம் பட்டுக்கலந்தபோர்வை போர்த்துக்கொ ண்டு வெளிப்படுவானுனல், வீண் டம்பக்காரனென்று அவனை இகழ்வார்கள். அப்பட்டணத்து அரசன்கூடத் தன் மனையாளுக்கு ஒரு பட்டாடை வாங்கிக்கொடுக்க மயங்கினுனென்ருல், அதன்

அருமையைப்பற்றி வேறென்ன சொல்லவேண்டும்! அக்காலத்தில் பாரசிகதேசத்திலே கூடப் பட்டென்பது இப்படிப்பட்டதென்று தெரியாது.

பட்டு ஒரு சிறிய பூச்சியினுல் உண்டாக்கப்பட்ட பொருளென்பது தெரிவதற்குமுன்னமே ஐரோப்பியர் வெகுகாலமாய் பட்டுடைகள்மட்டும் உடுத்திக்கொண்டிருந்தார்கள். ரோமானியருக்குக்கூடக் கிறிஸ்துபிறந்த ஆரும் நூற்றுண்டுவரையில் பட்டுப்பூச்சியின் வரலாறு தெரியாது. பனிரண்டாம் நூற்றுண்டுவரையில் பட்டுப்பூச்சி ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப்படவில்லையென்கிருர்கள். பிறகுதான் இரண்டு சந்நியாசிகள் சில பட்டுப்பூச்சிகளை ஒரு தடிக்குள் போட்டு மறைத்துக்கொண்டு சீனுவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுபோனுர்கள். பின்பு சிசிலியின் அரசரான ஒருவர் சிற்றுசியாவிலிருந்து பட்டுவேலையிற் கைதேர்ந்த வேலைக்காரரை வரவழைத்து அந்த வியாபாரத்தைத் தன் தேசத்தில் விருத்திசெய்தார். அவ்விடத்திலிருந்துதான் ஐரோப்பாவின் மற்றத் தேசங்களிலெல்லாம் பட்டுவியாபாரம் பரவினது. இப்போது ஐரோப்பாவின் தென்தேசங்களில் விசேஷ லாபமுண்டாக்குகிற வர்த்தகப்பொருள்களுள் பட்டும் ஒன்றுயிருக்கின்றது.

பட்டுப்பூச்சியானது பனிரண்டுகாலும் சாம்பல் நிறமுமுள்ள ஒரு பூச்சியென்று இப்போது எங்கும் பிரசித்தமாய்த் தெரியும். அது பெரிய பூச்சியாகி ரக்கைமுளைத்து வெளியே பறக்கும்படியானகாலம் வருமளவும் அந்தப்பூச்சி பட்டினுல் ஒரு கூடுகட்டிக்கொண்டு அதனுள் வசித்துக்கொண்டிருக்கும். அந்தக் கூட்டின் மெல்லிய அழகான நூலிழைகள் பலவற்றை ஒன்றுய்ச்சேர்த்துப் பெருத்த நூலிழைகளாக்கி நன்றுய்ச் சுற்றிப் பட்டுகளாக எடுப்பார்கள். பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதும், பட்டுநூல்களைச் சேர்ப்பதும், சுற்றுவதும், பின்பு அவைகளைப் பட்டாடைகளாக நெய்வதுமாகிய இவையெல்லாம் ஐரோப்பாவிலுள்ள பலவகைக் கைத்தொழில் வியாபாரங்களில் முக்கியமானவையாயிருக்கின்றன. மனிதர்களுடைய போகங்கள் அதிகமாக ஆக இந்த வியாபாரங்களெல்லாம் அதிக ஆவசியகமாகின்றன.

பட்டுப்பூச்சிகளை வளர்க்க இரண்டுவழி உண்டு. அவைகள் இயற்கையாய் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்குமிடமான மரங்களிலேயே அவைகளைச் சுயேச்சையாய் இருக்கச்செய்து அங்கேயே வளரும்படிச் செய்தாலும் செய்யலாம். அல்லது அதற்கென்று நன்றுய் ஒரு கட்டடம்கட்டி அதில் அவைகளைவிட்டு நாள்தோறும் புதிதாய் இலைகளை இரையாகக் கொண்டுபோட்டு வளர்த்தாலும் வளர்க்கலாம். முதலிற் சொன்னவிதமாய்ச் சீனு முதலிய உஷ்ணபூமியான கீழ்த்தேசங்களில் பட்டுப்பூச்சி வளர்க்

கப்படுகின்றன; இயற்கையாயிராமல் வேண்டுமென்று அவைகளைக் கொண்டுவைத்து வளர்க்கின்ற இடங்களிலெல்லாம் பின்சொல் லியவிதமாயே வளர்க்கப்படுகின்றன. ஆனால் அப்படி வளர்க்கப் படுகிற பூச்சிகள் தானாய் வளர்கிற பூச்சிபோல் அவ்வளவு செழிப் பாய் வளருவதில்லை. உஷ்ணதேசங்களில் பட்டுப்பூச்சிகள் மல் பரியென்று வழங்குகிற கம்பளி அல்லது முசுக்கொட்டை மரங் களிலேயே அம்மரத்தின் இலைகளைப் புசித்துக்கொண்டு வளர்கின் றன. அப்பூச்சிகள் அம்மரத்திலேயே முட்டையிட்டு மழை காற்று ஒன்றுக்கும் அசையாத பத்திரமான இடங்களில் அம்முட்டை களைச் சேர்த்துவைக்கின்றன. மழைக்காலமெல்லாம் பூச்சிகள் முட்டையைவிட்டு வெளிப்படுவதேயில்லை.

அந்தப் பூச்சி ஜீவிப்பதற்குப் போதுமான உணவைக் கடவுள் உண்டாக்கிவைக்குமளவும், அதாவது முசுக்கொட்டைமரங்கள் நிரம்பத் தளிர்த்து இலைவிட்டுத் தழையுமளவும், பட்டுப்பூச்சி முட் டையினின்றும் வெளிப்படுவதில்லை. மரங்களெல்லாம் அழகாய்த் தளிர்த்துத் தழைந்தவுடனே பட்டுப்பூச்சிகள் பெரும்பசிகொண் டவைபோல முட்டையினின்றும் வெளியேவந்து வெகு ஆவலுடன் அம்மரத்து இலைகளைப்புசிக்கத் தொடங்குகின்றன. இலைகளைப் புசி க்கப்புசிக்க அந்தப் பூச்சிகள் பெருக்கும். அப்படியே விடாமல் இரண்டொருமாதம் புசித்துக்கொண்டிருந்து பின்பு அதை நிறு த்திவிட்டு, வெகு நேர்த்தியான பட்டுக்கூடுகள் கட்டிக்கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றும் புகுந்துகொள்ளும். அப்பொழுது மரந் தெரியாமல் அதில் பட்டுக்கூடுகள் நிறைந்திருப்பதைப்பார்த்தால், ஒரு அழகான பசுந்தரையில் நிரம்பப் பொன்னிறமாய்ப் பழங்க ளிருப்பதாக எழுதப்பட்ட சித்திரம்போல வெகு அற்புதமா யிருக்கும். இதுதான் பட்டுப்பூச்சிகள் கீழ்த்தேசங்களில் வளரு கிற விதம். இப்படி வளருவதுதான் அந்தப் பூச்சிகளுக்குச் சௌக் கியம். வளர்ப்பவனுக்கும் வருத்தமில்லை. சீதபூமியான ஐரோப் பாவிலேயோ இப்படியல்ல. சீதோஷ்ணநிலை அடிக்கடி மாறுவதும், மாலைவேளைகளில் பலமாய்ப்பெய்கிற பனியும் முக்கியமாய் இராப்பொழுதுகளில் பட்டுப்பூச்சிகளைக் காப்பாற்றுவதற்கு வெகு வருத்தத்தைக் கொடுக்கின்றன. பறவைகளால் உண்டாகும் தீமை களை விலக்கவேண்டுமானால் அப்பூச்சிகளைக் கூடுகளில் விட்டுவைத் துச் சுலபமாய்க் காப்பாற்றலாம். குளிர் மழை காற்று முதலியவை யெல்லாம் அவைகளை அநேகமாய் அழிக்கின்றனவே. ஆதலின் ஐரோப்பாவில் பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதென்றால் இந்தத் தீமை கள் ஒன்றும் உண்டாகவொட்டாமல் அவைகளைத் தகுந்தவிடங்க ளில் விட்டுக் காக்கவேண்டும்.

இதற்காக ஐரோப்பாவில் குளிர்ந்த வாடைக்காற்று அடிக்க வொட்டாமல் தெற்குமுகமாய் வாயில் வைத்துப் பெரிய கூடங்

கள் கட்டி அவற்றுள் பட்டுப்பூச்சிகளைவிட்டு வளர்க்கிறார்கள். சிறிதளவும் காற்று உள்ளே புகவொட்டாமல் ஜன்னல்களிலெல்லாம் அழுத்தமாய்க் கண்ணாடிகள் புதைத்து, ஈ கொசுகூட உள்ளேவர வழியில்லாமல் மேல்தளமும் நன்றாய்ப்போட்டு அந்தக் கூடங்கள் வெகு பத்திரமாய்க் கட்டப்பட்டிருக்கும். அந்தக் கூடங்களின் நடுவே வெகு விசாலமாய்ச் சதுரமாக நான்கு தூண்கள்நாட்டி அந்தத் தூண்களின் நடுவே ஒன்றின்மேலொன்றாக, ஓரங்களெல்லாம் தூக்கிக்கட்டிப் பல அந்தஸ்துகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு அந்தஸ்தின்மேலும் ஒவ்வொரு தடுக்கு அமைத்து, அந்தத் தடுக்கு அதன்கீழ் அந்தஸ்து எல்லாம் கப்பிகள்கட்டித் தொங்கவிட்டு வேண்டும்போது இறக்கவும் தூக்கிக் கட்டவும் ஏற்றவையாய்ச் செய்யவேண்டும்.

பட்டுப்பூச்சிகள் ஒவ்வொன்றும் சுமார் இருநூறு முட்டையிடும். ஒவ்வொரு முட்டையும் கடுகளவு பரிமாணந்தான் இருக்கும். பட்டுப்பூச்சி முட்டையிட்டானவுடனே அம்முட்டைகளையெல்லாம் அநேகம் முட்டைகள் கொள்ளும்படியான பெரிய காகிதப் பெட்டியிலாவது துணிப்பெட்டியிலாவது விட்டுவைப்பார்கள். அந்த முட்டைகளெல்லாம் குஞ்சுபொரித்தானவுடன் முசுக்கொட்டைச்செடியின் இளந்தளிர்கள் சேகரித்து அந்தப் பூச்சிகளுக்கு இரையாக அப்பெட்டிகளில் போடவேண்டும். அந்தப் பூச்சிகளுக்குக் கொஞ்சம் வலிமைவந்தவுடனே, கீழ்ச்சொன்னமாதிரியாய் ஏற்படுத்திய பெரியகூடங்களில் நடுவே ஒவ்வொரு அந்தஸ்திலும் முசுக்கொட்டைத் தளிர்களைப்பரப்பி அவற்றின்மேல் அந்தப் பூச்சிகளை எடுத்துவிடுவார்கள். விட்டால் அவை உடனே அந்த இலைகளைப் பற்றிக்கொண்டு அவைகளைப் புசிக்க ஆரம்பித்து அவையெல்லாம் புசித்தானவுடனே மேலேயிருக்கின்ற தடுக்கின் தடிகளைப்பற்றிக்கொள்ளும். பின்பு ஒருபோதும் கீழே விழாமலிருக்கும்படியாக, சிலந்திகள் கீழே இறங்கவும் ஏறவும் ஏற்றதாய் நூல் நூற்றுக்கொள்வதுபோல், இந்தப் பட்டுப்பூச்சிகளும் நூல்நூற்கும்; அந்த நூல்கள் பிறகு அவை விசேஷமாய் நூற்கப்போகிற பட்டுக்குச் சிறிதும் சமானமானதல்ல. அக்காலத்தில் அந்தப் பூச்சிகளுக்கு நாள்தோறும் காலையில் தப்பாமல் புதிது புதிதாய் இலைகள் கொண்டுவந்து எங்கும் ஒரேஅளவாக அவற்றின்மேல் பரப்பிப்போடவேண்டும். பரப்பினால் அந்தப் பூச்சிகள் பழைய இலைகளைவிட்டுப் புது இலைகளைப் பற்றிக்கொள்ளும். உடனே கீழிருக்கிற பழைய இலைகள் குப்பை செத்தையெல்லாவற்றையும் மெதுவாய் அப்புறப்படுத்தி அவ்விடத்தை நன்றாய்ச் சுத்தமாக்கவேண்டும். ஏனெனில், அசுத்தம் நாந்தல் இவைதாம் பட்டுப்பூச்சிகளுக்கு அதிகமாய்த் தீங்குசெய்பவைகள். பட்டுப்பூச்சிகள் பிழைத்திருக்கிறகாலம் மிகவும் சொற்பமாகையால்,

அவை மேல்தோலை மாற்றுகிற காலந்தவிர மற்றப்பொழுதெல்லாம் அந்த இலைகளை ஓயாமல் தின்றுகொண்டேயிருக்கும். ஆதலின் அதற்குத் தேவையான இலைகள் எப்போதும் சுலபமாய்க் கிடைக்காவிட்டால் கிடைக்கிறபொழுதே சேகரித்துப் பத்திரமாய் வைத்துக்கொள்வார்கள். முசுக்கொட்டையிலை கிடைப்பது அருமையாயிருக்கிறவிடங்களில் அதற்குப் பதிலாக வேறுசில இலைகளை உபயோகப்படுத்துவது உண்டு. ஆனால் அதைத் தின்கிற பூச்சிகள் முசுக்கொட்டை இலையைத் தின்கிற பூச்சிபோல் அவ்வளவு செழிப்பாய் வளர்கிறதில்லை. பட்டும் விசேஷமாயுண்டாக்குகிறதில்லை. அந்தப் பட்டு அவ்வளவு நன்றாயும் இருக்கிறதில்லை.

இப்படியாகப் பட்டுப்பூச்சிகளுக்கு வெகு கருத்துடன் செய்ய வேண்டியகாரியம் இரைபோடுவது ஒன்றுமாத்திரமேயல்ல, வேறொன்றுமிருக்கிறது. தகுந்தபடி அவற்றின்மேல் நல்லகாற்று வீசச் செய்யவேண்டும். அதாவது, வெயில் நன்றாய்க் காய்கிறவேளைகளில் அந்தக் கூடங்களின் ஜன்னல்களைத் திறந்து வேண்டுமான நல்லகாற்று உள்ளே புகச்செய்யவேண்டும். அவ்விடங்களைக் கூடியவரையில் சுத்தமாயே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். பட்டுப்பூச்சிகளின் மலத்தை ஏற்கும்படியாக வைத்திருக்கிற பல அந்தஸ்துகள்மாத்திரமேயல்ல, அந்தக்கூடம் முழுமையுமே அடிக்கடி சுத்திசெய்துகொண்டுவரவேண்டும். இவையெல்லாம் கருத்தாய் நடத்தப்படுமானால், பட்டுப்பூச்சிகள் சுகமாய்வளர்ந்து விருத்தியாகும்.

பட்டுப்பூச்சி முட்டையினின்றும் வெளிப்படுகிறகாலத்தில், மிகவும் சிறிதாய்க் கறுப்புநிறம் உள்ளதாயிருக்கும். உடலைவிடத் தலை அதிக கறுப்பாயிருக்கும். சிலநாளைக்குப்பிறகு சாம்பல் நிறமாக மாறும். பூச்சி இன்னும்கொஞ்சம் பெருத்தவுடன் சாம்பல் நிறத்தோல்போய் சுத்தவெண்மையான தோலுண்டாகி அப்படியே கொஞ்சநாளிருக்கும். அந்தந்தத்தேசத்துச் சீதோஷ்ண நிலைக்கும் நாம் இடுகிற உணவுக்கும் ஏற்றபடி சிலநாள் அப்படியே இருந்து பிறகு உணவை நிறுத்திவிட்டு இரண்டுநாள் ஒரே அளவாகத் தூங்குவதாய்க் காணப்படும். பிறகு அசைய ஆரம்பித்து மேல்தோல் மறுபடியும் வீழ்ந்துபோமளவும் பாபாப்பாயோடி அதை வாங்கிவிடும். இவ்வளவுகாரியமும் மூன்றுவாரம் அல்லது ஒருமாதத்திற்குள் நடந்துபோம். மறுபடியும் முன்போலவே இலைதின்ன ஆரம்பித்துச் சிலநாளில் அதை நிறுத்தி முன்போலவே இரண்டொருநாள் தூங்குவதுபோலிருந்து பிறகு அப்போதிய மேல்தோலையும் மாற்றிவிட்டு மறுபடியும் இரையெடுக்க ஆரம்பிக்கும். இப்படியாக வேண்டுமான இரைதின்று தேகம் நன்றாய் ஒழுங்குபட்டவுடனே, கடைசியாய் இரையெடுப்பதை

விட்டுத் தனியே யாதொரு தீங்கும் உண்டாகவொட்டாமல் தன்னைத்தானே காத்துக்கொள்ளும்படித் தனியிடமொன்று செய்துகொள்ள ஆரம்பிக்கும். அக்காலத்தில் பட்டுப்பூச்சி அசையாமல் உயிரற்றதுபோலவே காணப்படும்.

இப்படிப் பட்டுப்பூச்சி கட்டத்தொடங்குகிற தனியிடமானது கோகூன் என்று வழங்குகிற பட்டுக்கூடேயன்றி வேறல்ல. அதை வெகு விநோதமாகக் கட்டும்படியான சாமர்த்தியத்தைக் கடவுள் அதற்குக் கொடுத்திருக்கிறார். பட்டுப்பூச்சிக்கு இறகோடுகூடிய வடிவம் வருமளவும் அது அந்தப் பட்டுக்கூட்டுக்குள்ளேயே புகுந்துகொண்டிருக்கும். அந்தக் கூடு அதன் குடலுக்குமேல் இருக்கும் ஒருவாறு நீண்ட இரண்டு பைகளிலுள்ள பொன்நிறமான பிசின்தன்மையுள்ள ஒருவகைத் திரவப்பொருளால் நூல்நூற்றுக் கட்டப்படுகின்றது. பட்டுநூலை ஒவ்வொரு சமயத்தில் வெகு நேர்த்தியாக நூற்கும்படி அதற்குத்தகுந்த கருவி பட்டுப்பூச்சிக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கருவி மிகவும் நுண்ணியதாகப் பொன் வெள்ளிக்கம்பிகளிழுக்கும்படிக் கம்மாளர் வைத்திருக்கும் கருவியை ஒருவாறு ஒத்திருக்கும். அந்தக் கருவியைக்கொண்டு பட்டுப்பூச்சி வெகு ஜாக்கிரதையாய்ப் பட்டுநூல் நூற்கின்றது. அந்தநூல் இரண்டு பிசின் பையினின்றும் வருவதனால் முதலில் இரண்டாகவே வந்து பின்பு ஒன்றாய்க்கூடுகின்றது. அந்த நூலைப் பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்தால் ஒருபுறத்தில் தட்டையாய் நடுவே கோடுகீறியிருப்பதுபோல் காணப்படும். அதைக்கொண்டே அந்தநூல் முதலில் இரண்டாய்வந்து பிசின்தன்மை அதனிடத்திலிருப்பதால் உடனே ஒன்றாய்க் கூடுகிறதென்பதை நாம் கண்டுகொள்ளலாம். இப்படிக் கூடுகட்டுவதற்கு முன்னமே ஒரு அபாயமும் உண்டாகாத பத்திரமான விடமாய்ப்பார்த்தே பட்டுப்பூச்சி அதைக் கட்ட ஆரம்பிக்கின்றது. இலையோ அல்லது பாழியோ ஏதாவதொன்று ஏற்றவிடமாய் அகப்பட்டால் உடனே அந்தப் பூச்சி தன் தலையை நாற்புறமும்புரட்ட ஆரம்பித்து நூலை அவ்விடத்தில் நாலா மூலையிலும் ஒட்டவைக்கும். அது முதலில் செய்கிறசெய்கையெல்லாம் வழிதுறையில்லாமல் செய்யப்படுவனபோல் காணப்பட்டாலும் அவை ஏதோ ஒரு கருத்தைக்கொண்டுதான் செய்யப்படுகின்றனவென்று அவற்றின்காரியத்தால் நன்றாய்த் தெரியும். முதலில் நூற்கப்படுகிற நூல்களெல்லாம் ஒழுங்காய் வைக்கப்படாமல், மழைக்காதாரமாக மொத்தமாய் வைக்கப்படுகின்றன. வெளிப்புறங்களில் மரங்களிலேயே இருக்கும்படியாக அதைக் கடவுள் சிருஷ்டித்திருக்கிறபடியால், நல்ல பத்திரமான அறைக்குள் கொண்டுவிட்டாலும் இயற்கையான வழக்கமே அதற்கு வருகின்றது.

பட்டுப்பூச்சியின் கூட்டுக்குள் ஆறுபுளா இருக்கக்கண்டதாக ஒருவர் சொல்லியிருக்கிறார். சாதாரணமாய்க் காணப்படுவதென்ன வெனில், அந்தக் கூட்டுக்கு மேற்புறத்தில் பஞ்சுபோன்ற ஒரு வகைப்பொருளும், அதற்குள் நாம் நன்றாய்ப் பிரித்தெடுக்கும் படியாக்ச் சீராய் அமைந்த பட்டுநூலும், அதற்குள் அந்தப் பூச்சியின் உடம்புக்குமேல் மெல்லிய கடிதம்போன்ற ஒருவகைப் பொருளும் அமைந்திருக்கின்றன. அந்தக் கூட்டில் பட்டுநூல் நாம் நூலுண்டை சுற்றுவதுபோல் வட்டமாய்ச் சுற்றியிருக்கவில்லை. முதலில் ஒரு பக்கமெல்லாம் சுற்றிப் பிறகு மற்றொரு பக்கத்தில் சுற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டுநூலை அளந்தால் சுமார் முந்நூறுகஜம் நீளமிருக்கிறது. சில பூச்சிகள் அதற்கு இரட்டிப்பு அளவாகக்கூட நூற்பதுண்டு. அந்த நூல்களைப் பத்து பனிரண்டுசேர்த்து ஒரு இழையாகச் சுற்றும்படி அவை அவ்வளவு நுண்ணியவைகளாயிருக்கின்றன. பட்டுப்பூச்சிக்கூடு கட்டிமுடிந்தபிறகு பார்த்தால் அது மாடப்புறா முட்டைவடிவமாயும், ஒரு புறத்தைவிட மற்றொருபுறத்தில் அதிக சுருக்கமாயுமிருக்கும். சுருங்கிய புறத்திலேதான் பட்டுப்பூச்சி தலையை வைத்துக் கொண்டிருக்கும். பட்டுப்பூச்சிக்கு ரக்கை முளைத்தவுடனே அது கூட்டினின்றும் வெளிவருகிறவழி அதுதான்.

பட்டுப்பூச்சி கூடுகட்ட ஆரம்பித்தபிறகு அதற்கு இறகு முளைக்கப் பதினைந்து அல்லது இருபதுநாள்செல்லும். அந்தப் பூச்சிக்கு ரக்கை முளைத்தவுடனே அது முன்னிருந்த மேல்தோலை வாங்கிவிட்டு, தனக்குச் சிறைபோலிருக்கும் பட்டுக்கூட்டையும் தலையால்முட்டிப் பீறிக்கொண்டு வெளிப்படும். அது வாங்கிவிட்ட பழையதோல் அழுக்குபட்ட சணல்போல் அந்தக் கூட்டுக்குள்ளேயே தங்கிப்போம்.

இப்படியாகப் பட்டுப்பூச்சி கூட்டினின்றும் வெளிப்பட்டவுடனே எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டதாகவும், சந்திபுண்டாக்குவதற்காகவே உண்டானதாகவும் நினைப்பதாய்த் தோன்றுகின்றது. வெளிப்பட்டபிறகு பட்டுப்பூச்சி உண்பதுமில்லை, பறப்பதுமில்லை. ஆண்பூச்சி பெண்பூச்சியைத்தேடி கர்ப்பமுண்டாக்கவே முயல்கிறது. பெட்டையைவிட்டுப் பிரிந்தவுடனே ஆண் இறந்துபோகின்றது. பெட்டையும் முட்டையிட்டவுடனே இறந்துபோகின்றது. அந்த முட்டையும வசந்தகாலம் வந்தவுடன் குஞ்சுபொரித்துப் புழுவாகின்றது.

ஆயினும் இப்படி விருத்தியாகி முட்டையிடுகிற பூச்சிகள் மிகவும் கொஞ்சம்; ஏனெனில், அது கூட்டைப் பிளந்துகொண்டு வெளியே வரும்போது பட்டு சேதப்பட்டுப்போகிறதாகையால், அந்தப் பூச்சி பெரிதாகி வெளிப்படுவதற்குமுன்னமே பட்டு வேலைக்காரர்கள் அந்தக் கூட்டை வெயிலிலே காயப்போட்டுப் பூச்சி

யைக் கொன்றுபோடுகிறார்கள். அதானவுடனே அக்கூட்டின் மேலிருக்கிற பஞ்சுபோன்ற பொருளை வாங்கிவிட்டுப் பட்டை வெந்நீரில்போட்டு ஊறவைத்து, அதன் தலைப்பைக் கண்டுபிடித்து ஏழெட்டுநூல் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்டு சுற்றுவார்கள். எல்லாப் பட்டும் சுற்றி எடுத்தாகுமளவும் அவை வெந்நீரிலேயே போடப்பட்டிருக்கும்; ஆயினும் அந்தக் கூட்டிலிருக்கிற நூல் எல்லாம் எடுக்கப்படுவதில்லை. ஏனெனில், போகப்போக நூல் இளப்பமாய் நிறம் மாறிப்போம். அதற்கு உள்ளேயிருக்கின்ற கடிதம்போன்ற பொருளும் மேலேயிருக்கின்ற பஞ்சுபோன்ற பொருளும் அதிகமாய்ப் பிசினுடையதாகையால் அதை நன்றாய்க் கோதிப்பின்னி நார்களாயெடுத்து அற்பமான வேலைகளுக்கு உபயோகித்துக்கொள்கிறார்கள்.

பீபில்ஸ்பார்க் என்னும் சிங்காரத்தோட்டத்தில் நடக்கும் வருஷோற்சவம்.

வருகிற 1879-ஆ ஜனவரிமீ 1உ நமது காருண்ணிய மகாராணியாரவர்கள் இந்திய சக்கரவர்த்தினிப் பட்டம்சூடிய மகோற்சவதினமாகையால் அதைக் கொண்டாடுநிமித்தம் அதற்குமுன் இரண்டு நாளும், விசேஷமாய் அன்றும் பீபில்ஸ்பார்க் என்னும் சிங்காரத் தோட்டத்தில் நடத்தப்படுகிற மகா விநோதங்களை ஒவ்வொன்றாக நடக்கும்வண்ணம் விவரித்துச்சொல்லவேண்டுமானால் மிகவும் பெருகுமாதலால் அவற்றை ஒருவாறு சுருக்கித் தெரிவிக்கிறோம்.

மேற்கண்ட சிங்காரத்தோட்டத்தில் எப்போதும் ஜனசௌக்கியத்திற்கும், உல்லாசத்திற்கும், காலப்போக்கிற்குமாகவே நல்ல பரிமளமுள்ள அலங்காரமான பலவிதப் புஷ்பச்செடிகள், கொடிகள், விதம்விதமான விருக்ஷங்கள், நீரோடைகள், தடாகங்கள், நீர்வளைவுகள், செய்குன்றுகள், மேடைகள், ஊசல்கள், பீடங்கள், தீபஸ்தம்பங்கள் முதலியவெல்லாம் எவ்வெவ்விடத்தில் எவ்வெவ்விதமாக அமைக்கப்படவேண்டுமோ அவ்வவ்விடத்தில் அவ்வவ்விதமாகவே புத்தி சாதுரியத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அன்றியும் சிங்கம் புலிமுதலிய நாநாவித விந்தைவிந்தையான மிருகங்களும், மயில் குயில்முதலிய பற்பல அதிசயப் பக்ஷிகளும், நாநா நீர்க்காக்கை முதலிய வகைவகையான நீர்வாழ் பறவைகளும், ஊர்வன நீர்வாழ்வனவாகிய சர்ப்பங்கள் முதலைகள் முதலிய விதம்விதமான வேடிக்கை ஜெந்துக்களும் இவைமுதலியவெல்லாம் அததற்குத்தகுந்த இடங்களில் வெயில் மழைகளால் அபாயம் நேரிடாவண்ணம் கூடுமுதலியவை

களிலே விடப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் தினங்களில் செவிக்கின்பமான இங்கிலீஷ் வாத்தியங்களும் விநோதமாய் வாசிக்கப்படுகின்றன. ஜனங்கள் இவைகளை வெற்றுநாள்களிலேயே கண்டும் கேட்டும் ஆநந்தப்படுவது யாவர்க்குந் தெரிந்தவிஷயம்.

இவ்விதமான தோட்டத்தில் மேல்படி மூன்று தினங்களிலும் நடக்கும் அடியிற்குறிக்கின்ற விநோதங்களைக் கண்டவர் கொண்ட களிப்பிற்கு அளவில்லை. மேற்படி தோட்டத்தின் நான்கு வாயிலிலும் விசித்திரமான வளைவுகள் அமைத்து மேல்வளைவில் மெல்லிய கடிதத்தினால், ஒன்றில் இந்திய சக்கரவர்த்தினியாகிய மகாராணியார் அவர்கள் விருதும், மற்றொன்றில் ராஜாத்திவாழ்க என்றும், மற்ற இரண்டிலும் நமது கவர்னரவர்களைக்குறித்தும் எழுதப்பட்டிருந்தன.

உத்யானத்தின் அகத்தில் கனேடியன் பிளான்டின், இரண்டு ஸ்தம்பங்களை எதிரெதிராக நாட்டி, அவ்விரண்டின் நுனியில் நேராகக் கயிறுகட்டி, அக்கயிற்றின்மேல் முன்னும் பின்னுமாக நடத்தல், முகத்தை மூடிக்கொண்டு நடத்தல், ஒருகாலாலும் இருகாலாலும் நிற்றல், உட்கார்ருதல், ஆடல்முதலிய அருமையான விசித்திர வித்தைகளைக் காட்டியதுந்தவிர, இரண்டு சக்கரங்களை நேர்நேராகத்தொடுத்து அவ்விரண்டுக்கும் இடையில் ஓர் ஆள் உட்காந்துகொண்டு காலால் மிதித்து வீதிகளிற் செலுத்திக்கொண்டுபோவதுபோல் அக்கயிற்றின்மேற் செலுத்திய அருமையிலும் அருமையான செய்கையையும், இரண்டு கால்களிலும் இரண்டு கூடைகளைக் கட்டிக்கொண்டு அக்கயிற்றின்மேல் நடத்தல் மேசை நாற்காலிபோட்டுக்கொண்டு உட்காருதல் முதலிய ஆச்சரியமான வித்தைகளையும் காட்டினர். அவ்வித்தைக்காரரை யார் எவ்வளவு புகழினும் அவருக்குத்தக்கவையாகவே இருக்கும்.

மின்தாதுயந்திரவிநோதம் என்று ஒரு வித்தைசெய்தார்கள். அதாவது மின்தாது அமைந்த ஓர் பாத்திரத்தில் ரூபாய்களைப்போட்டு இஷ்டமானமட்டும் எடுத்துக்கொள்ளும்படி ஜனங்களுக்குச் சொன்னார்கள். அப்படியே பலர் எடுத்துக்கொள்ள முயன்றும், மின்தாதுவின் தன்மையைக் கற்றறிந்தவர்மாத்திரம் அதன் விகற்பத்தைத்தடுக்கும் கருவியின் சகாயத்தால் ரூபாய்களை எடுத்துக் கொள்ளும்படி நேரிட்டதேதவிர ஏனையோர் கைகளை உட்செலுத்தி எடுக்கமுடியாமல் வெறுங்கைகளைத் தூக்கிக்கொண்டனர்.

தூரத்து ஒலியைக் கம்பியின்வழியாய் அறிந்துகொள்ளும் விதத்தைக்காட்டுகிற அதிசயம் ஒன்று காட்டப்பட்டது.

ஓர் மனிதன்தலையைப் போலவே ஒருதலை ஒரு மேசையின் மீது இருந்தது. அதனுடன்பேச மனமுள்ளவர் கேட்ட கேள்விகளுக்கு அத்தலை மறுமொழி சொல்லிக்கொண்டுவந்ததும் ஓர் விந்

தையாக இருந்தது. ஆங்கிலேயதேசத்து விந்தையான பொம்மை களின் ஆட்டங்களும் விதம்விதமாய் ஆட்டப்பட்டன.

ஐரோப்பாவில் துருக்கர்களுக்கும் ருஷியர்களுக்கும் முன் நடந்த பயங்கரமான யுத்தத்தைப் படங்களினால் காட்டிய காட்சி நேரில் அவ்விருதிறத்தாரும் சினந்து போர்செய்கிற பாவனையாகவே இருந்தது.

ஓரிடத்தில் சித்திரப்பந்தல் ஒன்று அமைத்து, அதில் இரண்டு துரைகளாலும் ஓர் துரைசானியாலும் விசித்திரப்படங்கள் பொம் மை முதலிய நாநாவிதவஸ்துகள் பீடங்களில் வைக்கப்பட்டிருந் தன. அங்கே, திருவுளச்சீட்டுப்போட்டு எடுப்பதற்குப்பதிலாக, ஒவ்வொரு பொருளின் பெயரை ஒவ்வொரு சீட்டில் எழுதி ஒரு சுழல்பெட்டிக்குள்போட்டு அந்தச் சீட்டுகளுள் யாதொன்றும் வேற்றுமைதெரியாதபடி அந்தப் பெட்டியைச் சுழற்றிச் சீட்டுகளை நன்ருய்க் கலக்கச்செய்து, ஒரு ரூபாய்க் கட்டணம் கொடுத்தவர்கள் அவரவர் அதிர்ஷ்டத்துக்கு ஏற்றபடி வந்த சீட்டை எடுக்கும்படி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பலர்செய்து தாம்தாம் கொடுத்த பொருளுக்கு அதிகமதிப்பும், சம்மதிப்பும், குறைந்த மதிப்பும் உள்ள ஒவ்வொரு பொருளை அவரவர் அதிர்ஷ்டத்திற் குத்தக்கபடி எடுத்துக்கொண்டுபோனர்கள்.

ஓரிடத்தில் இஞ்சினீர் வேடம்பூண்டவரும், அவருக்குச் சகாய ரான பல உத்தியோகவேடம் தரித்தவர்களும் அவ்வவ்வேடத்திற் குரிய கருவிகளைக்கொண்டு இஞ்சினீர் உத்தியோகத்தைத் தற்சொ ருபமாகவே நடத்திக் காட்டினர்.

ஜாலவித்தை குஸ்தி இவ்விரண்டு செய்கைகளும் கண்டோர் கண்ணைக் கவருகின்றனவாக இருந்தன.

இந்துஸ்தானிப்பாடல் நல்ல கண்டத்தொனியுள்ளவர்களால் அப்பாடல்களுக்குரிய இசையோடு பாடப்பட்டபடியால் அது யாவரும் மெச்சத்தக்கதாகவிருந்தது.

தனிகர்முதல் அரசரீறன கண்ணியவான்கள் யானைமீது அம்பாரிவைத்து ஏறிச்செல்வதை எப்போதாயினும் அதிசயமாகப் பார்ப்பதுண்டு. அப்படிப் பார்ப்பதற்கே அருமையான அம் பாரியில் அவ்விடத்தில் சாதாரணமானவர்களும் அதிசொற்ப கட்டணம்கொடுத்து ஏறி உல்லாசமாய்ச் சுற்றிவந்தனர்.

விலாசங்களில் முதல்தொடங்கிக் கடைவாயில் சரித்தி ரம் தோரணையாக அமைக்கப்பட்டு, இசையும் இடங்களில் ஜனங் கள் கைகொட்டி நகைக்கத்தக்கனவாயும் சிரக்கம்பம் காக்கம்பம் செய்யத்தக்கனவாயும் பல அகசியம் முதலானவைகள் வெவ்வே றிடங்களில் பொருத்தப்பட்டிருந்தன. டம்பாசாரிவிலாசம், கிருஷ் ணவிலாசம், அரிச்சந்திரவிலாசம் ஆகிய இவைகளில் ஜனங்கள் ரம் மியப்படத்தக்க தகுதியான ஓர் சந்தர்ப்பத்தைச் சங்கிரகமாகப்

பொருந்தும்வண்ணம் ஆங்காங்குள்ள பற்பல விநோதங்களையும் ஒருங்குதிரட்டிக் கண்டோர் உள்ளங்களிகூர நடத்துவித்தனர். மேலும் டம்பாசாரிவிலாசத்தில் டம்பனுடைய பெயராமாற்றி வெகு விரயக்காரன் என்றும் இன்னும் ஏனையவரில் ஆவசியகமானவர்கள் பெயரையும் அவ்வாறே இசையும்வண்ணம் வெவ்வேறு பெயர்களாக அமைத்துத் தகாதமொழிகள் ஒன்றும் எடுத்துரையாமலும் சிற்றின்ப விஷயமில்லாமலும் வெகு யுக்திபுத்தியோடு நடத்துவித்த அருமையையும், சில குரங்குகளைக்கொண்டு ஓர்விலாசம் ஆட்டுவித்த விந்தையையும் என்னென்று இங்கு விவரிக்கக்கூடும்.

இவைமாத்திரமேயன்றித் தனியே நாநாவித பரிகாசக்கூத்துகளும் ஓரிடத்தில் நடத்தப்பட்டன. பழனிக்காவடியாட்டம், ஆண்பூதம்போலும் பெண்பூதம்போலும் இரண்டு நடமாடல் இவைகளும் பார்ப்போர்கண்களைக் கவர்ந்துகொண்டிருந்தன. இவ்விநோதங்களுக்குத் தக்கபடி கண்டோர் இப்படியும் ஓர் சிருட்டியிருக்கிறதாவென்று அதிசயிக்கும்படிக்குக் கடவுள் உண்டாக்கிய ஓர் கோழியானது நான்குகாலும் இரண்டு வாலுமுள்ளதாகக் காட்டப்பட்டது.

மேற்படி மூன்றுநாளும் இரவில் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை ஆகிய நிறமுள்ள ஒளிவட்டச் சித்திரக்கூடுகளில் (ராந்தல்) நிரைநிரையாக ஏற்றிய தீபாலங்காரங்கள் பார்ப்போர் விழிகளை இமைக்கவொட்டாமற்செய்தன.

மூன்றும்நாள் இரவில் நடத்திய பாணவிநோதங்கள் நமது இளவரசர் இவ்விராஜதானியில் பிரவேசித்திருந்தபோது ஒரு இரவில் கடற்கரையிலும் கப்பல்களிலும் நடத்திய பாணவிநோதங்களுக்கு ஏறக்குறைய இணைசொல்லத்தக்கனவே; அவற்றைக் கண்டோர் ஒவ்வொருவர் நாவும் பற்பலவாகச் சிறப்பித்ததென்றால் அவற்றின் பெருமையை எவ்வாறு எழுதுவது?

சிறுவர்க்கானகதை.

(சூரனன ஒரு தையற்காரன்.)

ஒருநாள் காலையில் தையற்காரச் சிறுவனொருவன் தன் வீட்டுத் தெருத்திண்ணையில் உட்காந்து தைத்துக்கொண்டிருக்கையில், தெருவில் ஒருவன் பேரீச்சம்பழம் விற்றுக்கொண்டுவந்தான். பேரீச்சம்பழமென்று கூவின கூச்சலைக்கேட்டு அந்தச் சிறுவன் அந்தப் பழக்காரனை அழைத்து, அவன் கொண்டுவந்தது நல்லபழந் தானாவென்று நன்றாய் நிதானித்துப்பார்த்துப் பழம் நன்றாயிருக்கவே ஐந்துபலம் பழம் வாங்கினான். பழக்காரனும் காலங்காலை

யில் நீ ஐந்துபலம் பழந்தானு வாங்குகிறுயென்று கொஞ்சம் திருப்தியில்லாமலேபேசிப் பழத்தைக் கொடுத்துவிட்டுப் போனுன்.

தையற்காரச் சிறுவனும் பழத்தை வாங்கிக்கொண்டு காலையில் பசிவேளைக்கு ஏற்றதாய் இந்தப் பழத்தை சுவாமிதான் கொடுப்பித்தார்; இதைத் தின்றுல் உடனே தேகத்தில் சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாகும் என்று சந்தோஷமடைந்தான். ஆயினும் கையிலிருக்கிற சொக்காயைத் தைத்துமுடியாமல் இப்பழத்தில் ஒரு கொட்டைகூட வாயில் போடக்கூடாதென்று தீர்மானித்துப் பழத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே சுறுசுறுப்புடன் தைக்க ஆரம்பித்தான். கொஞ்சநேரத்தில் அந்தப் பழத்தின் வாசனை எங்கும் பரவச் சுற்றுப்புறத்திலிருந்த ஈக்களெல்லாம்வந்து அதன்மேல் மொய்த்துக்கொண்டன. பழம்தெரியாமல் ஈக்கள்வந்து மொய்த்துக்கொள்ளவே தையற்காரன் ஐயோ! உங்களை யார் இப்போது வேண்டியழைத்தார்கள் என்றுசொல்லி அவைகளை ஒட்ட, அவை அப்படியே மறுபடியும் வந்து மொய்த்துக்கொண்டன. அவன் பேசுகிற பாஷை ஈக்களுக்குத் தெரியுமா? தான் சொன்னதைக் கேளாமல் அவை மறுபடியும் வந்து மொய்க்கக்கண்டு அவன் மிகக் கோபங்கொண்டு தன் மேல்துணியை எடுத்து அதன்மேல் பரப்பினுன். சற்றுநேரங்கழித்து அந்தத் துணியை எடுக்கும்போது ஏழு ஈ செத்து விழுந்துகிடக்கக்கண்டு, தன் சூரத்தனத்துக்காக மிகவும் பெருமையாய், ஐயோ பேதைப்பறவைகளா! என்றுசொல்லி, இந்த வீரச்செயலை இப்பட்டணத்தார் அனைவர்க்கும் அறிவிக்கவேண்டும் என்று நிச்சயித்து, ஒரு வஸ்திரத்தைப் பட்டையாய்த் தைத்து அதில் ஒரே அடியில் ஏழு என்று பெரிய எழுத்தாய் அமைத்துக்கொண்டு, இந்தப் பட்டணத்தார் மாத்திரம் இதை அறிந்தால் போதாது; இவ்வுலகமுழுதும் அறிய வேண்டுமென்று சொல்லி மிகவும் சந்தோஷமாய் ஆட்டுவால் போலத் துடித்துநின்றுன்.

அந்தச் சிறு தையற்காரன் பட்டையை அறையில் கட்டிக்கொண்டு தன் சாமர்த்தியத்திற்குத் தன் தையல்வேலை மிகவும் அற்பமானதென்று எண்ணி உலகமெங்கும் சுற்றிவரச் சித்தமானுன். போம்போது வழிக்கு வீட்டில் என்ன இருக்கிறதென்று பார்க்க, இரண்டு தோசையிருக்கவே அதை எடுத்துக்கொண்டு வீட்டு வாயிலண்டை சிறு பறவையொன்றிருக்கக்கண்டு அதையும் பிடித்துப் பையில் போட்டுக்கொண்டு பிரயாணப்பட்டான். அவனுக்கு உடம்பு லேசாயிருப்பதோடுகூடச் சுறுசுறுப்பும் அதிகமாயிருந்ததனுல், வழிநடப்பதுபற்றி அவனுக்கு இளைப்புண்டாகவேயில்லை. அவன் புறப்பட்டுப்போனவழி அவனை ஒரு பெரிய மலைமேல் கொண்டுவிட்டது. அம்மலை நுனிபோய்ச் சேருகையில்

தையற்காரன் அங்கே ஒரு பெரிய ராக்ஷதன் உட்காந்திருக்கக் கண்டான். அந்த ராக்ஷதனும் வெகுதூரத்திலிருந்து அந்தச் சிறு பயலை மிகவும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

தையற்காரச் சிறுவன் தைரியமாயே அந்த ராக்ஷதனண்டை போய், வந்தனம் ஐயா தோழரே! நீர் இவ்வளவு உயரத்தில் உட்காந்து உலகத்தையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும்படியான பாக்கியம் பெற்றது உம்முடைய அதிர்ஷ்டந்தான். என்னுடைய அதிர்ஷ்டத்தையும் பார்க்கவேண்டுமென்றுதான் நானும் போய்க்கொண்டிருக்கிறேன்; என்னோடுகூட நீங்களும் வருவீர்களா என்று கேட்டான். அந்தப் பேச்சைக்கேட்டு ராக்ஷதன், அடா போக்கிரிப்பயலே! அடா துர்ப்பாக்கியப்பயலே! என, தையற்காரன், நீர் அப்படித்தான் சொல்வீர்; இதைப் படித்துப் பாரும், என் சுபாவம் எத்தன்மையதோ தெரியும் என்றுசொல்லித் தான் அரையில் கட்டிக்கொண்டிருந்த பட்டையை அவிழ்த்துக்காட்டினன். 'ஒரே அடியில் ஏழு' என்று அதில் எழுதியிருந்ததைப்பார்த்து, ஒரே அடியில் ஏழு மனிதர்களைக் கொன்றவனென்று நினைத்து ராக்ஷதன் அவனிடத்தில் கொஞ்சம் கண்ணியம் பாராட்டினன். ஆயினும் அவன் திறமையைக் கொஞ்சம் பரிசோதிக்க வேண்டுமென்று கீழேகிடந்த ஒரு பாறையைத் தான் கையில் எடுத்து அதினின்றும் தண்ணீர் சொட்டும்படியாகக் கையால் நசுக்கிப் பிழிந்து, எதோ உனக்கும் வலிமையிருந்தால் இம்மாதிரி செய் பார்ப்போம் என்றான்.

அதற்குத் தையற்காரன் இதொரு பெரியகாரியமா? எனக்கு இது ஒரு விளையாட்டுதானேயென்று சொல்லி, தன் பைக்குள் கையைப்போட்டு ஒரு தோசையை எடுத்து அது தூள்தூளாய்க் கீழே விழ்ந்துபோம்படிப் பிசைந்து, இதைவிட நீர் செய்தது ஒரு அதிசயச் செய்கையாய் எனக்குத் தோன்றவில்லையென்றான். அதைக்கண்ட ராக்ஷதனுக்கு அந்தச் செய்கையின் கருத்து இன்னதென்று தெரியாமல் ஒன்றும் பதில்சொல்லத் தோன்றவில்லை. அந்தச் செய்கையால் அவன் பலசாலியென்று நம்பமாட்டாமல் மற்றொரு பெரும்பாறையை எடுத்து, ஒருவரும் காணக்கூடாத உயரம்போம்படி ஆகாயத்தில் வீசியெறிந்து, அடா சிறுபயலே! இம்மாதிரி செய் பார்ப்போம் என்றான்.

அதைக்கண்டு தையற்காரன், நீர் பெரியகாரியம் செய்தீரே! நீர் எறிந்தகல் மறுபடி பூமியில் வந்துவிழாமல் அப்படியே பறந்தோடிப்போமோ! இதோ நான் ஒன்று எறிகிறேன்; இது மறுபடிப் பூமிக்குத் திரும்பிவருகிறதா பாரும் என்றுசொல்லித் தான் பிடித்துவந்த பறவையை எடுத்து உயர எறிந்தான். அந்தப் பறவை கட்டிலிருந்து விடுபடவே வெகு சந்தோஷமாய் மறுபடி அந்த

முகமே திரும்பாமல் நேராய் ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் உயரப்பறந்துபோய்விட்டது. அதைப்பார்த்து அந்தச் சிறுவன், இப்போது நான் செய்த விநோதச்செயல் உமக்கு எப்படியிருக்கிறது ஐயா தோழரே என்றான்.

அதற்கு ராக்ஷதன், நீ உயர எறிவதில் வல்லவன்தான்; ஒருவரும் எடுக்கமாளாத ஒரு பெரிய பொருளைத் தூக்கத்தகுந்த வல்லமை உனக்கு இருக்கிறதோ இல்லையோ பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கொஞ்சந்தூரத்தில் வெட்டித் தள்ளியிருந்த ஒரு பெரிய ஆலமரத்தண்டை அவனை அழைத்துக்கொண்டுபோய், பையலே! இந்த மரத்தை இக்காடுதாண்டி அப்புறம் கொண்டுபோகவேண்டும்; நீ பலசாலியானால் என்னோடுகூட ஒருகை பிடிபார்ப்போம் என, சிறுவன், இதற்கென்ன? அப்படியே பிடிக்கிறேன்; நீர் முதலில் அடிப்புறத்தைத் தூக்கித் தோளிலே வைத்துக்கொள்கிறீரா; கப்பும் கிளையுமாய் அதிக பளுவான நுனியை நான் தூக்கிக்கொண்டுவருகிறேன் என்றான்.

அப்படியே ராக்ஷதன் முன்னே அடிமரத்தைத் தூக்கிக்கொண்டான். தையற்காரன் தான் மரத்தைத் தூக்கிக்கொள்வதற்குப் பதிலாக ஒரு கிளைமேல் ஏறி உட்காந்துகொண்டு நடவும் ஐயா என்றான். தோளில் சுமை தாங்கியிருப்பதனால் ராக்ஷதன் திரும்பிப் பின்னேபார்க்கமாட்டாமல் அவனும் நுனியில் தூக்குகிறானென்று எண்ணினான். அதனால் மரத்தைமாத்திரமேயன்றி தையற்காரனையும் அவன் இழுத்துக்கொண்டு போம்படியாயிற்று. தையற்காரன் தன் சூதைக்கண்டு தானே கொக்கரித்து, தான் ஒரு விளையாட்டாய் அம்மரத்தைத் தூக்கிக்கொண்டுபோகிறவன்போல, விநோதமாகப் பாடத்தொடங்கினான். ராக்ஷதன் கொஞ்சம்தூரம் போனபிறகு, அந்தப் பெருஞ்சுமையைத் தான் ஒருவனே தூக்கிக்கொண்டுவந்ததனால் ஓய்ந்துபோய் அப்புறம் போகமாட்டாமல், நான் சொல்வது கேட்கிறதா? நான் மரத்தைக் கீழே போட்டுவிடுகிறேன் பையலே என்று கூவினான். அதைக் கேட்டவுடனே தையற்காரன் சரேலென்று கீழே குதித்து, அம்மரத்தை முதலிலிருந்து தானே தூக்கிக்கொண்டுவந்தவன்போலக் கிளைகளையெல்லாம் சேர்த்து இரண்டு கையாலும் அணைத்துத் தூக்கிக்கொண்டு, நீர் இவ்வளவு பெருத்த மனிதராயிருக்கிறீர்! இம்மரத்தைத் தூக்கிக்கொண்டுபோகமாட்டாமல் தவிக்கிறீரே என்றுசொல்லி மரத்தைக் கீழே போட்டான்.

அங்கிருந்து புறப்பட்டு அவ்விருவரும் அப்புறம்போனார்கள். வழியில் குலுங்கப்பழுத்த நாவல் மரமொன்றைக்கண்டு ராக்ஷதன் அளிந்தபழங்கள் நிறைந்த நுனிக்கிளையொன்றைப் பிடித்துத் தையற்காரன் கையிற்கொடுத்துப் பழம்பறித்துத் தின்னச்சொன்னான். அந்தக் கிளை மேலே இழுக்கிற விசைக்குத் தையற்காரன் வலிமை

சிறிதும் ஈடில்லாமலிருக்கவே, ராக்ஷதன் அந்தக் கிளையைவிட்டதும் அது தையற்காரனையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற்போய் மறுபடி அவனை எதிர்ப்புறத்தில் கொண்டுதள்ளிற்று. ஆயினும் அவனுக்கு அபாயம் ஒன்றும் உண்டாகவில்லை. அந்த அதிசயத்தைக் கண்டு ராக்ஷதன், இதென்ன, நீ அப்படிப்போய் விழுந்தாயே? உனக்கு அந்தக் கிளையை இழுத்துப் பிடித்துக்கொள்ளும்படியான வலிமையில்லையா? என, அந்தச் சிறுவன், வலிமை ஏன் இல்லாமற் போயிற்று? ஒரே அடியில் ஏழு கொன்றவனுக்கு இதொரு பெரிய காரியமென்று உனக்குத் தோன்றுகிறதா? அதோ ஒரு தோப்பின் நடுவே நின்றுகொண்டு வேடர்கள் வில்லெடுத்து அடிப்பதைப் பார்த்து நான் மரத்தின்மேல் தாவிக்கொண்டேன். உன்னுலாகுமானல் நீயும் என்னைப்போலத் தாவுபார்ப்போமென்றான். ராக்ஷதன் அதேவிதமாய்ச் செய்யப்போய் அடிமரத்தில் அறைபட்டு வீழ்ந்தான். இப்படியாக இந்தவிஷயத்திலும் தையற்காரனே வல்லவனானான்.

இந்தச் செய்கைகளைப்பார்த்து ராக்ஷதன், ஓகோ இந்தப் பையல் பரமதுஷ்டனாயிருக்கிறானேயென்று நினைத்து, நீ இவ்வளவு வீரனாயிருப்பதனால் இன்று ராத்திரி எங்கள் வீட்டில் வந்திருந்து காலையில் அப்புறம்போ என்றுசொன்னான். தையற்காரனும் அப்படியே ஆகட்டுமென்று அவனோடுகூடப் போனான். ராக்ஷதனுடைய குகையிலே நுழைகையில் அங்கே இரண்டு ராக்ஷதர்கள் கையில் ஆடுகளைவைத்துத் தின்றுகொண்டு நெருப்பண்டை உட்கார்ந்திருந்தார்கள். அதைப்பார்த்துத் தையற்காரன், இந்தவிடம் நம்முடைய தையற்கடையைவிட மிகவும் பெருமைபெற்றதாய்க்காணப்படுகிறதேயென்று எண்ணி அதனருகேபோய் உட்கார்ந்தான். கொஞ்சநேரத்தில் ராக்ஷதன் ஒரு படுக்கையைக் காட்டி அதில் தையற்காரனைப் படுக்கச்செய்தான். அந்த ராக்ஷதப்படுக்கை அந்தச் சிறுபையனுக்கு மிகவும் பெரிதாயிருந்ததனால், அதில் அவன் எங்கேயோ ஒரு மூலையில் சுருட்டிக்கொண்டிருந்தான். நல்ல நிசிவேளையில் ராக்ஷதன் விழித்துக்கொண்டு, இப்போது தையற்காரன் நல்ல தூக்கமாயிருப்பான், இதுதான் தருணமென்று பெரிய இருப்புத்தடியொன்றை எடுத்து அவன் படுத்திருந்த படுக்கையை நடுவே நன்றாய் அடித்து, இவன் இவ்வளவோடு இறந்துபோயிருப்பானென்று சந்தோஷமடைந்தான். அந்த அடி ஒன்றுகூடத் தையற்காரன் மேல் படவில்லை. பொழுதுவிடிந்தவுடனே ராக்ஷதர்கள் தையற்காரனை மறந்து வழக்கப்படியே காட்டுக்குப் போய்விட்டார்கள். கொஞ்சநேரத்தில் தையற்காரனும் எழுந்து வெளியேபோக, ராக்ஷதர்கள் அவனைக் கண்டு இவன் எப்படிப் பிழைத்துவந்தான்; அதிக வல்லவனாயிருக்கிறானே; இவன் யாவரையும் கொன்றுபோடுவானென்று திகிலடைந்து ஓடிப்போனார்கள்.

அங்கிருந்து புறப்பட்டுத் தையற்காரன் தன் மனம்போன வழியெல்லாம் போய்த்திரிந்து கடைசியில் ஒரு ராஜமாளிகை போய்ச்சேர்ந்து, உடம்பு மிகவும் தள்ளாமையாயிருந்ததனால், அம்மாளிகையின் வெளிப்புறத்திலே படுத்துத் தூங்கிப்போனான். அங்கிருந்த மனிதர்கள் வந்து அவனைப்பார்த்து, அவன் பட்டையில் 'ஒரே அடியில் ஏழு' என்று எழுதியிருந்ததைப் படித்துப்பார்த்து, ஓகோ இவன் மகா வீரனாய்க் காண்கிறானே! இப்படிப்பட்ட சூரன் இங்கே ஏன்வந்து படுத்திருக்கிறானென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு அரசனண்டைபோய் இங்கே ஒரு யுத்தவீரன் வந்திருக்கிறான்; அவனை நாம் ஒருபோதும் கைவிடக்கூடாதென்று சொல்ல, அரசன் கொஞ்சநேரம் ஆலோசித்து, அவன் யார்? என்ன செய்தி? நம்மிடத்தில் ஒரு ராணுவத்தலைவனாய் அமர்ந்திருப்பானா? இவையெல்லாம் விசாரித்துவரும்படிக் கடிதமெழுதிக்கொடுத்துத் தூதனுப்பினான். அந்தத் தூதன் தையற்காரனண்டைபோய்க் காத்திருந்து அவன் எழுந்ததும் ராஜாவின் கட்டளையைக் காட்ட, தையற்காரன் அதைப் படித்துப்பார்த்து, வெகு சந்தோஷம்; அதற்காகவே நான் இப்போது இங்கே வந்தது. நம்முடைய அரசனுக்கு ஆட்படச்சித்தமாய்க் காத்திருக்கிறேன் என்று சொன்னான். ராஜா அதை மிகவும் சந்தோஷமாய் அங்கீகரித்து அவனுக்கு வேண்டிய மரியாதைசெய்து சிறந்த ஒரு மாளிகையில் அவனை வசிக்கச்செய்தான்.

ஆயினும் சிலநாளில் அந்த அரண்மனை உத்தியோகஸ்தர்கள் அனைவரும் அந்தத் தையற்காரனுடைய பெருமையைப்பார்த்துப் பொறுக்கமாட்டாமல், நாம் இவனை இங்கே வைக்கக்கூடாது; சமயம்வந்தால் நம்மைக்கூட ஒரேஅடியில் கொன்றுபோடுவானே; இதற்கு நாம் செய்யவேண்டுவதென்ன என்று ஆலோசித்து யாவரும் கும்பலாய்க்கூடி அரசனண்டைபோய், ஐயா, ஒரேஅடியில் ஏழுபேரைக் கொல்லும்படியான மனிதனோடு கூடியிருக்க எங்களுக்கு இஷ்டமில்லை; நாங்களெல்லாரும் இன்னும் எங்கேயாவது போய்விடுகிறோமென்று முறையிட்டார்கள். அதைக்கேட்டு அரசன் இத்தனைநாளாய்த் தனக்கு மனமொத்திருந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாரையும் யாரோ முகமறியாத ஒருவனுக்காக எப்படி இழந்துபோகிறது? புதுமனிதனைப் போய்விடச்சொல்வதே நல்லது என்று நினைத்தான். ஆயினும் அந்த வீரனை எப்படிப் போவென்று சொல்கிறது? நாம் போவென்று வாயெடுப்பதற்குமுன்னமே நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களையுங்கூட கொன்றுவிட்டுச் சிங்காசனத்தில் தானேறி உட்கார்ந்தால் என்னசெய்கிறதென்று திகிலடைந்து அதற்காக நெடுநேரம் ஆலோசனைசெய்தான். கடைசியில் நயமாயே இவனை விலக்கவேண்டுமென்று தீர்மானித்து அவனை வரவழைத்து, அப்பா, நீ வெகு சூரனாயிருக்கிறாயே! நமது ராஜ

யத்திற்குப் பெரியகாரியமொன்று உன்னாலேதான் ஆகவேண்டும். இந்தப் பட்டணத்துக்கு அப்பால் ஒரு காட்டிலே இரண்டுகொடிய ராக்ஷதர் இருக்கிறார்கள். அவர்கள் நெருப்புவைத்துக் கொளுத்துவதும் கொலைசெய்வதும் கொள்ளையாடுவதுமாய் நாடுகளை நாசப்படுத்திவருகிறார்கள். அவர்களண்டைபோக எவரும் பயப்படுகிறார்கள். அங்கே போனவன் மறுபடியும் பிராணனோடு திரும்புவதில்லை. நீ போய் அவர்களைக் கொன்றுவிட்டு வருவாயானால், என் மகளையும் உனக்குக் கலியாணஞ்செய்துகொடுத்து என் நாட்டில் பாதியும் வெகுமதியாய்க் கொடுக்கிறேன்; வேண்டுமானால் இப்போது நூறு வீரர்களை உனக்குத் துணையாய்க் கூட்டியனுப்புகிறேன் போய்வா என்றான்.

தையற்காரன் அதைக்கேட்டு, நம்மைப்போன்றவர்களுக்கு இதொரு பெரிய காரியமா! ஒரு ராஜகன்னிகையும் பாதிராஜ்யமும் எளிதில் கிடைக்கத்தக்கதாவென்று தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு, அப்படியே ஆகட்டும் ஐயா, அந்த ராக்ஷதர்களுடைய தொல்லையை ஒருநொடியில் தீர்த்துப்போடுகிறேன். இந்த அற்பகாரியத்திற்கு நூறுவீரர்களின் துணைகூடவேண்டுமா? ஒரேஅடியில் ஏழுகொன்றவன் இரண்டுபேரிடத்தில் அஞ்சுவானா என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டுத் தையற்காரன் காட்டுக்குப்போகப் புறப்பட்டான். நூறு போர்வீரரும் அவனைப் பின்தொடர்ந்துபோனார்கள். காட்டோரம்போய்ச் சேர்ந்தவுடனே தையற்காரன் போர்வீரர்களையெல்லாம் அங்கேயே நிறுத்திவிட்டுத் தான் மாத்திரம் ராக்ஷதர்களைத் தேடிக்கொண்டு காட்டினிடையே சென்றான். அவன் திரும்பித்திரும்பி இருபுறமும் பார்த்துக்கொண்டுபோகையில் கொஞ்சந்தூரத்துக்கப்பால் ஒரு மரத்தடியில் இரண்டு ராக்ஷதர்கள் படுத்துக்கொண்டு தேக ஸ்மரணையில்லாமல் மரங்கூட முறிந்துவிழும்படிப் பெருங்குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களைக்கண்டு தையற்காரன் அதிக தைரியமும் சுறுசுறுப்புமுடையவனாய் மடிநிறையக் கற்களைப் பொறுக்கிக் கட்டிக்கொண்டு அம்மரத்தின்மேலேறி அந்த ராக்ஷதர்களுக்கு நேராய் ஒரு கிளையில்வந்து உட்கார்ந்துகொண்டு முதலில் ஒரு ராக்ஷதனுடைய மார்பில் ஒன்றின்பின் ஒன்றாய்க் கற்களை எறிய ஆரம்பித்தான். ஆயினும் அந்த ராக்ஷதன் கொஞ்சநேரம்வரையில் சிறிதுகூடச் சலிக்கவேயில்லை. பிறகு அந்த அடி உடம்பில் நன்றாய் உறைக்கவே கொஞ்சம் நினைவுவந்து அண்டையில் படுத்திருந்த தோழனை நெட்டித்தள்ளி, நீ ஏன் இப்படி என்னை அடிக்கிறாயென்றான்.

அதைக் கேட்டு அந்த ராக்ஷதன், நீ என்ன கனவுகண்டாயோ? உன்னைத் தொட்டது யார்? என்றுசொல்ல, மறுபடியும் அப்படியே

இருவரும் தூங்கிப்போயினார்கள். சிறிதுநேரத்திற்குப்பிறகு தையற்காரன் மற்றொரு ராக்ஷதன்மேல் கற்களை எறிய ஆரம்பித்தான். அது உடம்பில் உறைக்க அந்த ராக்ஷதன், நீ ஏன் இப்போது என்னை இப்படிக் குத்துகிறாயென்று மற்றொருவனைக் கேட்டான்.

அந்தப் பேச்சைக்கேட்டு அவன், உன்னை யார் தொட்டது? நீகூடக் கனவுகாண்கிறாயோ என்னவோ என்றான். இப்படிச் சற்றுச் சர்ச்சரவுசெய்து உடம்பு மிகவும் ஒய்ந்திருந்ததனால் இருவரும் உடனே மறுபடியும் தூங்கிப்போயினார்கள். பின்பு தையற்காரன் மிகவும் பெரிதாய் ஒரு கருங்கல்லை எடுத்துத் தன் பலத்தையெல்லாங்கொண்டு முதல் ராக்ஷதன் மார்பில் எறிந்தான். அந்த அறைபட்டு உடம்பு நன்றாய் நோகவே, நீ இப்படியும் கொடுமைசெய்யலாமோ? இப்படிச் செய்வது தகுதியன்று எனக் கூவிக்கொண்டு பித்தம்பிடித்தவன்போலச் சரேலென்று எழுந்து மற்றொரு ராக்ஷதன்மேல்விழ, அதனால் அவனும் மிக்க உடம்புநொந்து இவன்மேல் பாய்ந்தான். இப்படியே ஒன்றின்மேலொன்றாய் இருவருக்கும் கோபம் அதிகரிக்க, இருவரும் இரண்டு பெருமரத்தைப் பிடுங்கி அறைந்துகொண்டு மாண்டுபோனார்கள்.

இப்போது தையற்காரச் சிறுவனுக்கு உண்டான ஆனந்தத்தை என்னசொல்லலாம்! நமது பாக்கியமே பாக்கியம்! மரத்தைப் பிடுங்கினவர்கள் நாமிருக்கிற மரத்தைப் பிடுங்காமல் தப்பினார்களே! இதைப் பிடுங்கியிருந்தால் நாம் எப்பாடுபடவேண்டுமோவென்று சொல்லிக் கொக்கரித்தான். பின்பு தன் கத்தியை உருவி அவ்விருவர் மார்பிலும் பெரும்காயம் செய்துவிட்டுக் காட்டுக்கப்பால் நின்று காத்திருக்கும் வீரர்களண்டைபோய், நினைத்த காரியத்தை முடித்தாயிற்று; ஆனால் இக்காரியம்மட்டும் மிக்க சாகசமானதுதான்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெருமரத்தைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு ஓடிவந்தார்கள். ஆயினும் எழு கொன்றவன்முன் இவர்களெங்கே என்றான்.

அவர்கள் அவன் சொன்ன பேச்சைக்கேட்டு, உனக்கு ஒரு காயமும் படவில்லையா என்று கேட்க அவன், அதேது! என் தலைமயிரில் ஒன்றைக்கூட அவர்கள் அசைக்கவில்லை என்றான். ஆயினும் அவர்கள் தாங்களே நேராய்ப்போய்ச் செத்து வீழ்ந்துகிடக்கும் இரண்டு ராக்ஷதர்களையும் அவர்கள் பக்கத்தில் இரண்டு பெரிய மரங்களையும் காணுமளவும் அவர்களுக்கு அவன் சொன்னபேச்சில் நம்பிக்கை உண்டாகவில்லை. அதை நேராய்ப் போய்ப்பார்த்துப் பிறகு மனந்தெளிந்தார்கள்.

இச்செய்தியைக் கேட்டு ராஜா இனி என்னசெய்கிறதென்று மிகவும் துக்கமடைந்தான். தையற்காரன் போய் முன் வாக்குக் கொடுத்தபடியே வெகுமதி நடத்தவேண்டுமென்று வருத்த அதி

னும் அதிகமான துக்கமடைந்து அவனை ஒழிக்கப் புதிதாய் வேறொரு வழிதேடினன். அதாவது: நீ என் மகளையும் பாதிராஜ்யத்தையும் கைக்கொள்வதற்குமுன்னமே மற்றொரு வீரச்செயல் செய்யவேண்டும். இந்நாட்டில் ஒரு காட்டிலே மிகவும் கொடிய கட்கமிருகம் ஒன்று இருக்கின்றது. அது இந்நாட்டில் செய்து வரும் தீமைகளுக்கு அளவில்லை. அதைப் பிடிக்கத்தக்கவன் உன்னைத்தவிர வேறொருவரும் இல்லை. இக்காரியத்தை நீ நிறைவேற்றி வரவேண்டுமென்றான்.

அதைக்கேட்டுத் தையற்காரன், இரண்டு கொடிய ராக்ஷதர்களைக் கொன்றவனுக்கு ஒரு காட்டுமிருகத்தினிடத்திற் பயமென்ன? 'ஒரே அடியில் ஏழு' என்பது என் பிருதல்லவா என்று சொல்லி விட்டு ஒரு கத்தியும் கயிறும் கையிற்கொண்டு பல வீரர்களோடு புறப்பட்டு, அவ்வீரர்களையெல்லாம்காட்டிற்கு வெளியிலேயே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் காட்டுக்குள்ளே பிரவேசித்தான். காட்டிற்புகுந்து அவன் அந்தக் கட்கமிருகத்தைத் தேடிக்கொண்டு கொஞ்சந்தூரம் போகையிலேயே அது இவன் நாற்றத்தை அறிந்து இவனைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தது. அதைப்பார்த்து அந்தச் சிறுவன், மெதுவாய் வா; மெதுவாய் வா! என்று சொல்லிக்கொண்டே அது பக்கத்தில் வருமளவும் அங்கேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அது நெருங்கிவந்ததருணத்தில் அண்டையிலிருந்த ஒரு மரத்தண்டை மறைய, அது அதிககோபங்கொண்டு அம்மரத்தை ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்தது. பாய்ந்தவேகத்தில் அதன் கொம்பு மரத்தில் நன்றாய்ப் பொத்திக்கொண்டது; மறுபடி பெயர்க்கக்கூடவில்லை. இனி அது அவன் கையிற்பிடிபட்டதுதானே! அதைக் கண்டு தையற்காரன் நான் ஜயித்தேன் என்று கூவிக்கொண்டு அம்மறைவிடத்திலிருந்து வெளியேவந்து கையிலிருந்த கயிற்றை அதன் கழுத்தில்கட்டிப் பிடித்துக்கொண்டு மரத்தில் பொத்தியிருந்த கொம்பைக் கத்தியால் தறித்துவிட்டு அந்த மிருகத்தை அரசனிடத்திற்கு இழுத்துக்கொண்டுபோனன்.

இப்பொழுதும் தான் வாக்குத்தத்தஞ்செய்த வெகுமானத்தைக் கொடுக்க அரசனுக்கு மனம்வரவில்லை. அதனால் மற்றொரு உபாயஞ்செய்து அவனைக் கொல்ல முயன்றான். அதாவது, இத்தேசத்தில் ஒருவர் கையிலும் அகப்படாமல் மிகத்தீமை விளைவிக்கின்ற ஒரு காட்டுப்பன்றியைப் பிடித்துத் தரவேண்டுமென்றான். அதைக் கேட்டுத் தையற்காரன் வெகு சந்தோஷமென்று சொல்லிப் புறப்பட்டு அரசன் கூட்டியனுப்பின வேட்டைக்காரர்களை வெகு தூரத்திலேயே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் தனியே பன்றியைத் தேடிக்கொண்டுபோனன். அந்தப் பன்றியின் பலத்தை அவனுடன் வந்த வேட்டைக்காரர்கள் பலதடவை பார்த்திருக்கிறார்களாகை

யால், தாங்கள் அதனண்டைபோகாமல் நின்றதற்காக அவர்கள் அதிக சந்தோஷம் அடைந்தார்கள். தையற்காரன் காட்டில் நுழைந்தவுடனே பன்றி அதிககோபங்கொண்டு இவனை ஒரேமிதியாய் மிதித்துவிடவேண்டுமென்று ஓடிவர, அது கண்டு அதிகலாகவமும் சாமர்த்தியமுமுள்ள சூரனுன தையற்காரன் அருகிலிருந்த ஒரு காட்டுமாளிகைக்குள் நுழைந்தான். பன்றியும் அவன் பின்னேயே அதற்குள் நுழைந்தது. அதைப்பார்த்துத் தையற்காரன் அம்மாளிகையின் எதிர்ப்புறத்திலிருந்த ஒரு சாளரத்தின் வழியாய் எழும்பிக் குதித்து வெளியேவந்து வாயிற்கதவைப் பூட்டிக்கொண்டான். அவன் ஏறிக்குதித்த சாளரத்தின்வழியாய் ஏறிக்குதிக்கமாட்டாமல் பன்றி அதற்குள்ளே சணப்பன் வீட்டுக்கோழிபோலத் தானே சிறையாய் அகப்பட்டுக்கொண்டது. அதைக்கண்டு தையற்கார வீரன் மிகவும் சந்தோஷமடைந்து வெகுதூரத்திலே நின்றுகொண்டிருந்த வேட்டைக்காரர்களை அழைத்து அதை அவர்களுக்கு நேராய்க் காட்டிவிட்டுத் தனக்கு வரவேண்டிய வெகுமானத்தைக் கேட்க அரசனிடம்சென்று, நீ சொன்னபேச்சைத் தவருது நிறைவேற்றுவாயா மாட்டாயா? இப்போது உன் மகளைக் கலியாணஞ்செய்து கொடுத்துப் பாதிராஜ்யத்தையும் என் வசத்தில் ஒப்புவிப்பதற்கு என்னதடை என்ருன். அவனெருபோர்வீரனன்று, அற்பமான தையல்வேலைக்காரன் என்று தெரிந்தால் அந்த ராஜா இன்னும் எப்படி மனவருத்தப்படுவானே? தனக்கு உள்ளூற விருப்பமில்லாவிட்டாலும், இன்னும் காலதாமதஞ்செய்ய வழிதோன்ருமையாலும், தன்னையும் கொன்றுபோடுவானென்கிற திகிலினுலும் உடனே கலியாணத்தை நடப்பித்துப் பாதிராஜ்யமும் அவனுக்குக் கொடுத்துவிட்டான்.

அப்படியிருக்க ஒருநாள் அந்த ராஜாவின் மகள், தன் கணவனை தையற்காரன் ராத்திரி தூக்கத்தில், அடா பையலே! அந்தச் சொக்காயை நன்ருய்த் தை; கைகள் திட்டமாயிருக்கட்டும்; இல்லாவிட்டால் உன் காதில் கல்லைக்கட்டித் தொங்கவிடுவேன் என்று இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கக் கேட்டு, இதென்ன யாரோ ஒரு கேடுகெட்ட தையற்காரன் நமக்கு நாயகனுய் வந்து வாய்த்தானே யென்று அதைத் தகப்பனிடத்தில் முறையிட்டு அவனை எப்படியாவது துரத்திவிடவேண்டும்; இல்லாவிட்டால் நான் உயிரோடு இரேனென்று அழுதாள். அதைக்கேட்டு ராஜா, அப்படியே ஆகட்டும் குழந்தாய்! விசனப்படாதே; நீராத்திரி படுக்கும்போது கதவைத் திறந்துவிட்டுப்படு; அவன் நன்ருய்த் தூங்குகிற தருணத்தில், சேவகர்கள்வந்து அவனைக் கட்டிக் கப்பலில் கொண்டுபோட்டுத் தேசாந்தரத்தில்கொண்டு விட்டுவரும்படி திட்டம்செய்கிறேன் என்றுசொல்லிச் சமாதானப்படுத்தினுன். இச்செய்தியை அண்டையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த வேலைக்காரர்கள் அதைச் சிற்றாசனுன

தையற்காரனுக்கு அறிவிக்க அவன், இக்காரியத்தை எப்படித்தான் நடத்துகிறார்களோ பார்ப்போம்; இதற்கு உபாயஞ்செய்ய என்னால் ஆகாதா என்றிருந்தான்.

அன்றிராத்திரி தையற்காரன் தன் மனையாளுடன் வழக்கப்படியே படுக்கை அறையில் படுத்தார்கள். கொஞ்சநேரங்கழித்து அரசன் மகள் தன் கணவன் தூங்கிப்போனானென்று எண்ணிக் கதவைத் திறந்து விட்டு வந்து முன்போலவே படுத்துக்கொண்டாள். தையற்காரன் தூங்கிப்போனதாய்ப் பாசாங்குசெய்தானேயொழிய வேறில்லை. தன் மனைவி வந்து படுத்ததும் அவன், அடா பையலே! சொக்காயை நன்றாய்த் தை; கைகளெல்லாம் ஒழுங்காயிருக்கட்டும்; இல்லாவிட்டால் உன் காதில் கல்லைகட்டித் தொங்கவிடுவேன்; நான் ஒரே அடியில் ஏழுகொன்றேன்; இரண்டு ராக்ஷதர்களை மாள்வித்தேன்; ஒரு கட்கமிருகத்தைப் பிடித்துக் கட்டிப்போட்டேன்; ஒருவர் கையிலும் அகப்படாத காட்டுப்பன்றியையும் பிடித்தேன்; அப்படிப்பட்ட நான் இதோ இவ்வறைக்கு வெளியேவந்து காத்திருக்கும் பேதைப்பையல்களுக்கா பயப்படப்போகிறேன்? என்று உரத்துக் கூவினான். அந்தப் பேச்சைக் கேட்டவுடனே அங்கே காத்திருந்த சேவகர்களெல்லாரும் மிகவும் பயந்து ஓடிப்போய்விட்டார்கள். பிறகு ஒருவரும் ஒருநாளும் அவனை எதிர்க்கத் துணியவில்லை. இப்படியாக ஒரு எளிய தையற்காரன் தேசாதிபதியாகி அரசாட்சிசெலுத்தலானான்.

சமாசாரம்.

ஆப்கன்தேசத்து யுத்தம்.—ஆப்கன்தேசத்தரசனான அமீர்க்கும் இந்திய துரைத்தனத்தார்க்கும் இப்போது யுத்தம் உண்டானதற்குக் காரணம் இன்னதென்று இச்சஞ்சிகையின் முதலிலே ஆப்கன்தேசத்து வரலாற்றில் சொல்லியிருக்கிறோம். கபிலதேசத்து அமீராகிய ஷியராலியின் அகத்தை அடக்குவதற்காக இந்திய துரைத்தனத்தார் படையெடுத்துக் கைபரென்னும் கணவாயைக் கடந்துபோய் முதலில் ஆலிமஸ்ஜீத் என்னும் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்களை எதிர்ப்பார்மட்டும் ஒருவருமில்லை. அங்கிலேயர் படையெடுத்துவருகிற செய்திகேட்டு ஷியர் ஆலிபகாராவுக்கு ஓடிப்போய்விட்டார். அங்கிலேயர் எந்தப்புறம் போனாலும் அத்தேசத்தார் எல்லாரும் சந்தோஷமாய் அவர்களுக்கு இடம்விடுகிறார்களேயன்றி எதிர்த்துவருவார் ஒருவருமில்லை. நல்லரசாட்சியை அனுபவிக்கும்படியான நாள் வந்ததென்று குடிகளெல்லாம் களித்துநிற்பதுபோல் காண்கிறது. அங்கிலேயர் அத்தேசத்தில் முக்கியமான சில பட்டணங்களுக்கு ஒன்றுக்கொன்று சமாசாரம் சுலபமாய்ப் போய்வரும்படி மின் தபால் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அத்தேசத்தைத் தாங்களே

கைப்பற்றவேண்டுமென்கிற கருத்து அவர்களுக்கு இல்லை. இப்பே... வது ஷியர்ஆலி திரும்பிச் சமாதானமாய் வந்தால் அவனையே அரசனுக்... வைக்க நினைத்திருக்கிறார்கள். இப்படியிருக்க ஹிராத் கவர்னரான யாகூப் கான் அடங்கி அங்கிலேயருடன் சமாதானம் செய்துகொள்ள ஜலலபாத்துக்கு வருகிறார். அதைப்பார்த்தால் யுத்தம் இவ்வளவோடு முடிந்ததுதானென்று தோன்றுகிறது. ஷியர்ஆலியைத் தள்ளி யாகூப்பை அரசனாக்கினால் குடிகள் ஏதாவது விகற்பமாய் நினைப்பார்களோ என்னவோவென்று அதுவும் ஒரு சந்தேகமாயிருக்கிறது. எப்படி முடியுமோ பார்க்கவேண்டும். இப்போது அங்கிலேயர் காந்தாரபுரிவரையில் போயிருக்கிறார்கள்.

பிரின்ஸெஸ் ஆலிஸ் சீமாட்டி காலஞ்சென்றது.—நமது மகாராணியாருடைய செல்வக்குமாரத்தியாயும், சிலநாளைக்குமுன் இத்தேசத்தில் நேர்ந்த பெரும் பஞ்சத்திற்காகச் சொந்தக் கைப்பொருள் கொடுத்து உதவினதுமன்றிப் பல கனவான்களுக்கும் சிபாரிசுசெய்து இத்தேசத்து எளிய குடிகளைக் காப்பாற்றின புண்ணியவதியாயுமிருந்த பிரின்ஸெஸ் ஆலிஸ் என்னும் சீமாட்டி பரலோகஞ்சென்றாள். இது நமது துர்ப்பாக்கியமேயொழிய வேறல்ல; இதைவிட நமக்குத் துக்ககரமானசெய்தி வேறென்ன?

நடுக்கடலில் ஓர் எண்ணெய்க்கிணறு.—சாந்த மகாசமுத்திரத்திலுள்ள பல விசித்திரங்களுள் யாவரும் கேட்டு மிகவும் அதிசயிக்கத்தக்கதாய் காலிபோர்னியாவைச்சேர்ந்த பாகத்தில் அந்த சமுத்திரத்திலே சுமார் அறுபது கஜம் ஆழத்தில் எண்ணெய்க்கிணறொன்று இருக்கின்றது. அதினின்றும் எண்ணெய் ஓயாமல் சுரந்து கடலில் பாய்ந்துகொண்டேயிருக்கிறது. அவ்விடங்களில் சமுத்திரத்திலே சூரியன் பிரகாசிக்கிறபோது தண்ணீரில் இந்திரதனுசுபோட்டதுபோல் பலவர்ணமும் பிரதிபலித்துத் தோன்றுவதைப் பார்க்க வெகு அற்புதமாயிருக்கும்.

சுதேச மன்னருதவி.—இந்தியாவிலுள்ள சிற்றரசர்கள் இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு யுத்தம் நடாத்துவதில் பொருளாலும் சைனியத்தாலும் உதவிசெய்ய ஆயத்தப்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. காச்மீரமகாராஜா 10,000 போர்வீரரை வேண்டுமானபோது கொடுப்பதாய் வாக்குத்தத்தம் செய்தாராம். ஹைதராபாத்து பெரிய மந்திரி ஸர் ஸாலர்ஜங்கு தம்முடைய பொக்கஷத்தையும் ராணுவங்களையும் இங்கிலீஷ்காரருக்கு ஒப்படைத்துப்போட்டுத் தேவையானபோது உபயோகித்துக்கொள்ளச்சொன்னார். ஆல்வார் ராஜா 200 ஒட்டகங்களும் சேனையும் கொடுக்கச் சம்மதித்ததை அங்கிலேய துரைத்தனத்தார் அன்போடு ஏற்றுக்கொண்டு அவ்வொட்டைகளை லாகூருக்கு அனுப்பியிருக்கிறார்கள். போபல் ராணியார் தம்முடைய சேனையைத் துரைத்தனத்தார் இஷ்டப்படி நடத்தலாமென்று பிரசித்தப்படுத்தியிருக்கிறார். லாகூர் ராஜா ஒரு பட்டாளம் சேனைகொடுக்கச் சித்தமாயிருக்கிறார். சிந்து, பகல்பூர்முதலிய தேசத்துச் சிற்றரசர்களும் தங்களால் இயன்றமட்டும் உதவிசெய்யச் சித்தமாயிருப்பதாய் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள்.

Printed at the C. K. S. Press.